www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**சாக்கடைச்சுகம்!**

காக்கைக் குவப்பதெல்லாம் பிணமென்றால் காமிவிக்கோ
போக்கிடமே ஷேமாவாய்ப் போயிற்று - சாக்கடையை
விட்டெழுந்து வந்தாரின் வேண்டுமென்றே போய் விழுந்தார்
முட்டியதோ நெஞ்சுக்குள் மூச்சு?

– ஈழமோகம்

இதழ் 57 | ஒக்-13-ஒக்-26, 1994 | விலை 7.00

## பேசுவோர் தலைவிதியையும் தீர்மானிக்கப்போகும்

# பேச்சுவார்த்தை!

திட்டமிட்டபடி எதிர்வரும் 14ம் திகதி நாளை யாழ்ப்பாணத்தில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்க உள்ளன. விடுதலைப்புலிகளின் சார்பில் கரிகாலன், டொமினிக், ரவி, இளம்பருதி ஆகியோரும் அரசாங்கத்தின் சார்பில் முன்னாள் யாழ் அரசாங்க அதிபர் லயனல் பெர்ணான்டோ, இலங்கை வங்கித் தலைவர் ராஜன் ஆசீர்வாதம், பிரதமரின் செயலாளர் பால பட்டபந்தி, நவீன் குணரத்தன ஆகியோரும் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்கின்றனர். யுத்தநிறுத்தம் சம்பந்தமான ஒரு முடிவும் எடுக்கப்படாத நிலையில் தொடங்கும் இந்தப்பேச்சுவார்த்தை தொடர்பாக இருதரப்பாரது முயற்சியையும் பாராட்டும் அதேவேளை இவர்கள் பலத்த நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியும் உள்ளது என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தெற்கில் இருக்கும் இனவாத அரசியல் சக்திகளும், இராணுவவாதிகளும் வடக்கு கிழக்கு இணைப்பு, அதிகாரப்பகிர்வு, இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை எவ்வாறு கையளிப்பது என்பன தொடர்பாக பலத்த எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர் என்றும் ''இவ்வளவு காலமும் எமது வீர இராணுவத்தினர் தமது உயிரைக் கொடுத்து மீட்பித்த பூமியை சமாதானத்தின் பெயரால் மீளவும் ப்யங்கரவாதிகளிடம் கையளிப்பது மாபெரும் துரோகமாகும்'' என்பது இராணுவவாதிகள் மத்தியில் பலமாக நிலவும் அபிப்பிராயமாகும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேவேளை, அரசியல்ரீதியாக தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடியதல்லாத எத்தகைய அரைகுறையான அரசியல் தீர்வுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முழுமையான ஆதரவைப் பெற்றுவிட முடியாது என்றும் ''புலிகளின் தலைவர் உடன்பட்டால் கூட ஒரு ஸ்தாபனம் என்ற வகையில் ஏனைய புலிகளும் இத்தகைய தீர்வுக்கு இணங்கி வருவார்களா என்பது சந்தேகமே'' என்றும் புலிகளின் வட்டாரங்களை மேற்கோள் காட்டி அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பேச்சுவார்த்தை மூலம் காணப்படும் தீர்வு யுத்தத்தினால் வீர மரணம் அடைந்த போராளிகளது ஆத்மாவை சாந்தியடையச் செய்வதாக அமைய வேண்டும் என்ற கருத்து புலிகளின் மத்தியில் பலமாக உள்ளது என்றும் அண்மையில் 12 புலிகளை புலிகளின் உளவுத்துறையினர் கைது செய்தது இப்பேச்சுவார்த்தை தொடர்பான கருத்துமாறுபாட்டை ஒட்டியே என்றும் இவ் அரசியல் அவதானிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

''மண்ணெண்ணைக்கும், பற்றரிக்கும், பாதைக்குமாகவா என்ரை பிள்ளையை நான் பலி கொடுத்தேன்'' என்று தமது பிள்ளைகளை பலிகொடுத்த போராளிகள் குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோர் புலிகளிடம் கேட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே இந்தப் பின்னணியில் பொறுப்புணர்வு, நிதானம், வெளிப்படையான அணுகுமுறை ஆகியன இருதரப்பாரிடமும் இருக்க வேண்டும் என்றும் திறந்த மனதுடன் இனப்பிரச்சினையின் மூலவேரை இனங்கண்டு அதற்கு தீர்வு காணும் நோக்குடன் முயற்சி செய்தால் மட்டுமே எடுக்கப்போகும் ஒரு தீர்வுக்கு இருதரப்பு மக்களதும் அங்கீகாரத்தைப் பெறமுடியும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். முழுநாட்டிற்கும் நிம்மதியைக் கொண்டு வரக்கூடிய ஒரு நிலைமை இதன் மூலமே சாத்தியம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட இருதரப்பாரும் அவதானமாக இருப்பார்களா?




## 'பழைய குருடி கதவைத்திறவடி'!

புதிய அரசாங்கம் ஆட்சிபீடமேறி சில மாதங்கள் கழிந்த நிலையில் மட்டக்களப்பில் இராணுவ செயற்பாடுகளில் பல முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. கடந்த பல மாதங்களாக சுமுகமாக இருந்த நிலைமைகள் அனைத்தும் திடீரென மாற்றமடைந்துள்ளன. புதிய இராணுவ முகாம்களை நிறுவுவதும், இருக்கும் இராணுவ முகாம்களை விஸ்தரிக்கும் செயற்பாடுகளும் பாரிய அளவில் நடைபெறுகின்றன.

மட்டக்களப்பில் இதுவரை செயற்பட்டுவந்து கடந்த பல மாதங்களாக மூடப்பட்டிருந்த சோதனைச் சாவடிகள் அனைத்தும் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளன. மட்டக்களப்பு நகருக்குள் பிரவேசிக்கும் வழியில் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குள் மூன்று சோதனைச் சாவடிகளில் இன்று பொதுமக்கள் சோதனை என்ற பெயரில் மிகவும் அலைக்கழிக்கப்படுகின்றனர். இது மட்டுமல்லாமல் சிறிதுகாலம் நடைபெறாமல் இருந்த சுற்றிவளைப்புக்கள், கைது செய்தல் என்பன மீண்டும் நடைபெறத் தொடங்கியுள்ளன. ஒவ்வொருநாளும் மட்டக்களப்பில் ஏதாவது ஒரு கிராமம் இன்று சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல்கள் நடாத்தப்படுகின்றன. இரவில் 7 மணிக்குப் பின்பு வெளியே செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் கடந்த 10 ஆண்டு காலமாக இருக்கும் மிகப் பெரிய இராணுவ முகாம் கல்லடி இராணுவமுகாம் ஆகும். இம்முகாம் தற்போது மேலும் விஸ்தரிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது உள்ள இராணுவ முகாமுக்குள் அகப்பட்டது போக மீதமாக இருந்த விவசாயத் திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடங்களும் பறிக்கப்பட்டிருக்கின்றன. இராணுவ முகாமின் எல்லையை விபுலானந்த வீதிவரை விஸ்தரிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ் இராணுவ முகாம் அனைத்து வசதிகளையும் கொண்ட இராணுவ முகாமாக இருக்கின்றது. அத்தோடு இது ஒரு இராணுவ பயிற்சி முகாமாகவும் செயற்பட்டு வருகின்றது. கடற்கரையை அண்மித்து இம்முகாம் அமைந்துள்ள காரணத்தினால் போக்குவரத்துரீதியாகவும், பாதுகாப்பு ரீதியாகவும் அதிகவசதிகளைக் கொண்ட இராணுவ முகாமாக இது இன்று உள்ளது. இந்நிலையில் இவ் இராணுவ முகாம் விஸ்தரிப்பு மட்டக்களப்பில் நிரந்தர இராணுவத்தளத்தை அமைப்பதையும், ஒரே சமயத்தில் பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரைக் குவித்து வைத்திருப்பதையும் அடிப்படையாகக் கொண்டே நடைபெறுகின்றது.

செட்டிப்பாளையம், ஆரையம்பதி, கோட்டைமுனை, கும்புறுமூலை, டிப்போவுக்கு முன்புறம் ஆகிய இடங்களில் படையினர் திரும்பவும் காவலரண்களை புதுப்பித்து பயணிகளை இறக்கி அடையாள அட்டை கேட்டு சோதனையிடுகிறார்கள்.

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சரிநிகர்
4,ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 593615

# பிரகாசமான இருட்டு!

ஏறத்தாழ நான்கு வருடங்களின்பின் மீண்டும் அரசுக்கும் புலிகளுக்குமிடையேயான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின்றன.

இப்பத்திரிகை வெளியாகிற போது புலிகளுடன் பேசுவதற்காக யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டிருப்பார்கள் அரச பிரதிநிதிகள்.

பொதுஜன முன்னணி தேர்தல் பிரச்சாரத்தின் போது குறிப்பிட்டபடி யுத்தத்தை நிறுத்தவும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவுமான வழிமுறையில் முதல் காலடியை எடுத்து வைத்துள்ளதாகச் சொல்கிறார்கள் ஜனநாயகவாதிகள்.

சந்திரிகா ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிற்பாடு வழங்கிய உரையில் குறிப்பிட்டது போல் ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம் அற்ற, ஜனநாயகமும் மனிதத்துவமும் சமாதானமும் மிகுந்த ஆட்சியை உருவாக்குவதற்கான முனைப்பின் முதற்கட்ட நடவடிக்கை தான் இவை என்பது இவர்களது அபிப்பிராயம்.

புதிய அரசு பதவி ஏற்றதுடன் வடக்கிற்கான பொருளாதாரத் தடையைத் தளர்த்தியதும் வடக்கு மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய வசதிகளை வழங்குவதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாக அரசு தரப்பு அமைச்சர்கள் அடிக்கடி அறிவிப்பதும்,

மன்னார் கடலில் புலிகள் சாகரவர்த்தன என்ற கப்பலைத் தகர்த்த போதும், வெற்றிலைக் கேணி கடலில் ஓசன் றேடர் என்ற கப்பலைத் தகர்த்த பின்னரும், ''இத்தாக்குதல்கள் சமாதான நடவடிக்கைகளையோ அல்லது அரசு புலிகளுடன் பேசுவதையோ ஒருபோதும் பாதிக்காது'' என்று அரசு தரப்பில் இருந்து தொடர்ந்து அறிவிக்கப்பட்டு வருவதும், கடந்த இரண்டு தசாப்தங்களாக தொடர்ச்சியாக மரணத்தில் வாழ்ந்து வரும் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதில் வியப்பில்லை. அவர்கள் ஒளிமயமான, பிரகாசமான ஒரு எதிர்காலத்தையிட்டு தமது நம்பிக்கைகளை வளர்த்துச் செல்வது இயல்பானதே.

ஆனால் எமக்கு முன்னால் உள்ள நான்கு தசாப்தகால வரலாறும், இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகளும், தீர்வுகளும் இந்த நம்பிக்கையை கேள்விக்குள்ளாக்கி அதன் முன்னால் கேள்விக்குறிகளாக விஸ்வரூபமெடுத்து நிற்கின்றன.

அரசதரப்பினரது யாழ் விஜயம், புலிகளுடன் பேச்சு, புலிகளும் கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் யுத்தநிறுத்தம், சமாதானம், இனப்பிரச்சினை தீர்வு என்கிற மாதிரியான இலகுவான சூத்திரமும்,

மொழிப்பிரச்சினை, வேலைவாய்ப்பில் பாரபட்சம், தேவையற்ற கைதுகள் என்றவாறான தோற்றப்பாடுகளை மட்டுமே இனப்பிரச்சினையின் அடிப்படைகளாக காண விளைகிற தவறும் ஒருபோதும் பிரச்சினையின் நிரந்தரத் தீர்வுக்கு வழிகோலப் போவதில்லை.

மறுபுறத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டத்திலிருந்து கிடைக்கிற செய்திகள் சமாதானத்தை விரும்பும் எவருக்கும் மகிழ்ச்சி தரக்கூடியதாக இல்லை. மட்டக்களப்பில் அரச படை முகாம்கள் விஸ்தரிக்கப்படுவதாகவும், மேலும் புதிய முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும், மட்டக்களப்பிலும், திருமலையிலும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்வதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே கடந்த பேச்சுவார்த்தைக் காலங்களைப் போன்று ''அரசு - புலிகளுடன் பேச்சுகளில் திருப்திகரமான முன்னேற்றம்'' என்றவாறான வெற்று அறிக்கைகள் பின்னர் யுத்தத்தை தான் மீள்வித்தன என்பதுவும் நம் வரலாறு.

யுத்தத்தை நிறுத்துவதற்கும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் ஆக்கபூர்வமான வழிகளில் அரசு இறங்க வேண்டும்.

யுத்தநிறுத்தம் என்பது ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்கும், இருதரப்பினரும் மீளவும் ஒரு யுத்தத்திற்கான தயார்படுத்தலை மேற்கொள்வதற்குமான கால அவகாசமாக மாறக்கூடாது.

நிரந்தரமான தீர்வுக்காக இன்றுவரையான அரசுகள் என்ன முயற்சிகளை மேற்கொண்டன என்பது இன்னமும் வெறும் கேள்வியாகவே உள்ளன.

இந்தக் கேள்வி தொடரும் வரை இப்போதிருக்கின்ற நிலைமை இருட்டுத்தான்.

வேண்டுமானால் 'பிரகாசமான இருட்டு' என்று சொல்லிக் கொள்ளலாம்!

# கருத்து சுதந்திரம் என்ற பெயரில்

# கம்யூனிஸ எதிர்ப்பா?

சரிநிகரின் கொள்கை என்ன? யாருக்கு இப்பத்திரிகை? தேர்தல் முறைகளை நிராகரிக்கும் உங்கள் வழி என்ன? தேர்தல் வழி தவறானது எனின் உங்கள் வழியை முன்வைக்காது ஏன் சந்தர்ப்பவாதம் கொண்டவர்களாக உள்ளீர்கள்?

சரிநிகர் கருத்துச் சுதந்திரத்துக்கு பாய் விரித்துள்ளது. அதில் சாதியை ஆதரித்தும், பெண்ணடிமைத்தனத்தை ஆதரித்தும், சுரண்டலை ஆதரித்தும், இத்தேர்தல்முறையை ஆதரித்தும் இனவாதத்தை ஆதரித்தும் எழுதுகிறீர்கள். இவ்வாறுதான் கருத்துச் சுதந்திரத்தைப் பேணவேண்டும் எனின் உங்களுக்கும் இந்தத் தேர்தலை ஏற்றுக் கொள்பவர்களுக்கும் என்ன வேறுபாடு? எதுவுமே இல்லை. எல்லாம் ஒன்றே!

உயர்த்தியபடி அதை நியாயப்படுத்த சிலரை அழைக்கின்றார்.

இவை தொடர்பாக சில விவாதம் நடைபெறுவதாகக் கூறி- மார்க்சிய விரோதிகள் விவாதிப்பதுதானே- சிவத்தம்பியை கூட்டுக்கு அழைக்கின்றார்.

சிவத்தம்பி ஆணாதிக்கவாதியா? எனக்கேட்டு சிவத்தம்பியை ஒரு புரட்சியாளராக சிபார்சு செய்கின்றார். சிவத்தம்பி ஒரு பேராசிரியராக ஒரு மாணவருக்கு இருக்கமுடியுமே ஒழிய பெண்விடுதலையின் தலைவராக இருக்க எந்த தகுதியும் அற்றவர் அல்லவா அவர். பெண் ஒடுக்குறை இச்சமூக அமைப்புக்குள் புரையுண்டுள்ள ஒரு சகதியே! இதை மாற்ற முனையும் ஒவ்வொருவரும் இச்சமூக அமைப்பை மாற்ற முனைந்தவர் ஆவார்.

கத்தில் பங்கு ஏற்றுவதாக ஜவ்பார் வாதிட முனைவதன் நோக்கம் விளம்பரமும் வியாபார நோக்கமுமே. இந்தியா ருடேயின் அரசியல் இந்திய தரகு முதலாளிகளையும் நிலப்பிரபுக்களையும் பாதுகாப்பதே. அத்துடன் ஏகாதிபத்தியத்தை பாதுகாப்பதுமே.

அண்மையில் இந்தியா ருடே ''டங்கல்'' திட்டத்தை ஆதரித்ததும் ''காட்'' ஒப்பந்தத்தை ஆதரித்ததும் தெரிந்ததே. இந்தியாவை மறுகாலனியாக்க தன்னால் முடிந்தளவு முயல்கின்றது. ஏகாதிபத்திய பொருளாதாரத்துக்கு கதவுகளைத் திறப்பதை ஆதரித்தும் அதை எதிர்ப்பவர்களைக் கடுமையாகத் தாக்கி வரும் ஏகாதிபத்திய விசுவாச பத்திரிகையாக இந்தி ருடே. பீகாரில்மாவோயிச கம்யூனிசமையம் இந்தியப் புரட்சிக்காகப்





சரிநிகர் பத்தோடு பதினோராவது பத்திரிகையாக சீரழிந்து செல்கிறது. ஓர் உறுதியான கருத்து இல்லை. எல்லாவகையான கருத்துக்கும் தலையாட்டி சந்தர்ப்பவாதமாக நீடிக்க, தம்து இருப்பை பேண முனைகின்றனர். அனைத்து வகை பிழைப்புவாத பாராளுமன்ற அரசியல் கட்சிகள் போல் கொள்கையற்ற அனைத்து வகைக் கருத்துக்களுக்கும் கருத்துச்சுதந்திரத்தின் பேரால் களம் அமைக்க முனைகின்றனர்.

இனி சரிநிகர் 51இல் அ.டேவிட் நந்தகுமார் இரண்டு வாசகர்களுக்கு பதில் கூறியுள்ளார். வாசகர்கள் ஆணாதிக்கத்திற்கு எதிராகவும், சாதி ஒடுக்குமுறைக்கெதிராகவும் உள்ள ஒரு நிலையில் சரிநிகரை அந்தக் கண்ணோட்டத்தில் எதிர்பார்த்து எழுதியுள்ளனர். அவர்கள் சரிநிகருக்கு கொள்கை இல்லையென்பதைக் காணத்தவறியதுடன் ஒருவித அங்கலாய்ப்புடன் சம்பந்தப்பட்ட நபர் மீது விமர்சனம் வைக்க முனைந்தனர்.

அ.டேவிட் தனது நிலையில் நியாயப்படுத்த முனைந்து நிற்கின்றார். தனது 13, 14வயது நிலையில் நடந்தவை எனக் கூறியதுடன் தான் தற்போது அரசியலில் முன்னேற்றம் பெற்றுள்ளதாகக் கூறி அதைக் கட்டுரையில் இறுதியில் காணும்படி கூறியபடி கலை கலைக்காக என்ற கோட்பாட்டை உயர்த்தி நிற்கின்றார்.

கலையின் தன்மை அதன் கலாபூர்வமான இயக்கம், ஆணாதிக்கம், சாதி ஒடுக்குமுறையின் பண்பை கட்டுரையில் நீக்குவதால் இழந்துவிடும் என நியாயப்படுத்தி கலை கலைக்காக என்ற கோட்பாட்டை

அ.டேவிட் சிவத்தம்பியை பெண் விடுதலையின் போராளியாக சிபார்சு செய்ய என்ன ஆதாரத்தை முன்வைக்க முடியும். விஜிதரன் போராட்டத்தை முறியடித்து புலிகளைப் பாதுகாத்தது மட்டுமின்றி 1988களில் இந்திய இராணுவத்தின் வருகையுடன் புலிகளின் பலத்தை மேம்படுத்த புலிசார்பு நாடகங்களை போட முனைந்தது முதல், அண்மையில் டென்மார்க் வந்த சிவத்தம்பி அகதிக்கு எனச் சேர்த்த பணத்தை புலிகளிடம் ஒப்படைக்க மாட்டேன் என வாங்கிச் சென்று புலியிடம் ஒப்படைத்தது வரையாக சிவத்தம்பியின் அரசியல் புலி அரசியலே. இப்படிப்பல. அப்படியிருக்க சிவத்தம்பி பெண்விடுதலைவாதியெனின் புலிகளும் பெண்விடுதலையின் தலைவர்கள் தானா? அ.டேவிட் தன்னையறியாமல் இக்கட்டுரையில் சொற்பிரயோக திறனை பயன்படுத்தியிருக்கலாம். தவறுகளை சுட்டிக்காட்டும் போது அதை ஏற்க வேண்டும். வாசகர்களின் உணர்வுகளுக்கு அமைய கட்டுரையை அமைக்க முனைய வேண்டும். இல்லாது தனது கலைத்தன்மையை நியாயப்படுத்தின் கலை கலைக்காகவே என்ற நிலையை தக்க வைக்கவே முயல்வதாகும்.

அடுத்து எம்.எச்.எம்.ஜவ்பார் எழுதிய வாசகர் கடிதம் தொடர்பாக சூரியா எழுதிய கருத்துக்களில் முரண்பாடுகள் இருந்தபோதும் சரிநிகரின் கருத்துச் சுதந்திரம் என்ற போலியில் இந்தியா ருடேக்கு விளம்பரமும் முற்போக்குப் பாத்திரத்தையும் நியாயப்படுத்த முனைந்துள்ளது.

இந்தியா ருடே முற்போக்காக சமூ

போராடுவதும், மக்களை அணிதிரட்டி ஆயுதப் புரட்சியில் முன்னேறுவதையும் கண்டு வெகுண்ட இந்திய ருடே கம்யூனிச அபாயத்திற்கு எதிராகப் போராட அழைத்து ஏகாதிபத்திய விசுவாசத்தைப் பேண அறைகூவியது இந்தியா ருடே பற்றி இப்படிப்பலவற்றைக் கூறமுடியும்.

அடுத்தது சபாலிங்கம் கொலை தொடர்பாக சேரன் எழுதிய கட்டுரை கம்யூனிச எதிர்ப்பாக வரையப்பட்டுள்ளது. இச் சேரன்தான் சரிநிகரின் பிரதான ஆசிரியர் என நினைக்கிறேன். அப்படியாயின் சரிநிகர் கம்யூனிச எதிர்ப்புப் பத்திரிகையா? கம்யூனிச எதிர்ப்பின் மூலம் ஸ்ராலின், பொல்பொட் போன்றோரை சர்வாதிகாரிகள் என ஹிட்லருடன் ஒப்பிட்டது ஒரு புறம் இருக்க சுத்தியல் என தனியாகக் குறிப்பிட்டு தனது கம்யூனிச வெறுப்பைக் காட்டிக் கொண்டார். அரிவாளும் சுத்தியலும் கம்யூனிசத்தின் குறிப்பிடத்தக்க ஒரு முக்கிய சின்னம். அதன்மேல் சேரனின் வெறுப்பு எதற்கு? எல்லாம் கம்யூனிச எதிர்ப்பே.


வாழ்க சரிநிகரின் கருத்துச் சுதந்திரம். சரிநிகரின் அரசியல், மாற்று அரசியல் வழியல்ல எல்லாம் இச்சமூக அமைப்புக்குள் சுற்றிச் சுழன்றபடி கருத்துச் சுதந்திரம் பற்றி வரையறையை நிர்ணயிக்க விடுகின்றது.

சுதா
பிரான்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# காமினியா சந்திரிகாவா என்பதல்ல கேள்வி!



இந்தப் பத்தியை எழுத உட்காரும்போது வெற்றிலைக்கேணியில் சரக்குக் கப்பல் ஒன்று தகர்க்கப்பட்ட செய்தி வந்து சேர்ந்திருக்கிறது. 'ஓசன் டிரேடர்' என்று அழைக்கப்படும் தனியாருக்கு சொந்தமானதும், அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தால் யாழ் குடாநாட்டுக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல பயன்படுத்தப்பட்டு வந்ததுமான இக்கப்பல், இராணுவ கடற்படை பாதுகாப்பு எதுவுமின்றி பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையிலேயே இத்தாக்குதல் நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கப்பலின் சிப்பந்திகள் மற்றும் மாலுமிகள் எவரும் எந்தவித உயிராபத்துமின்றி பாதுகாக்கப்பட்டு விட்டதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசார கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு விட்ட நிலையில், நாட்டில் சமாதானத்தை கொண்டு வருவதற்கான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகட்கான நாட்குறிக்கப்பட்டும் விட்ட நிலையில் இவ்வகையானதொரு சம்பவம் நடந்திருப்பது, அரசுதரப்பிற்கு அரசியல்ரீதியான நெருக்கடியை தரக்கூடும் என்ற சந்தேகம் எழுதுவதில். நியாயமில்லாமல் இல்லை.

பொதுசன ஐ.முன்னணி அரசு ஆட்சிக்கு வந்தபின் நடாத்தப்பட்ட இரண்டாவது பெரிய கப்பல் தகர்ப்பு நடவடிக்கை இதுவாகும். மன்னார்க் கடலில் 'சாகரவர்தன கப்பல் ஏற்கனவே தகர்க்கப்பட்டிருந்தது. அத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக தெற்கில் எழுந்த உணர்வலைகளை புதிய அரசாங்கம் சாமர்த்தியமாக அடக்கிவிட்டதுபோல இப்போது நடந்துள்ள இந்த ஓசன் றேடர் தாக்குதல் நடவடிக்கை ஏற்படுத்தக் கூடிய உணர்வலைகளையும், 'யுத்த நிறுத்தம் ஏற்படாத சூழலில் இவை சாத்தியமே' என்று சமாளித்து விடக் கூடும். ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் நடைபெறப்போகும் பிரச்சாரமாரியில் இத்தகைய சம்பவங்களை எவ்வளவு காலத்துக்கு 'சமாளிக்க' முடியும் என்பது கேள்விக்குறியே.

பொதுசன ஐக்கிய முன்னணி, ஐ.தே.க. அரசை எதிர்த்து முன்வைத்த கொள்கைப்பிரகடனம் அல்லது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்த முக்கியமான அம்சங்கள் இரண்டு. ஒன்று வடக்கு கிழக்கில் நிலவும் இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருவது. மற்றையது ஊழல், லஞ்சம் மற்றும் ஜனநாயக விரோத நடைமுறைகள் என்பவற்றை இல்லாதொழிப்பது. ஐ.தே.க. தனது 17 வருட கால ஆட்சியின் போது வடக்கு கிழக்கிற்கு எதிரான யுத்தப் பிகரடனத்தை (இடையில் ஒரு 14 மாத கால இடைவெளி இருந்தது) தொடர்ந்து அமுல் செய்து வந்தது. பெரும்பாலான காலத்திற்கு அவசரகாலச் சட்டத்தின் கீழேயே அரசு இயங்கியது. அதிகார துஷ்பிரயோகம், லஞ்சம், ஊழல், படுகொலைகள் அனைத்துக்கும் வாய்ப்பளித்ததும், அனைத்து தொழிற் சங்க, ஜனநாயக உரிமைகளையும் நசுக்கியதும், அரசியல் இராணுவக் குழுக்கள், சதிக்குழுக்கள் போன்றவற்றை இயங்க அனுமதித்ததும் இந்த அவசரகாலச் சட்டத்தினைப் பயன்படுத்தி இவற்றை இல்லாது செய்வதும், இத்தகைய நிலைமைகளால் மக்கள் பாதிக்கப்படாதிருப்பதற்கான உத்தவாதங்களை அரசியலமைப்புரீதியில் வழங்குவதுமே பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் தேர்தல்கால பிரதான அரசியல் முழக்கங்களாக அமைந்திருந்தன.

ஐ.தே.கட்சியை ஆட்சியிலிருந்து அகற்றுவதில் பிரதான பங்காற்றியவை இவை இரண்டுமே. இன்னும் சரியாகச் சொல்வதானால், இனப்பிரச்சினைக்கான தீர்வை விட ஜனநாயக மறுப்பு, படுகொலைக் கலாசாரம் என்பவற்றுக்கு எதிரான பொ.ஐ.முவின் நிலைப்பாடே பிரதான பங்காற்றியது எனலாம்.

ஆட்சிக்கு வந்தபின் புதிய அரசு தொடர்ந்து செய்துவரும் புதைகுழி தோண்டல் நடவடிக்கைகள், லஞ்சம் என்பவற்றுக்கு எதிரான சட்டமூலத்தை கொண்டு வந்தது, ரூபவாஹினி, வானொலி ஆகியவற்றில் ஒருவகை தாராளமயத்தன்மையை உருவாக்கியது என்பவை பொ.ஐ.மு அரசு கொடுத்த வாக்குறுதிக்கேற்ப இயங்குவதற்கான சான்றுகளாக உள்ளன.

ஆனால், ஜனநாயகத்தைக் கொண்டு வருவதும், மக்களது உரிமைகளுக்குப் பாதுகாப்பளிப்பதும் மட்டுமே ஒரு கட்சிக்கு அதிகாரத்தை தொடர்ந்து பேணப் போதுமானதென்று அரசாங்கம் கருதுமானால் அது அதற்கு மிகவும் ஆபத்தாகவே போகப் போகிறது என்பதற்கான அறிகுறிகள் இப்போதே தெரிய ஆரம்பித்துவிட்டன.

ஐ.தே.கவின் 17வருட கால அரசியல் நடைமுறையை விமர்சித்து, அதற்கெதிரான மக்களது அலையெழுச்சியின் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றியது ஒன்றும் கடினமானதல்ல. ஆனால் அதே வேறுபாட்டை, ஐ.தே.கவுக்கும் பொ.ஐ.முவுக்குமான தீர்க்கமான வேறுபாட்டை தொடர்ந்து பேணுவதுதான் அதைவிடக் கடினமானது. அத்துடன், அப்படிப் பேணுவதில்தான், பொ.ஐ.முவின் எதிர்காலமே தங்கி இருக்கிறது.

ஏனென்றால், ஐ.தே.கவினரின் புதிய யுத்ததந்திரம் பொ.ஐ.முவின் அரசியல் ஜனநாயக உரிமைக் குரல்களை ஏற்றுக் கொள்வதுடன்

**நாசமறுப்பான்**

அதற்கு முற்றுமுழுதான ஆதரவையும் கொடுப்பதாகும். உதாரணமாக, கடந்த பாராளுமன்ற அமர்வில் கொண்டு வரப்பட்ட ஊழல் கமிசன் சட்டமூலம் ஐ.தே.கவின் முழுமையான ஆதரவுடனேயே நிறைவேற்றப்பட்டிருக்கிறதை சொல்லலாம். மக்களது ஆதரவு பெற்ற சட்டமூலங்களை முழுமனத்தோடு ஆதரிப்பதும், பொ.ஐ.முவின் தேர்தல் பிரகடனங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த நிர்ப்பந்திப்பதும் ஆகிய நடைமுறைகளினூடாக ஐ.தே.கவினர் தாம் மக்களுடைய நலன்களுக்கு எதிராக செயற்பட மாட்டோம் என்ற ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்த விரும்புகிறார்கள். பாராளுமன்ற முறைக்கு திரும்புவது - ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது என்று கூறிய பொ.ஐ.மு, ஆட்சிக்கு வந்ததும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு ஐ.தே.க முழு ஆதரவும் தருவதாக அறிவித்தது. ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் விடுவதன் மூலமாக கோடிக் கணக்கான ரூபாய்களை மீதப்படுத்தலாம் எனவும் அறிவித்தது. ஆயினும் பொ.ஐ.முயால் அதைச் செய்ய முடியவில்லை.

ஆக, பொ.ஐ.மு, எதிர்கட்சியான ஐ.தே.கவுக்கு முன்னால் அரசியல் ரீதியான முன் முயற்சியை இழப்பதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

திறந்த பொருளாதார கொள்கையை நடைமுறைக்கு கொண்டு வந்து, கடந்த 17 ஆண்டு காலமாக அதை தண்ணீரூற்றி வளர்த்தும் விட்ட பின் ஐ.தே.கவுக்கு இவ்வளவு காலம் செய்து வந்த தீவிர மனிதப்படுகொலை மற்றும் ஜனநாயக மறுப்பை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய அவ்சியம் குறைந்து போயுள்ளதெனலாம்.

தவிரவும் தற்போதைய கட்சித் தலைவர் காமினி, பிரேமதாச ஆட்சியை எதிர்த்து வெளியேறியவர் என்ற முறையில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் (1991 - 1992) இலங்கையின் ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் முயற்சியில் இறங்கிய ஜனநாயகவாதிகளுக்கு தலைமை தாங்கியவர் என்றும் பெயரையும் கொண்டவர். காமினி - லலித் உடைவுக்குப் பின்னர்தான், ஸ்ரீ.ல.சு.கட்சி கூட ஒரு பலமான ஜனநாயக இயக்கத்தை நடாத்த முன்வந்தது. எனவே ஜனநாயக கோட்பாடுகள் மற்றும் புதைகுழி தகவல்கள் (அவை தோண்டப்படுவதும் உண்மைகள் வெளிக் கொணரப்படுவதும் அவசியம்தான் என்றபோதும்) நீண்டகாலத்துக்கு புதிய -காமினி தலைமையிலான ஐ.தே.கவுக்கு அரசியல் நெருக்கடியைத் தரும் என எதிர்பார்க்க முடியாது- அதனை மக்களிடமிருந்து தனிமைப்படுத்த போதுமானதென காணமுடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் குதித்திருக்கும் சந்திரிகா குமாரணதுங்கவின் இன்றைய செல்வாக்கும் ஐ.தே.கவின் கடந்தகால ஜனநாயக விரோத நடவடிக்கைகளும் இந்தத் தேர்தலில் ஒரு வெற்றியை பெற்றுக் கொள்ள சந்திரிகாவுக்கு போதுமானவை.

ஆனால் அடுத்து வரப்போகும் காலங்களிலும் இதேநிலைமை நீடிப்பது என்பது பொ.ஐ.முவின் சமூக பொருளாதார அரசியற் கொள்கையின் வீரியத்தில் தான் தங்கியிருக்கப் போகிறது.

வடக்கு கிழக்கு இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை, அதை முடிவுக்கு கொண்டு வருவது என்பதைக் கூட வெறும் ஐ.தே.கவைத் தேர்தலில் தோற்கடிப்பதற்கான ஒரு முழக்கமாக மட்டும் கருத முடியாது. அத்தகைய ஒரு முயற்சி நீண்ட காலத்துக்கு வெற்றியைத் தரப்போவதில்லை. இன்றைய பொ.ஐ.மு. தரப்பில் இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வை விரும்பும் அனைவரிடமும் தெளிவாகத் தெரிகின்ற பலவீனம், புலிகளை சமாதானம் செய்வதே இப்பிரச்னைக்குத் தீர்வாகும் என்று கருதுவதாகும்.

உண்மையில், பொ.ஐ.முவின் சார்பாக இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக வாதாடுகின்ற புத்திஜீவிகள், மற்றும் அரச உயர்மட்டத்தவர்கள் எல்லோரும் இனப்பிரச்சினை பற்றி விளங்கிக் கொண்டிருப்பவை எல்லாம் இன்றைய தோற்றப்பாடுகளை மட்டுமே முழுமையானதெனக் கருதுவதாகும். சிங்கள மொழியில் தமிழருக்கு கடிதங்கள் அனுப்பப்படுவது போன்ற மொழிப் பிரச்சினையாகவும், அரச உத்தியோகங்களில் தமிழர்க்கு உரிய இடம் வழங்கப்படாமை போன்ற வேலைவாய்ப்புப் பிரச்சினையாகவும், உயர் கல்விக் கழகங்களில், தமிழ் மாணவர்களுக்கான வாய்ப்புக்கள் மறுக்கப்படுவது தொடர்பான கல்விப்பிரச்சினையாகவும் மற்றும் இன்னோரன்ன தோற்றப்பாடுகளிலினூடாகவும் மட்டுமே இனப்பிரச்சினையை இனங்காண்கின்றனர். உண்மையில், இவையெல்லாம் தோற்றப்பாடுகளே. ஆழமாக வேரோடியுள்ள இனப்பிளவின் காரணமாக மேற்பரப்பில் தோற்றங்காட்டும் அம்சங்களே இவை.

கடந்த ஐம்பது ஆண்டுகட்கு மேலான • வரலாற்று வளர்ச்சிக்கு நாட்டை இரு தேசங்களாக பிளவுபடுத்தி வைத்துள்ளதென்ற உண்மையை விளங்கிக் கொள்ளும்

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அதிகரித்து வரும் பீதி! இயல்பு நிலை சிதையுமா?

செயற்கையாகவேனும் இயல்பு நிலைக்குத் திரும்பியிருந்த மட்டக்களப்பு மாவட்டம் மீண்டும் அச்சமும் பீதியும் நிறைந்ததாக மாறி வருகின்றது.

செப்.27ம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 10.15 மணியளவில் காத்தான்குடியின் மேற்குப்புற ஆற்றங்கரையோர காவலரண் புலிகளினால் தாக்கப்பட்டது. இச்சம்பவத்தில் ஒரு முஸ்லீம் இராணுவ வீரர் உயிரிழந்தார். காவலில் ஈடுபட்டிருந்த ஏனைய இரு இராணுவ வீரர்களும் ஓடித் தப்பிச் சென்று விட்டதால் இறந்தவரின் இயந்திரத் துப்பாக்கியையும் புலிகள் எடுத்துச் சென்றிருந்தனர். மறு நாள் பகல் 12.00 மணியோடு காத்தான்குடி பஸாரிலுள்ள சகல கடைகளும் அடைக்கப்பட்டு வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

காத்தான்குடியில் தச்சர்கள், மேசன்களாக வேலை செய்யும் இரண்டாயிரத்திற்குமதிகமான தமிழ் தொழிலாளர்கள் வராததால் அன்றும் அடுத்த நாளும் நகர் வெறிச்சோடிப் போய்க் கிடந்தது.

28ம் திகதி புதன்கிழமை இரவு முழுக்க படுவான் கரைப் பக்கத்திலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்படும் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

30ம் திகதி வெள்ளிக்கிழமை கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலயத்திற்கருகிலுள்ள வீதியில் குண்டொன்று வெடித்த போது இராணுவத்தினரின் நீர் எடுத்துச் செல்லும் பவுசர்கள் சேதமாகின.

சனிக்கிழமை இரவு பத்துமணியிலிருந்து மட்டக்களப்பு வாவியை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதோடு ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றன. வாவிக்கரையில் இனந் தெரியாத வாலிபர்களின் நடமாட்டம் காணப்பட்டமையே இராணுவம் மேற்கொண்ட இத்தாக்குதலுக்கு காரணமென்று தெரிவிக்கப்படுகிறது. இத்தாக்குதலில் இராணுவ ஹெலி கொப்டர்களும் பங்கு பற்றின.

அடுத்தடுத்ததாக இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையிலான மோதல்கள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் சமூக நிலை சீர்குலைந்து வருகிறது. அது மட்டுமன்றி ''சென்றி''களும் பாதுகாப்பு நிலைகளும் இராணுவத்தினரால் மறுசீரமைக்கப்பட்டு பலப்படுத்தப்படுகின்றன. மட்டுநகரின் தெற்கு நுழைவாயிலுள்ள ''சென்றி'' பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டு வருகிறது. காத்தான்குடியிலும் ஏனைய இடங்களிலுமுள்ள பாதுகாப்பு நிலைகளில் மேலதிக இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். •

முன்னர் எப்போதுமில்லாத அளவு இரவுகளில் மாத்திரமன்றி பகல் வேளைகளிலும் தமிழ்ப் பிரதேசங்களுக்குள் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது. நல்லெண்ணங் கொண்ட சில தமிழர்கள் தமிழ் பிரதேசங்களுக்கும் வரும் முஸ்லீம்களிடம் புழங்குவதைக் குறைத்துக் கொள்ளும்படி ரகசியமாகக் கூறி வருகின்றனர்.

இடம் பெறும் சம்பவங்களையும் நிலைமைகளையும் கவனத்திற் கொள்ளும் போது வெளியில் அரசியல் தீர்வு அது இது என்று பேசிக் கொண்டாலும் புலிகளும் இராணுவமும் மறைமுகமாக பாரிய யுத்தமொன்றுக்குத் தயாராகி வருவது போலவே தென்படுகின்றன.

வழமையை விட அதிகமான இராணுவம் ரோந்துகளில் ஈடுபடுவதோடு சோதனைச் சாவடிகளிலும் கடுமையான சோதனைகள் இடம் பெறுகின்றன. இலேசாய் மறந்து போய்க் கொண்டிருந்த சுற்றிவளைப்புகள், காரணமில்லாத கைதுகள் மீண்டும் தலையெடுக்க ஆரம்பித்துள்ளன.

நடைபெறும் நிகழ்வுகள் 90ம் ஆண்டை ஞாபகப்படுத்துவதால், மக்களின் முகங்களில் எந்நேரத்திலும் எதுவும் நிகழலாம் என்ற பீதி மனோபாவம் தோன்றியுள்ளது தெரிகிறது.

இருதரப்பு ஆயுத பாணிகளும் தத்தமது எதிரிகளைச் சிதைப்பார்களோ இல்லையோ இம்மாவட்ட ஏழைச் சனங்களின் பிழைப்பில் மண் போடப் போகிறார்கள் என்பது மட்டும் நிச்சயம்!

— ரெஜீஸா

# அடுத்த இதழிலிருந்து சமுத்திரன் எழுதுகிறார்...

'எம்முடைய சோசலிசக் கருத்துகட்கு 75வருட கால வரலாறு இருக்கிறது. இலங்கையில் நாம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினூடாக சோவியத் யூனியனையும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினூடாக சீனப்புரட்சியையும் பார்க்கும் ஒரு வகை கண்ணோட்டத்திற்குப் பழகிப் போய் விட்டிருக்கிறோம். இதனால் இவற்றை தனித்தனியான பொருண்மைகளாக (objectives) ஆராயும் தன்மையை நாம் இழந்து விட்டிருக்கிறோம்...

'எங்களுக்கு உண்மையில் புதிய சிந்தனை தேவை. ஐ.தே.கவை அதன் திறந்த பொருளாதார கொள்கையை, 17வருடகால அதன் ஆட்சியை எல்லாம் ஒரே வரியில் நாம் நிராகரித்து விடலாம்; அதில் நியாயமும் உண்டு. ஆனால் இந்தப் பார்வையே அவற்றை ஒரு பொருண்மையான ஆராய்வுக்கு உட்படுத்தாமல் பண்ணிவிடக் கூடாது....

'அரசியல் தாராளவாதம், பொருளாதார தாராளவாதம் என்பவற்றோடு மூலதனக் குவிப்புக்கும், அதற்கெதிரான மக்களது எழுச்சிகளினால் வென்றெடுக்கப்பட்ட மக்களது வாழ்வியல் ஜனநாயக உரிமைகள் என்பவையும் ஏகாதிபத்திய பொருளாதாரவாதக் கோட்பாடுகள் என்று கூறி நிராகரிக்கப்படுவதால், அவற்றில் மக்கள் பெற்ற போராட்ட அனுபவங்கள் தொகுக்கப்படாமலே போகின்றன.

கட்டற்ற சந்தை ஏற்படுத்தும் உலக மூலதன குவிப்பை எதிர்க்கும் தொழிலாளர்களதும் மக்களதும் தொழிற்சங்க, சூழலியல், சமூக மற்றும் பெண்ணிலைவாத எதிர்ப்புகள் பல உரிமைகளை வென்றுள்ளன. இவையெல்லாம் நாமும் கற்க வேண்டியவைகளே...

இவ்வாறு கூறுகிறார். அண்மையில் சரிநிகர் அலுவலகத்திற்கு வருகை தந்த சமுத்திரன் அவர்கள். சரிநிகர் அலுவலகத்தில் நடந்த உரையாடலின் பின் திறந்த பொருளாதாரம், அதன் தாக்கங்கள் ஜனநாயக உரிமைகட்கான மக்களது எழுச்சி என்பன போன்ற விடயங்கள் தொடராக அடுத்தடுத்த இதழ்களில் எழுதுவதன் மூலம் ஒரு திறந்த விவாதத்தை நடாத்த விரும்புவதாக குறிப்பிட்டார்.

நோர்வே விவசாயப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள நோர்வேஜிய சர்வதேச விவசாய அபிவிருத்தி நிலையத்தில் கடமையாற்றும் சமுத்திரன் அவர்கள் தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய உயர் பட்டப்படிப்பு நிறுவனத்தில் வருகைப் பேராசிரியராக இயற்கை வளங்களின் முகாமை பற்றிய முதுமாணிப்பட்ட மாணவர்களுக்கு விரிவுரையாற்றி வருகிறார்.

# செக்கட்டித் தெருவிலிருந்து இளைஞர் கடத்தல்!

அது கொழும்பின் மத்தியபகுதி, ஒரு மாலைவேளை சனநெருக்கடி மிகுதியாய் காணப்படும் இடம். அஞ்சுலாம்பு சந்தியைத் தொடும் செக்கட்டித்தெரு மூலையில் வைத்து ஒரு இளைஞர் கடத்திச் செல்லப்பட்டு இரண்டு நாட்களின் பின்னர் விசாரணை முடிவில் கொழும்பு காலிமுகத்திடலில் விடப்பட்டுள்ளனர்.

செப்.15ம் திகதி மாலை நேரம் வத்தளையைச் சேர்ந்த ஒரு தமிழ் இளைஞர் செக்கட்டித்தெரு (கதிரேசன் வீதி) சந்தியில் வைத்து இரண்டு தமிழ் இளைஞர்களால் மறிக்கப்பட்டுள்ளார்.

''சத்தம் போடாமல் எங்களோட வா இல்லையேல் இந்த இடத்திலேயே உன்னை மண்டையில போடுவம்'' என்று மிரட்டியபடி அழைத்துச் சென்று அஞ்சுலாம்புச் சந்தியிலுள்ள ஒரு எண்ணைக் கடைக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த வெள்ளை வான் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளார். இந்த வானின் உள்ளே திரை போடப்பட்டுள்ளதால் வெளியே எதுவும் தெரியவில்லை.

வான் ஒரு மணித்தியாலத்துக்கு மேலாக அங்குமிங்கும் ஓடி கடைசியாக ஒரு கரடுமுரடான பாதையில் ஓடி ஒரு பெரிய வீட்டின் முன் நின்றுள்ளது.

வானிலிருந்து இறங்கும் போதே கறுப்புத் துணியினால் கண்களை கட்டியபடி இறங்கி அந்த வீட்டின் ஒரு அறையில் வைத்தே இவர் விசாரிக்கப்பட்டுள்ளார்.

அந்த அறை ஒரு இருட்டறை போல் காணப்பட்டதாகவும், அந்த இளைஞரை விசாரிக்க வரும் போது ஒரு லைட்டை போட்டால் முன்னால் இருந்து கேள்வி கேட்பவர்களின் முகம் கூட தெரியவில்லையாம்.

கொண்டு செல்லப்பட்டவுடன் சில தமிழ் இளைஞர்களின் பெயரைச் சொல்லி இவர்கள் எங்கேயிருக்கிறார்கள்? உனக்கு அவர்களுக்கும் என்ன உறவு? கடைசியாக எப்போது யாழ்ப்பாணம் சென்றாய்? என பல கேள்விகளை கேட்டுள்ளார்கள்.

இந்த இளைஞர் தனக்கும் யாழ்ப்பாணத்துக்கும் எந்த தொடர்புமில்லை, தான் கொழும்பு தான் என தனது முழுவிபரங்களையும் கூறியுள்ளார். அதற்கு பின்னர் சிங்களத்தில் ஒருவர் வந்து விசாரித்துவிட்டு தாங்கள் தவறுதலாக உன்னை கடத்தி விட்டோம் எனச் சொல்லியுள்ளார்.

முதலில் கூட்டிச் சென்றவுடன் தாக்கப்பட்டுள்ளார். பின்னர் நல்ல சாப்பாடும் கொடுத்து இனிமையாக பேசியுள்ளார்கள். தன்னை கடத்தி வந்து விசாரித்த விடயத்தை யாருக்கும் சொல்ல வேண்டாம் என எச்சரித்துமுள்ளார்கள்.

இறுதியாக 22ம் திகதி இரவு கண்களை கட்டியபடி கொழும்பு காலிமுகத்திடலுக்கு அருகே அதே வெள்ளை வானில் கொண்டு வந்து விட்டுச் சென்றுள்ளார்கள். கடத்திச் செல்லும் போது இவரிடமிருந்து எடுத்த நாலாயிரம் ரூபா பணத்தையும் திருப்பிக் கொடுக்க மறந்து விட்டார்களோ தெரியாது?

இவரை கடத்திச் சென்றவர்கள் கொழும்பில் வாழும் ஏதோ ஒரு தமிழ்க் குழுவினர்தான் என்று கிடைத்த தகவல்கள் கோடி காட்டுகின்றன.

முன்னைய ஐ.தே.க அரசு காலத்திலும் மட்டக்களப்பில் கப்டன் முனாஸ், புளொட் மோகன், குட்டி குழுவினர் வெள்ளை வானில் கண் கட்டிய சம்பவங்களும் கொழும்பில் சில தமிழ் குழுக்கள், தமிழ் ரெஜிமென்ட் என்பன அரசபடைகளுடன் இணைந்து விருந்துகளிலும் வீடுகளிலும் தமிழ் இளைஞர்களை கடத்துவதற்கும் வெள்ளை வான் தான் உபயோகிக்கப்பட்டது என்பதையும் யாரும் இலகுவில் மறந்து விட முடியாது. மீண்டும் இந்த வான் மக்கள் மத்தியில் அச்சத்தையும் புரளியையும் கிளப்பிக் கொண்டிருக்கிறது.

— எம்.மைதிலி

# பொருத்தமான பெயர்

திருக்கோணமலையில் அண்மைக்காலமாக நகர்ப்பகுதியில் எங்கு பார்த்தாலும் நீர்க்குழாய் இணைப்புகள் மும்முரமாக இடம் பெறுவதைக் காணலாம். சிறந்த முறையில் நகர மக்களுக்கு நன்னீர் வழங்கப்படல் வேண்டுமென்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. குடிநீர்க் குழாய் இணைப்பு அபிவிருத்தியின் ஒரு அங்கம் தானே.

ஆனால் ஒரு வருடத்துக்கு முன்னர் திருமலை நகரத்துக்கு வந்து போன ஒருவர் இப்போது இங்கே வந்தால் நகரம் அபிவிருத்தி அடைவதாக அவர் ஏற்றுக் கொள்ளவே மாட்டார். மாறாக நகரம் பாழடைவதாகத்தான் கருதுவார்.

அந்த அளவுக்கு நகரவீதிகள் யாவும் பாழ்படுத்தப்பட்டுள்ளன. சாரதிகள் அதீத கவனமெடுக்காமல் எதிரே வரும் வாகனத்தைக் கடந்து செல்ல முடியாது. பாதசாரிகள் கூட ''நிலம்பார்த்து'' நடக்காவிடில் ஆஸ்பத்திரிக்குத் தான் போக வேண்டிவரும். ஒரு சின்ன வீதி தானும் விதி விலக்காக வில்லை.

நடமாடும் ஜனாதிபதிச் சேவையின் போது 'பளிச்' சென்று திருத்தப்பட்ட அத்தனை வீதிகளும் பள்ளம் படு குழிகளாகக் காட்சியளிக்கின்றன. கொந்தறாத்துக்காரர்கள் வீதிகளை வெட்டிக் கொத்தி குழாய் பதித்து நீர் வழங்கல் சபையிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு விலகி விடுகிறார்கள். அவை சரியாக மீளவும் மூடப்படுகிறதா என்று எவரும் கவனிப்பதில்லை. எல்லா வீதிகளும் ஒரு அடி அல்லது அரை அடி ஆழம் கொண்ட நீண்ட பள்ளங்களுள்ளேயே காணப்படுகின்றன.

வீதியைச் செப்பனிடாமல் பணத்தைப் பெற்றுக் கொள்வது கொந்தாராத்துக் காரர்களின் வழக்கம்தான். ஆனால் அந்தப் பகுதி கிராமோதய சபைகளும் நீர் வழங்கல் சபையும் ஏன் கவனிப்பதில்லை என்பது தான் புதிரானது. அதுமட்டுமல்ல வீதியை உடைக்க முன்னரேயே தார் போட்டு பழைய நிலைக்குச் செப்பனிடுவதற்கான பணத்தை வடிகால் சபையிடம் ''சல்லிக்காசு'' பிசகாமல் பெற்றுக் கொண்ட வீதிக்குப் பொறுப்பான திணைக்களங்களும் அல்லவா தூங்கி வழிகின்றன.

நகரசபையோ உடைந்த-நொய்ந்த-வீதிகளுக்கு பெயர் மாற்றுவதில் ஆர்வம் காட்டுகிறது. மின்சார நிலைய வீதியைத் தந்தை செல்வா வீதி எனப் பெயர் மாற்றியிருக்கிறார்கள். நல்ல விடயம் தான். பொருத்தமும் கூட. அகலமாக இருந்த வீதி கொந்தராத்துக்காரர்கள் கைங்கரியத்தால் தந்தை போலவே தளர்ந்தும் மெலிந்தும் இருக்கிறது. கஸ்கிசன் வீதிக்குத் திருவள்ளுவர் வீதி என்ற புதிய பெயர் கூட ''வான்சிறப்பு'' அதிகாரத்துக்கு வடிவம் கொடுத்து நிற்கிறது.

மக்கள் கண்களைத் திறக்க விரும்பாத வரையில் இவை தொடர்ந்து கொண்டே தான் இருக்கும்.

— விவேகி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



மட்டு மாவட்ட முஸ்லீம் காங்கிரஸ்:

# பிரதேச வாதங்களும் குறுகிய சிந்தனைகளும் சுயநலங்களும்

ஓட்டமாவடி எம்.எச்.எம்.நௌபல்



ஆரம்பத்தில் இங்கு ஒரு விடயத்தை நான் கட்டாயமாக குறிப்பிட வேண்டியுள்ளது. முஸ்லீம் காங்கிரஸ் அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட பின் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில், 3 மேலதிக ஆசனங்களை பெற்று தேசியரீதியில் கவனத்தைப் பெற்ற ஒரு அரசியல் கட்சியாக திகழ்கின்றது. இதற்கு முன்னர் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஹிஸ்புல்லாஹ்வின் சுழற்சிமுறையால் விரக்தியின் உச்சக்கட்டத்தில் நின்ற கல்குடாத் தொகுதி முஸ்லீம் கிராமங்களான ஓட்டமாவடி, வாழைச்சேனை, மீராவோடை பிரதேசங்கள் இம்முறை நடந்த பொதுத்தேர்தலில் நிரந்தர நோய்க்கு உள்ளாகியுள்ளது. இப்பிரதேசங்களுக்கு இம்முறையும் பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்காமல் தவறியதற்கான காரணம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஏனைய முஸ்லீம் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கிடையே காணப்பட்ட பிரதேசவாதங்களும், குறுகிய சிந்தனைகளுமாகும்.

### ஓட்டமாவடி வேட்பாளர்கள்

ஓட்டமாவடி என்னும் போது இங்கு கல்குடாத் தொகுதியின் இரண்டு முஸ்லீம் பிரதேசங்களும் அதாவது வாழைச்சேனை மீராவோடை என்பனவும் உள்ளடங்கலாக இரண்டு வேட்பாளர்கள் இருந்தார்கள். அதில் ஒருவர் முஸ்லீம் காங்கிரஸின் இடைமட்ட மூத்த உறுப்பினர் எம்.எல்.எம்.சுபைர் என்பவர். மற்றவர்; பொதுத் தேர்தல் சமயத்தில் முஸ்லீம் காங்கிரஸில் இணைந்து கொண்ட எஸ்.ஐ. முஹமட் தம்பி என்பவருமாகும். இவர்கள் இருவருக்குமிடையே எவ்வித போட்டியும் ஏற்படவில்லை. ஆனால் இங்கு பிரச்சினைக்குரியவராக இருந்தவர் முஸ்லீம் காங்கிரஸின் முன்னாள் பொருளாளரும் தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச சபைத் தவிசாளருமான எம்.பி மொகைதீன் அப்துல்காதர் என்பவர். இவர் கல்குடாத் தொகுதியில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக நியமனம் செய்யப்பட்டிருந்தார். தேர்தல் வேலைகளுக்காக அவருக்கு கட்சியால் கூடுதலான பணமும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் தான் தோல்வியடைவது நிச்சயம் என்று தெரிந்தும், முஸ்லீம் காங்கிரஸில் இருந்து கல்குடாத் தொகுதியில் ஒரு உறுப்பினர் வராமல் தடுத்தால் ஐக்கிய தேசியக் கட்சியில் தன்னுடைய செல்வாக்கினையும் இலாப நோக்கங்களையும் ஆழமாக பதிந்து விடலாம் என்றிருந்தார். இவர் ஒரு உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் குடும்பம் சார்பான செல்வாக்கு ஒட்டமாவடி என்ற கிராமத்தில் மட்டும் உள்ளது. ஆனால் அது ஒரு பாராளுமன்ற ஆசனத்தை வாங்குவதற்கு போதுமானதாக இருக்கவில்லை என்பதை இவர் உணரவில்லை.

ஆனால் ஒட்டமாவடி என்னும் முஸ்லீம் கிராமமானது, முஸ்லீம் காங்கிரஸின் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக ஆரம்பத்தில் இருந்தே இருந்து வந்துள்ளது. சென்ற பிரதேச சபைத் தேர்தலுக்கு முன் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டு முஸ்லீம் காங்கிரஸால் ஆட்சி செய்யப்பட்டு வந்த பிரதேச சபை இந்த ஒட்டமாவடி பிரதேச சபை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அப்படியிருந்தும் முஸ்லீம் காங்கிரஸில் இவர்களுடைய செல்வாக்கு, எழுத முடியாததும் வாயால் சொல்ல முடியாததுமாகும். முஸ்லீம் காங்கிரஸின் அரசியல் குழுவிலோ அல்லது செயற்குழுவிலோ இவர்களில் யாரும் இடம் பெறவில்லை. இது இவர்களாகவே ஏற்படுத்திக் கொண்டஒன்றாகும். இதனைப்பற்றி தலைமைத்துவமும் அசமந்த நிலையிலேயே இதுவரையும் இருந்து வந்தது.

### ஜிஹாதின் மறுபிறவியும் ஏறாவூர் வேட்பாளரும்

ஏறாவூரில் இரண்டு வேட்பாளர்கள் முஸ்லீம் காங்கிரஸால் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஈரோஸின் முன்னாள் உறுப்பினரான பஸீர் சேகுதாவூத் என்பவர். மற்றையவர்; அஹமட் நஸீர் என்பவர். நஸீர் தான் ஒரு செல்வந்தர் என்றரீதியில் தான் பாராளுமன்ற உறுப்பினராக வரத் தேவையில்லை, குறைந்தது சொற்ப வாக்குகளையாவது பெற்றுவிட வேண்டும் என்றிருந்தார். மற்றைய வேட்பாளர் அவர்களைப் பற்றி சற்றுக் கூடுதலாக இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. அவர் தான் பஸீர் சேகுதாவூத் என்ற ஜிஹாதீன் மறுபிறவி அல்லது புதிய கோணலாகும். இவர் 1985ல் தோழர் பொன்னம்பலத்தின் வெற்றிடத்தை நிரப்பிய முஸ்லீம் தோழராவார். அதே ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தோல்வியுற்று பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டவர். இம்முறை நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் தான் தோல்வியுறுவது நிச்சயம் என்று தெரிந்ததும், அதற்கு மாற்று வழி என்ன செய்வது என்று சிந்தித்து கொண்டிருந்த போதுதான் இவரின் ஜிஹாத் என்ற மாயவலையில் அஷ்ரப் அவர்களும் சிக்கினார். இவ்வளவு காலமும் முஸ்லீம்களின் விடுதலைப் போராட்டத்தை இராணுவ மயப்படுத்த ஒரு தளபதி தேடி அலைந்த போதுதான் பஸீர் என்ற தளபதி கட்சிக்கு கிடைத்த இறைவனின் வரம் என்று தலைவர் எண்ணினார். பஸீரின் தேர்தல்கால செயற்பாடுகள் எல்லாப் பிரதேசங்களிலும் அரசியல் நாகரிகமற்ற தொன்றாகவே காணப்பட்டது. குடித்தால் தானே குடிக்க வேண்டும் அல்லது குடத்தை தான்தான் உடைக்க வேண்டுமென்றார். கல்குடாத் தொகுதியின் வேட்பாளர்களுக்கு இவர் பாரிய இடைஞ்சல்களையும் ஏற்படுத்தினார். தேர்தலுக்கு முன்னர் இவரின் சுவரொட்டிகளுக்கு வாழைச் சேனையில் கறுப்பு நிறம் பூசப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இருந்தும் இவர் தான் சென்ற ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் என்றரீதியில் செயற்பட்ட போது, தன்னுடைய பொறுப்பில் விடப்பட்ட காவத்தமுனை கம்உதாவ திட்டத்தின் மூலம் வாக்குகளை சுருட்டலாம் என்ற இவரின் பகற்கனவு மாயமாகியது. இன்று இவர் மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு இணைப்பாளராக நியமனம் செய்யப்படவிருப்பது கட்சியில் இருக்கின்ற சிலருக்கு பூரண அதிருப்தியாகும்.



இங்கு இன்னுமொன்றை குறிப்பிடல் வேண்டும். ஏறாவூரில் இருக்கின்ற முஸ்லீம் குடியிருப்புக்களில் ஒன்றான 'மிச்' நகரத்தில் இருந்து ஹிஸ்புல்லாஹ்வுக்கு கூடுதலான வாக்குகள் விழுந்துள்ளது. இதற்கு காரணமாயிருந்தவர். காங்கிரஸின் முன்னாள் மாகாணசபை உறுப்பினரான ரூபி மொஹீதீன் என்பவர். இவர் ஏறாவூரில் ''ரூபி'' என்ற ஐஸ்கிறீம் கடையின் முதலாளி, இவருக்கு குருநாகல், பதுளை போன்ற இடங்களில் ரூபி என்ற பெயரில் ஐஸ்கிறீம் கடைகள் உண்டு. ''மிச்'' கிராமத்தில் உள்ளவர்களில் ரூபி மொஹிதீன் உட்பட பலர் மகாவலி குடியேற்ற திட்டமான ரெதிதென்ன ஜெயாந்திலாய போன்ற இடங்களில் ஹிஸ்புல்லாஹ் எம்.பி. மூலம் ஏற்கனவே காணிகளைப் பெற்றனர். இந்த ரூபி மொகிதீன் சென்ற பிரதேசசபைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏறாவூரில் பஸீர் சேகுதாவூத் எம்.பியாக வரவேண்டுமென்று ஒரு குழுவினர் இயங்கினார்கள். இவர்களின் நிலைமை இப்போது மிகக் கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. காத்தான்குடி மக்கள் ஓட்டமாவடியைச் சேர்ந்த வேட்பாளரின் இலக்கத்துக்கு தங்களுடைய விருப்பத் தேர்வு வாக்குகளை இடக்கூடாது அப்படி வாக்களித்து ஓட்டமாவடி வேட்பாளர் எம்.பி. ஆக வந்தால் மூட்டை, முடிச்சுகளுடன் போய் எம்.பியை சந்திப்பதற்கு நிற்க வேண்டுமென்று பிரதேசவாதம் எழுப்பினார். முஸ்லீம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட கொள்கை பரப்புச் செயலாளர் என்று தன்னை அழைத்துக் கொள்ளும் கவிஞர் ரீ.எல். ஜௌவர்கான் அவர்கள். இவர் மட்டுமல்ல இன்னும் சிலரும் தாங்களாகவே முஸ்லீம் காங்கிரஸில் தங்களுடைய பதவிகளை ஏற்படுத்திக் கொண்டு மேடைகளில் தங்களை அறிமுகப்படுத்துவார்கள்.

### காத்தான்குடி வேட்பாளர்களின் பலப்பரீட்சை

காத்தான்குடி ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் இரண்டு முக்கிய வேட்பாளர்களை அறிமுகப்படுத்தியது. ஒருவர் கல்விமானும் சட்டத்தரணியும், பள்ளிவாசல் சம்மேளன தலைவருமாக இருந்த ஜவாட் அவர்கள் மற்றையவர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ் அவர்கள். இவர்கள் இருவருக்குமிடையே பலத்த வாக்குவாதங்கள் ஏற்பட்டன. இதுவரையும் அரசியல்ரீதியாக ஒற்றுமைப்பட்டிருந்த காத்தான்குடி கிராமம் இரண்டாக பிரிய வேண்டிய நிலைமை. எல்லோரும் எதிர்பார்த்தார்கள் ஜவாட் அவர்கள் எம்.பியாக தெரிவு செய்யப்பட்டால் முஸ்லீம் காங்கிரஸை மட்டக்களப்பு மாவட்டத்தில் இலகுவாக வளர்த்தெடுக்கலாம் என்று ஏனெனில் ஹிஸ்புல்லாஹ் மீது ஏற்கனவே கல்குடா, ஏறாவூர் முஸ்லீம்களில் கூடுதலானோர் வெறுப்படைந்தனர். ஜவாட் ஏற்கனவே வசதி குறைந்தவர்களுக்கு குறைந்த விலையில் வழக்குகளை வாதாடிக் கொடுத்ததனால் பரவலான செல்வாக்கை பெற்றவர். இருந்தும் நிலைமை தலைகீழாக மாறியது. தேர்தல் தினத்தன்று சுமார் ஆயிரக் கணக்கான வாக்காளர்கள் வாக்களிக்காமல் திரும்பிச் சென்றமைக்கான காரணம் இவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்களாகும்.

இதனைத் தவிர காத்தான்குடியிலிருந்து எவரும் வராமல் தடுத்து மாற்றமாக தலைவர் வரும் தினத்தன்றில் மட்டும் சாதாரண தொண்டர்களாகவே இருப்பார்கள்.

இறுதியாக உங்களைப்போன்ற முஸ்லீம் காங்கிரஸ் போராளிகளுக்கு சொல்ல வேண்டிய விடயம் என்னவென்றால் முஸ்லீம் காங்கிரஸ் வீளரும் கட்சி வளர்க்கப்பட வேண்டிய கட்சி உங்களைப் போன்றவர்களின் ஆக்கிரமிப்பு கடந்த காலங்களில் தவிர்க்க முடியாததொன்று. நீங்கள் தொடர்ந்தும் முஸ்லீம் காங்கிரஸ் அங்கத்தவராக இருக்க வேண்டுமென்றால் அதன் மூலம் முஸ்லீம் சமூகத்தின் விடுதலைப் போராட்டத்தை பலப்படுத்தி முன்னெடுத்துச் செல்ல வேண்டியிருந்தால் தயவு செய்து தலைமைத் துவத்திடம் நெருங்காதீர்கள். அப்படி நெருங்கினால் நீங்களாக உங்களுக்கு சில சமயங்களில் வேதனையையும் விரக்தியையும் தேடிக் கொள்வீர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமாதானத்திற்கான அடிவைப்பும் முஸ்லீம் மக்களின் உணர்வலைகளும்



பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அமைத்ததன் பின்னர் நாட்டின் இனப்பிரச்சினை குறித்து, புதிய போக்குகள் வெளிப்படத் தொடங்கியுள்ளன. ஆழ வேரூன்றிவிட்ட இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. வடபகுதிக்குத் தடை செய்யப்பட்டிருந்த பல பொருட்களின் மீதான தடையை அரசாங்கம் நீக்கியிருப்பதும், புலிகள் இயக்கத்தினர் தாம் சிறைப்பட்டிருந்த பொலிசாரில் சிலரை விடுவித்திருப்பதும் இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளாக அமைகின்றன. எனினும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலமாக, இனப்பிரச்சினையானது அர்த்தமுள்ள வகையில் தீர்க்கப்படுவதற்கு யுத்த நிறுத்தம் ஏற்படுவது அவசியமானது என புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

உண்மையில் சண்டையில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கும் அதன்மூலம் பொருத்தமான தீர்வுகளை நோக்கிச் செல்வதற்கும் யுத்தநிறுத்தம் ஏற்படுவது முன்னிபந்தனையாகின்றது. உலகில் எங்குமே இதுதான் பொதுவான விதியாக இருக்கின்றது. ஒருபுறத்தில் தமது சொந்தப் பிரிவினர் அழிந்து கொண்டிருக்க மறுபுறத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நடத்தப்படலாம் என்பது இலகுவில் சாத்தியமாகக் கூடியதல்ல. எனவே யுத்த நிறுத்தம் என்பது அர்த்தமுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அடித்தளமாக அமைகின்றது. இப்போது வட அயர்லாந்துப் போராளிகளுக்கும், பிரிட்டிஷ் அரசுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த யுத்தநிறுத்தம் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இவ்வகையில் எமது நாட்டிலும் இனப்பிரச்சினையானது சமாதான வழிகளில் தீர்த்து வைக்கப்படுவதற்கு சாத்தியம் இருக்குமாயின், முதலில் யுத்தநிறுத்தம் ஏற்படுவது அவசியமாகின்றது.

ஆயினும் புலிகளின் யுத்தநிறுத்தக் கோரிக்கையானது, வடகிழக்கு முஸ்லீம்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த அச்சம், தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டு விடலாம் என்பதன் அடிப்படையில் எழுந்ததல்ல. மாறாக இடைக்கால அமைதியின் போது அல்லது ஒரு யுத்த நிறுத்தத்தின் போது தமது உயிருக்கும் உடமைகளுக்கும் ஏற்படக்கூடிய அழிவுகளைக் குறித்தே இந்த அச்சம் தோன்றியுள்ளது. வடகிழக்கு முஸ்லீம்களிடையே ஏற்பட்டுள்ள இந்த அச்சம் வெறும் கற்பனைக்குரியதல்ல. மாறாக கடந்த காலங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு ஏற்பட்ட கொடூர அனுபவங்களின் வெளிப்பாடுதான் இந்த அச்சம்.

ஆயுதம் தாங்கிய தமிழர் அமைப்புகள் வடகிழக்கு முஸ்லீம் பகுதிகளிடையே செயற்படத் தொடங்கியதிலிருந்து அவற்றின் அச்சுறுத்தல்களையும் அடக்குமுறைகளையும் முஸ்லீம்கள் எப்போதும் முகம் கொடுக்க வேண்டியே வந்திருக்கிறது. இந்த ஆயுதப் பிரிவினர் சுதந்திரமாக நடமாடக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட போதெல்லாம் முஸ்லீம்கள் மீதான அவர்களின் அச்சுறுத்தலும், அடக்குமுறையும் மிகவும் உக்கிரமடைந்திருந்தன. இரண்டு வருடங்களுக்கும் மேலாக இந்தியப் படையினர் இருந்த காலங்களிலும் அதன் பின்னர் புலிகளுக்கும் - அரசுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற காலங்களிலும் வடகிழக்கு முஸ்லீம்கள் மீதான தமிழ் ஆயுதப் பிரிவினரின் - அவர்கள் புலிகளாக இருந்தாலென்ன, ஏனைய அமைப்புகளாக இருந்தாலென்ன - அடக்குமுறைகள் மிக உக்கிரமடைந்திருந்தன. பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டிற்குள் முஸ்லீம் பிரதேசங்கள் இருக்கின்ற போது இந்த தமிழர் அமைப்புகளினால் முஸ்லீம்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் எல்லைக்குட்பட்டதாகவும், எப்போதாவது ஒருமுறையே நிகழக்கூடியதாகவும், சில நபர்கள், குடியிருப்புகள் சார்ந்ததாகவே இருக்கும். ஆனால் இத்தகைய யுத்த நிறுத்தக் காலங்களிலோ அல்லது தமிழ் ஆயுதக் குழுக்கள் சுதந்திரமாக நடமாடக்கூடிய சந்தர்ப்பங்களிலோ முழு முஸ்லீம் கிராமமும் அங்குள்ள முழு முஸ்லீம்களும் தமிழர் அமைப்புகளினால் அடக்குமுறைக்குள்ளாக்கப்படுகின்றனர்.



எவ்வித தடையுமின்றி முஸ்லீம் பிரதேசங்களின் மீது இந்த அமைப்பினர் தமது கட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றனர். தாம் விரும்பிய எந்த நபரையும் கொல்லவும், எந்த வீட்டையும் கொள்ளையடிக்கவும், எவரிடமிருந்தும் பணம் பறிக்கவும், எந்த நேரத்திலும் முஸ்லீம்களை வீட்டிற்குள் முடக்கச் செய்யவும் இந்த அமைப்புகளினால் முடிந்திருக்கின்றது. அரசாங்கமும் பாதுகாப்புப் படையினரும் முற்றாக கைவிட்ட நிலையில், கடந்த கால யுத்தநிறுத்தங்களின் போதும் தமிழ் இயக்கங்கள் சுதந்திரமாக நடமாடிய சந்தர்ப்பங்களிலும் அப்பாவி வடகிழக்கு முஸ்லீம்கள் பெற்ற அனுபவங்கள் இவ்வாறு கொடிய அடக்குமுறை சார்ந்ததாகவே அமைந்திருந்தன எனவே தான் மீண்டும் ஒரு யுத்தநிறுத்தம் பற்றி புலிகள் குரல் எழுப்பும் போது வடகிழக்கு முஸ்லீம்களிடையே அச்சம் எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

ஆயுதம் தாங்கிய அனைத்து தமிழ் இயக்கங்களும் வடகிழக்கு முஸ்லீம்களின் மேல் அடக்குமுறையைப் பிரயோகித்த போதிலும் புலிகள் இயக்கத்தினால் முஸ்லீம்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் மிகக் கடுமையானது. புலிகள் இயக்கத்தினர் தம்மைத் தீவிர முஸ்லீம் விரோத அமைப்பாகவே வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர். காத்தான்குடி, ஒந்தாச்சிமடம், ஏறாவூர், அழிஞ்சிப்பத்தன... போன்ற இடங்களில் நூற்றுக்கணக்கான முஸ்லீம்களைப் படுகொலைசெய்தமை, முஸ்லீம் கிராமங்களைத் தீ வைத்து அழித்தமை, வடபகுதி முஸ்லீம்களை அவர்களது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றியமை என புலிகள் தமது முஸ்லீம் விரோத நிலைப்பாட்டை தெளிவாகவே வெளிப்படுத்தி வந்திருக்கின்றனர்.

தனது சமூகத்தின் உரிமைகளுக்காகப் போராடுகின்ற ஒரு இயக்கம் எப்போதும் எல்லா விடயங்களிலும் சரியான நிலைப்பாடுகளையே கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அனுபவமற்ற நிலையும் தவறான மதிப்பீடுகளும் எதிர்பாராத நெருக்கடி நிலைமைகளும் பல சந்தர்ப்பங்களில் தவறான முடிவுகளையும் நிலைப்பாடுகளையும் மேற்கொள்ளச் செய்கின்றன. எனினும் தமது போராட்டப்பாதையினூடாக இத்தகைய தவறுகளைத் திருத்திக் கொண்டு அதன் மூலம் தமது சமூகத்தின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான கூடுதல் வாய்ப்புகளை நோக்கி ஒரு இயக்கம் முன்னேற வேண்டும். அதுதான் பொதுவாக எல்லா போராட்ட அமைப்புகளினதும் அனுபவமாக இருக்கின்றது. கடந்த காலங்களில் வடகிழக்கு முஸ்லீம்களின் தனித்துவத்தை நிராகரித்து அவர்களை ''தமிழர்களாக'' அடையாளப்படுத்த முனைந்த தவறை சகல இயக்கங்களும் செய்திருந்தன. எனினும் இவற்றில் சில இப்போது வடகிழக்கு முஸ்லீம்களை தனியான, தனித்துவமான சமூகமாக அங்கீகரிப்பதற்கு முன்வந்துள்ளன.



ஆனால், விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் வடகிழக்கு முஸ்லீம்களைத் தனித்துவமான சமூகமாக அங்கீகரிக்காததோடு தமது முஸ்லீம் விரோத நிலைப்பாட்டையும் கூட இன்னமும் கைவிடாதவர்களாகவே இருக்கின்றனர் என்பதையே அவர்களது தற்போதைய நிலைப்பாடுகளும் காட்டுகின்றன. வடபகுதி முஸ்லீம்களின் வெளியேற்றத்திற்கு கிழக்கில் தமிழ் மக்கள் மீது இடம்பெற்ற வன்முறைகளைக் காரணமாகக் காட்டுவதும் முஸ்லீம்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்புவதை, தமிழ் அகதிகளுக்கு இருக்க இடமில்லை என்பதைக் காரணமாகக் காட்டி தடுப்பதும் முஸ்லீம்கள் மீது இன்னமும் புலிகள் கொண்டிருக்கின்ற அந்நிய மனோபாவத்தின் வெளிப்பாடுகளே தவிர வேறல்ல. இவற்றை விட வட,கிழக்கு எங்கும் முஸ்லீம்களுக்கு சொந்தமான பல ஆயிரக்கணக்கான விவசாயக் காணிகள் முஸ்லீம்களால் செய்கை பண்ணப்படாமல் இருப்பதற்கும், முஸ்லீம் மீனவர்களின் கடற்றொழிலும் ஏனைய தொழில் முயற்சிகளும் போக்குவரத்துக்களும் இன்னமும் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதற்கும் புலிகள் இயக்கத்தினர் குறித்து வட கிழக்கு முஸ்லீம்களுக்குள்ள அச்சமே பிரதான காரணமாகும். இந்த அச்சத்தைப் போக்கும் விதமாக எந்தவித உத்தரவாதங்களையும் இதுவரை புலிகள் இயக்கம் வழங்கவில்லை. நிலைமை இவ்வாறிருக்க வடகிழக்கு மாகாணமானது தமிழ் பேசும் மக்களாகிய தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் தாயகம் என்று மீண்டும் அழுத்திக் கூறுவதால் புலிகள் முஸ்லீம்கள் மீது அக்கறையும் நேசமும் கொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தப்படமாட்டாது. இதற்கு மாறாக முஸ்லீம்களை ''தமிழ் பேசும் மக்களாக'' மீண்டும் அடையாளப்படுத்துவதன் மூலம் தம்மை மீண்டும் அடக்கி வைக்க புலிகள் இயக்கத்தினர் முயற்சிக்கின்றனர் என்றே வட கிழக்கு முஸ்லீம்கள் கருதுகின்றனர்..

புலிகள் இயக்கத்தினர் வட கிழக்கு முஸ்லீம்களின் தனித்துவத்தை அங்கீகரிக்காத நிலையிலும் முஸ்லீம்கள் மீதான விரோத மனப்பான்மையைக் கைவிடாத நிலையிலும் ஒரு யுத்த நிறுத்தம் ஏற்படுமாயின் அதன்மூலம் தம்மீது புலிகள் இயக்கத்தினர் மீண்டும் அடக்குமுறையை பிரயோகிக்க வழி ஏற்படும் என்ற வட கிழக்கு முஸ்லீம்களின் அச்சம் நியாயமானது. இந்த அச்சம், பத்து வருடகாலமாக முஸ்லீம்கள் பெற்றிருக்கின்ற துயர அனுபவங்களின் திரட்சி; இந்த அச்சம் வெறும் இயலாமையின் வெளிப்பாடல்ல. இது தனது சொந்த சமூகத்தின் இருப்பும், கௌரவமும் மீண்டும் ஒருமுறை அவமானப்படுத்தப்படக்கூடாது என்ற உணர்ச்சியின் வெளிபாடு; தனது குழந்தையின், தனது கணவனின், தனது மனைவியின், தனது தாயின், உடன் பிறப்புகளின் உயிர்கள் மீண்டும் ஒருமுறை அராஜகக் கரங்களால் பறிக்கப்படக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வின் வெளிப்பாடு இந்த அச்சம். தமது தனித்துவத்தையும் உரிமைகளையும் பேணுவதற்காக வாய்ப்புகள் மறுக்கப்பட்டிருப்பதால் தோன்றும் ஆவேஷத்தின் வெளிப்பாடு.

வடகிழக்கு முஸ்லீம்கள் நிலைமைகளின் எதார்த்தத்தை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நாட்டில் சகல சமூகங்களும் தமது தனித்துவத்துடனும் உரிமைகளுடனும் வாழ்வதற்கு ஏதுவாக சமாதான வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியுமாயின், அதற்கு யுத்த நிறுத்தம் ஏற்படுவது அவசியமானது; தவிர்க்க முடியாதது. தமது பாதுகாப்பைக் காரணமாகக் காட்டி யுத்த நிறுத்தம் செய்ய வேண்டாம் என வட கிழக்கு முஸ்லீம்கள் அரசாங்கத்தைக் கோர முடியாது. ஏனெனில் இத்தகைய →

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோரிக்கை தமக்கு உரிமைகள் வழங்கப்படுவதை முஸ்லீம்கள் எதிர்க்கிறார்கள் என்று தமிழ் மக்கள் கருதக்கூடிய நிலையைத் தோற்றுவிக்கும். அதேவேளையில் ஒரு சமாதானப் பேச்சுவார்த்தைக் கூடாக வடகிழக்கு முஸ்லீம்களின் உரிமைகள் பெறப்படுவதையும் அது பாதிக்கும். இந்நிலையில் யுத்த நிறுத்தத்தின் அவசியத்தை ஏற்றுக் கொள்கின்ற அதேவேளையில் அத்தகைய யுத்த நிறுத்தத்தினால் தமக்கு ஏற்படக் கூடிய அபாயங்களை வெற்றி கொள்வதற்கான வழிமுறைகளையும் வடகிழக்கு முஸ்லீம்கள் கண்டு கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த கால அனுபவங்கள் அனைத்தும் அரசாங்கமோ அல்லது பாதுகாப்புப் படையினரோ வடகிழக்கு முஸ்லீம்களை பாதுகாக்க கூடியவை அல்ல என்ற கசப்பான உண்மையையே வெளிப்படுத்தி இருக்கின்றன. எதிர்காலத்தில் இந்த நிலைமை தானாகவே மாற்றமடையும் என்பதற்கான சாத்தியப்பாடுகள் எதுவும் தென்படவில்லை. இதைவிட புலிகளினாலோ அல்லது ஏனைய தமிழ் குழுக்களினாலோ வடகிழக்கு முஸ்லீம்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தாம் தடுத்து நிறுத்தக் கூடியவர்கள் என்பதை தமிழ் மக்களும் இன்றுவரை செயல்பூர்வமாக வெளிப்படுத்தவில்லை. இந்நிலையில் வடகிழக்கு முஸ்லீம்கள் தமது பாதுகாப்பைத் தாமே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர்.



எனினும் பரந்தளவிலான அமைப்பு வடிவங்கள் எதுவும் அற்ற கிழக்கு முஸ்லீம்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அத்துணை எளிதான விடயமல்ல. ஓரளவிற்கு இதைச் சாத்தியமாக்குவதற்கு வடகிழக்கு முஸ்லீம்கள் தம்மிடையே பலமான வெகுஜன அமைப்புகளை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்த வேண்டும். வடகிழக்கு முஸ்லீம்களிடையே வெகுஜன அமைப்புகளை உருவாக்குவது குறித்து இதுவரை எந்தவொரு முஸ்லீம் தலைமையும் தீவிரமாகச் சிந்திக்கவில்லை. சமூக சேவை நிறுவனங்கள் பிரஜைகள் குழுக்கள் மத நிறுவனங்கள் மனித உரிமை அமைப்புகள் என பல்வேறு விதமாக உள்ள இத்தகைய வெகுஜன அமைப்புகளின் மூலம் ஒரு சமூகம் தான் முகம் கொடுக்க நேர்கின்ற பிரச்சினைகளை தேசிய ரீதியிலும், சர்வதேசரீதியிலும் வெளிப்படுத்த முடியும் என்ற உண்மையை வடகிழக்கு முஸ்லீம்கள் இன்றுவரை போதுமான அளவுக்கு உணரவில்லை. இத்தகைய அமைப்புகள் உறுதியான முறையில் செயற்படுவதன் மூலம் வடகிழக்கு முஸ்லீம்களுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை வெகுஜனரீதியில் எதிர்க்கவும் (உதாரணமாக கடையடைப்பு ஹர்த்தால், உண்ணாவிரதம் என) இத்தகைய அச்சுறுத்தல்களை உடனுக்குடன் வெளி உலகிற்குத் தெரியப்படுத்தவும் வழி ஏற்படும். இங்குள்ள தூதரகங்கள்- குறிப்பாக முஸ்லீம் நாடுகளின் தூதரகங்கள் - மனித உரிமை அமைப்புகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் முறையான தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் தமக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை அவற்றுக்குத் தெரியப்படுத்த முடியும். இதன் மூலமாக இவை இலங்கை அரசின் மீதும், வடகிழக்கு முஸ்லீம்களுக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடிய இயக்கங்களின் மீதும் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி தமது பாதுகாப்பை கணிசமான அளவு உறுதிப்படுத்த முடியும்.

எனவே வட கிழக்கு முஸ்லீம்கள் அவசரமாகச் செயற்படுவது அவசியமாகின்றது. ஒரு யுத்த நிறுத்தம் தமக்கு ஏற்படுத்தக் கூடிய அழிவுகளைக் கருத்திற்கொண்டு, வருமுன் காப்பாக அவற்றை உறுதியாகத் தடுக்கக்கூடிய நடவடிக்கைகளை இப்போதே தொடங்க வேண்டும். வெறும் நம்பிக்கைகளும் அதிசயங்களும் நிகழலாம் என்ற எதிர்பார்ப்புகளும் அர்த்தமற்றவை. எல்லாவற்றுக்கும் முதலாக வடகிழக்கு முஸ்லீம்கள் தமக்கு ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களை எதிர்த்து வெகுஜனரீதியில் உறுதியாக செயற்படுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். ஏனெனில் மீண்டும் ஒரு முறை அடிமைப்படுவதும் தமது அன்புக்குரியவர்களையும், உடமைகளையும் பறிகொடுப்பதும் நடைபெற அனுமதிக்கக் கூடாது.

**மருதூர் பஷீத்**

## பொத்துவில் வரை ரயில் பாதை விஸ்தரிப்பு:

# ''கதைக்கிற ஆக்களுக்கு ஆமியால நடந்தது தெரியாதா?''

செப்.26ம் திகதி திங்கட்கிழமை மட்டக்களப்பு இந்துக்கல்லூரியில் ரயில் பாதையை பொத்துவில் வரை விஸ்தரிக்கும் பிரேரணையையொட்டி கூட்டம் ஒன்று நடைபெற்றது. இதற்கு முதல் நாள் 25ம் திகதி, ஞாயிற்றுக்கிழமை வீரகேசரியில் ''சூழல் பாதிப்பு குறித்து பல்கலைக்கழகம் ஆய்வு'' என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இந்தச் செய்தியில் ''புகையிரதப் பாதை விஸ்தரிப்பு தொடர்பாக பொதுமக்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுவதாகவும்'' இதற்காக மேற்படி ''கருத்தரங்கு'' ஒழுங்கு செய்யப்படுவதாகவும் சொல்லப்பட்டிருந்தது.

எனினும் இந்தக் ''கருத்தரங்கம்'' நடத்தப்பட்ட முறை தொடர்பாகவும் இதை ஒழுங்கு பண்ணியவர்கள் நடந்து கொண்ட முறைமை பற்றியும் பலத்த சர்ச்சைகளை பொதுமக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்ட மேடையில் புகையிரதப் பாதை விஸ்தரிப்பு மதிப்பீடுகள் தொடர்பான கலாநிதி அமல் குமாரகே (மொரட்டுவைப் பல்கலைக்கழகம்) நீரியல் பொறியியலாளர் திரு. மனோகரதாஸ், பேராசிரியர் மனோ சபாரத்தினம் தலைமையிலான கிழக்குப் பல்கலைக்கழக சூழல் மதிப்பீட்டுக்குழு உறுப்பினர் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

அரச அதிபரின் ஆரம்ப அறிமுகத்துடன் கலாநிதி அமல் குமாரகே அவர்கள் பொதுமக்களை கருத்துக்களைக் கூறும்படி வேண்டினார். பொதுமக்கள் தெரிவித்த கருத்துக்களில் முக்கியமாக வலியுறுத்தப்பட்ட கருத்துக்களில் சில வருமாறு:

* சனநெரிசலான பகுதிகளை விடுத்து இன்னும் கடற்கரையோரமாகச் செல்லுதல்.
* கல்லடிப் பாலம் ஏற்கனவே வாகன நெருக்கடியுள்ளதால் புதிய பாலமொன்றை அமைத்தல்.
* முன்பு தெரிவித்த ஆலோசனைப்படி புனானையிலிருந்து அம்பாறைக்கு புகையிரதப் பாதையை விஸ்தரித்தல் முதலிய கருத்துக்கள் கூறப்பட்டன.

ஆரம்பத்திலிருந்தே இக்கூட்டம் நடந்த முறையானது இதில் சம்பந்தப்பட்டவர்கள் கருத்தரங்கை ஒரு கண்துடைப்பு நாடகமாக நடாத்த முனைந்ததாகவே தோன்றியது. கூட்டம் நடத்தினோம். ஆலோசனைகளை கேட்டோம் என்று சொல்லி விட்டு விரும்பியபடி நடப்பதற்காக இது நடாத்தப்பட்டதாக பலரும் கருதுவதாக தெரியவருகிறது. கூட்டம் ஆரம்பித்தவுடனேயே கலாநிதி அமல் குமாரகே அவர்களுக்கோ பல்கலைக்கழக சூழல் ஆய்வுக் குழுவுக்கோ பிரதேசம், ஊர்கள், இடங்களின் அமைவு என்பன பற்றி எந்த விதமான தகவல்களையும் தெரிந்து வைத்திருக்கவில்லை என்பது தெளிவாகவே தெரிந்தது.

மேலும் மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கும் ராணுவத்துக்குமுள்ள தொடர்பு காரணமாகவும் அரச அதிபர் போகுமிடமெல்லாம் ராணுவ பாதுகாப்பு தூள்பறப்பது காரணமாகவும் அவர் பங்கேற்கும் எந்த நிகழ்ச்சியும் ஐ.தே.க.ராணுவ கூட்டின் ஆதரவுப் பிரச்சாரமாகவே கொள்ளப்படுவதும் காரணமாக, அவர்கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் சுதந்திரமான கருத்துக்கள் வெளிப்படுவதில்லை என்பது யாவரும் அறிந்ததே. இந்நிலையில் மொரட்டுவை, கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் எப்படி ஒரு சுதந்திரமான கருத்துப் பரிமாறலை அல்லது இதை ஒரு கண்துடைப்பு நாடகமாக நடத்தினால் போதும் என்று கருதியிருக்க வேண்டும். இத்தகைய நிகழ்ச்சி ஆய்வாளர்களது தனித்துவத்துக்கும் கல்வித்துவ நேர்மைக்கும் பங்கம் விளைவிப்பதாகவும் உள்ளது என்பதை இவ்விடத்தில் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

இதில் மக்களைச் சஞ்சலப்படுத்திய முக்கியவிடயம் என்னவென்றால் அங்கு பேசியவர்களது கருத்துக்கள் ஒலிப்பதிவு நாடாவிலும் பதிவு செய்யப்பட்டதுடன் பேச்சாளர்களும் புகைப்படமெடுக்கப்பட்டனர் என்பதே. இந்த ஏற்பாடு கருத்துக் கூற வந்த பலரிடம் அச்சத்தை ஏற்படுத்தியதால் அவர்கள் அபிப்பிராயம் கூற மறுத்துவிட்டனர். பேச்சாளர்களும் படமெடுக்கும் போது கைகளினால் தங்களை மறைக்க முயன்றனர். பலர் வெளிப்படையாகவே இந்த ஏற்பாடுகள் பற்றி விசனப்பட்டனர். மக்கள் ஐக்கிய முன்னணியின் ஒரு முன்னணி அங்கத்தவர் கூட ''இப்பிடிப் படமெடுக்கக் குள்ள என்னெண்டு நாம எழும்பிக் கதைக்கிறது? மட்டக்களப்புல கதைக்கிற ஆக்களுக்கு ஆமியால நடந்தது தெரியாதா?'' என்று கேட்டார். ''நாம இங்க கதைக்கேலா'' என்று கூறிவிட்டு அவர் மௌனம் சாதித்தார்.

மேற்கூறிய சர்ச்சைக்குரிய ஏற்பாடுகள் தவிர, கிழக்குப் பல்கலைக்கழக சூழல் ஆய்வுக்குழுவினரும் மிகவும் காரமாக விமர்சிக்கப்பட்டனர். பேராசிரியர் மனோ சபாரத்தினமும் அவரது குழுவினரும் இந்த ஆய்வை நடத்துவதற்கு தகுதியற்றவர்கள் என்றும் அவர்கள் மீது தமக்கு நம்பிக்கை இல்லை என்றும் வெளிப்படையாகவே பலர் கூறினர். ஒரு கருத்துரையாளர் பேசுகையில் இந்த ஆய்வுக்குழு கிழக்கு மாகாணச் சமூகம் பற்றியோ, சூழல் பற்றியோ அறிவுபடைத்தவர்கள் அல்ல எனவும், அவர்கள் சார்ந்துள்ள துறைகள் சூழல்பற்றிய ஆய்வுக்கும் உரியவையல்ல எனவும் குறிப்பிட்டார். புதிய ரயில் பாதை பல்வேறு வாவிகள், களப்புகள், கோணாக்கள் இயற்கை வளமிக்க கண்ணா சதுப்புநிலங்களூடாகச் செல்லலாம். என்றும், இந்த ஆய்வில் ஈடுபடுபவர்களோ கிழக்கின் சூழல் பற்றி எந்த வித அக்கறையறிவோ கொண்டவர்கள் அல்ல என ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

முக்கியமாக பேராசிரியர் மனோர் சபாரத்தினத்தின் நடுநிலைமைமீது ஒன்றுக்கு மேற்பட்ட பேச்சாளர்கள் சந்தேகங்களை எழுப்பினர். அவரது தலைமையில் வெளியிடப்படும் ஆய்வுகள் பிரதேசரீதியாக அமைந்திருக்காதா என்ற சந்தேகமும் எழுப்பப்பட்டது. இந்த ஆய்வுக் குழுவில் ஒரு முஸ்லீமைக்கூட சேர்த்துக் கொள்ளாதது இந்தப் பிரதேசரீதியான அணுகுமுறைக்கு நல்ல உதாரணம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்கள் பொதுவாகவே யாழ்.பிரதேசவாதம் பேசுபவர் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்படும் ஒருவர் என்பதும், யாராவது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டால் அவரது முதல் கேள்வி ''நீ எவடம்?'' என்பதாகவே இருக்கும் என்றும் யாழ்ப்பாணம் தவிர்ந்த மற்றையவர்களுக்கு மூளையில் பண்டமில்லை என்பது அவரது ஆணித்தரமான நம்பிக்கை என்றும் பொதுவாகப் பேசப்படுவது உண்டு. மாணவர்கள், இளம் விரிவுரையாளர்கள் மத்தியில் இவர் இந்த வேறுபாடுகளைப் பிரதேசரீதியில் வளர்ப்பவர் என்ற குற்றச்சாட்டும் அவருக்கு உண்டு.

சமீபத்தில் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் புலமைப்பரிசில் தெரிவிலும் கூட, இவரும் இவருக்கு சார்பான ஒருசில துணைத்தலைவர்களுக்கும் பிரதேசரீதியாக தெரிவு நடத்தியதாகப் பல்கலைக்கழக விரிவுரையாளர் வட்டாரங்களில் குற்றஞ்சாட்டப்பட்டுமுள்ளது. இந்தச் சர்ச்சை பல்கலைக்கழக மூதவை வரை வந்ததாகவும், பேராசிரியர் இதை எவ்வாறோ சமாளித்துவிட்டதாகவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த நிலையில் பேராசிரியர் அவர்கள் தாங்கள் அறியாத, சரிவர மதிக்காத ஒரு பிரதேசத்தில் உண்மையான இதய சுத்தியுடன், நடுநிலைமையாகச் செயற்படுவார்களா என்பது முக்கிய கேள்வியாகும்.

இந்த சூழல் ஆய்வு, புகையிரதப் பாதை விஸ்தரிப்பு தொடர்பான முடிவுகளைப் பொறுத்தவரையில் ஒரு முக்கிய ஆய்வாகும். புகையிரதப் பாதையை விஸ்தரிப்பதா, கைவிடுவதா போன்ற முக்கிய முடி

→15

**குமாரதாஸ்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையிலான ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தை ஒக்.13ம் திகதி ஆரம்பமாகிறது. விடுதலைப் புலிகளின் வார்த்தைகளில் சொல்வதானால், முதலில் ஆராயப்பட இருப்பவை 'அத்தியாவசியப்' பிரச்சினைகளே.

அடிப்படைப் பிரச்சினைகள் அத்தியாவசியப் பிரச்சினைகள் என்ற அடிப்படையில் 'சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது நல்லது ' என்ற விடுதலைப்புலிகளின் கோரிக்கையில் 'அத்தியாவசிய' பிரச்சினைகள் என்று சொல்லப்படுபவை கடந்த 10 ஆண்டுகட்கு மேலாக நடைபெறும் யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள மனித, கட்டிட மற்றும் தளபாட, பொருளாதார மற்றும் இன்னோரன்ன சிதைவுகள் தொடர்பானவையே என்பது வெளிப்படை.

சமாதானத்திற்காக பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதை வலியுறுத்தும் சமாதான விரும்பிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில், உண்மையில் இந்த 'அத்தியாவசியப்' பிரச்சினைகள் எவ்வளவு தூரம் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பது தெளிவாகட புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறதா என்பது சந்தேகமே. நிலைமையின் உக்கிரத்தை வெளிப்படையாகவும் நேர்மையாகவும் அவதானிக்கும் ஒருவரே அதனுள் ஊடுருவி நிற்கும் கசப்பான அனுபவ வெளிப்பாடுகளையும் கூட இனங்கண்டு கொள்ள முடியும்.

''கடந்த கால யுத்தத்தால் இதுவரை 649 உள்ளக இயந்திரப் படகுகளும் 2705 வெளியக இயந்திரப் படகுகளும் சிதைக்கப்பட்டுள்ளன. 1990ல் செய்யப்பட்ட ஒரு கணக்கெடுப்பின்படி யாழ் மாவட்டத்தில் 822 உள்ளக இயந்திரப் படகுகளும் 1928 வெளியக இயந்திரப் படகுகளும் இருந்தன. இப்போது இவற்றில் பெரும்பான்மையானவை அழிக்கப்பட்டுவிட்டன அல்லது பாவிக்க முடியாதளவு சிதைக்கப்பட்டுவிட்டன.

''1990ல் யாழ். குடாநாட்டில் 1661 தொழில் நிறுவனங்களும், 561 குடிசைக் கைத்தொழில்களும், 1084 சேவைத் தொழில்களும் இருந்தன. யுத்த நெருக்கடி, எரிபொருள், மின்சாரம் என்பவற்றின் மீதான தடை என்பவற்றையடுத்து 70%மான தொழிற்துறைகள் மூடப்பட்டுள்ளன. கட்டிட வேலை மற்றும் திருத்த வேலைகளில் ஈடுபட்ட 6000 தொழிலாளர்கள் இப்போது வேலை இழந்துள்ளனர்.

''169 பஸ்களை கொண்டு இயங்கிய பஸ் போக்குவரத்து இப்போது முற்றாக ஸ்தம்பித்து விட்டதென்றே சொல்ல வேண்டும் தனியார் பஸ்களினால் 5 பிரதான பாதைகளில் மட்டும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட சேவையே நடாத்தப்படுகிறது. பஸ் கட்டணமும் பத்து மடங்காக அதிகரித்துள்ளது.

இந்த பஸ் சேவை பொதுமக்களுக்கு பெருமளவு பயனற்ற ஒன்றாகவே உள்ளது. கட்டண உயர்வு, நீண்ட நேரக் காத்திருப்பு, சிறு சிறு நிலைமை மாற்றங்கள் கூட (ஒரு ஷெல் அடி அல்லது விமான குண்டுக் வீச்சு) சேவையை நிறுத்திவிடலாம் என்பனவற்றால் அச்சேவை பயனற்ற ஒன்றாகவே உள்ளது. இதனால் பெரும்பாலானவர்களின் போக்குவரத்து சாதனமாக, உள்ளது துவிச்சக்கர வண்டிகளே.

''தனியார் வியாபார நிலையங்களில் பலவும் சதொச, கூட்டுறவு நிறுவனங்கள் முற்றாகவும் நிறுத்தப்பட்டுவிட்டன். வங்கிகள் அவற்றின் ஊழியர்கள் பலரும் மாவட்டத்தை விட்டு வெளியேறி விட்டதால் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளையே நடாத்துகின்றன ''

இவ்வாறு கூறுகிறது யாழ் மாவட்ட செயலகம் செப்டம்பர் 1994ல் வெளியிட்ட **'யுத்தத்தினால் சிதையுண்ட யாழ் மாவட்டத்தின் சமூக பொருளாதார நிலைமைகள்'** என்ற அச்சிறு பிரசுரம்.

யாழ் குடாநாடு தொடர்பாக விரிவாக விளக்கும் அவ்வறிக்கையின் இறுதிப் பகுதியை இங்கே மொழி பெயர்த்துத் தருகிறோம்:

யாழ் மாவட்டத்தில் 37% மானோர் விவசாயத்திலும் 28%ஆனோர் தொழில் துறைகளிலும் 35% ஆனோர் சேவைத் துறைகளிலும் ஈடுபடுகின்றனர். 103,000 ஹெக்டேயர் நிலப்பரப்பைக் கொண்ட இம்மாவட்டத்தில் 39.75% மான நிலப்பரப்பே விவசாயத்திற்கு பயனுள்ள அல்லது பயன்படுத்தப்படக்கூடிய நிலப்பரப்பாகும். மழையை நம்பி நெற்செய்கை செய்யப்படும் பிரதேசமாக 12,000 ஹெக்டேயர் நிலப்பரப்பு உள்ளது. ஆயினும் இப்போது 9,135 ஹெக்டேயர் நிலப்பரப்பே நெற்செய்கை செய்யப்படுகிறது. 1992ல் 4,082 ஹெக்டேயர் நிலத்தில் வெங்காயம் செய்கை பண்ணப்பட்டது. இப்போது இந்நிலத்தில் 25வீத பகுதியிலேயே வெங்காயம் பயிர் செய்யப்படுகிறது. கடந்த 10 ஆண்டுகளும் மிளகாய் செய்கை 84.4% விழுக்காடு கண்டுள்ளது. 231 ஹெக்டேயர் நிலத்தில் செய்கை பண்ணப்பட்ட முந்திரிகை செய்கை 22 ஹெக்டேயர் அளவுக்கும், 600 ஹெக்டேயர் நிலத்தில் செய்யப்பட்ட வாழைப்பயிர்ச்செய்கை 325 ஹெக்டேயர் அளவுக்கும் வீழ்ச்சி கண்டுள்ளது.

பயிர்ச் செய்கைக்குகந்த பிரதேசங்களான செம்மண் பிரதேசங்களில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகள் பல விவசாயிகளை இடம் பெயர வைத்துள்ளன. கோப்பாய், சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள பல விவசாயிகள் தமது விவசாய நிலங்களை விட்டு வெளியேறிவிட்டதும் விவசாய இடுபொருட்கள் மற்றும் தெளிமருந்துகள் மீதான தடைகளும் விவசாயத்துறையை பெருமளவு வீழ்ச்சியடையச் செய்துள்ளன.

கோழி வளர்ப்பு, மந்தை வளர்ப்பு என்பனவும் யுத்த நிலைமைகள் காரணமாக பெருமளவு வீழ்ச்சி அடைந்துள்ளன. 1982 இல் 43,350 மெற்றிக் தொன் (இலங்கையின் மொத்த பாவனையில் 24%) மீனை வழங்கிய மீன்பிடித் தொழில் யுத்தம் காரணமாக 1991 இல் 1111மெ.தொன் ஆக குறைந்திருந்தது. யாழ் குடாநாட்டு மீன் பாவனைத் தேவை (6000 மெ.தொன்)யை கூட இது நிவர்த்திக்கப் போதுமானதாக இல்லை. இப்போதோ (1994) கிட்டத்தட்ட மீன்பிடி இல்லை என்றே சொல்லிவிடலாம்.



# சிதையுண்ட யாழ்ப்

## யுத்தத்தினால் சிதையுண்ட யாழ் மாவட்டத்தின் சமூக பொ குறித்த சில தகவல்கள்

மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மொத்த சனத்தொகையான 107,177 பேரில் 75% மானோருக்கும் இப்போது எந்த விதமான வருமான வாய்ப்புகளும் இல்லாத நிலையே நிலவுகிறது.

இராணுவ நடவடிக்கைகள் நடைபெறும் இடங்களிலிருந்து மக்கள் இடம் பெயர்வதே இம்மாவட்டம் முகம் கொடுக்கும் பாரிய பிரச்சினையாகும்.

### இடம்பெயர்வு

குடா நாட்டின் சனத்தொகை செறிவாகக் காணப்படும் தீவுகளான ஊர்காவற்துறை, வேலணையின் இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகியவற்றிலிருந்து பெரும்பாலான மக்களும், தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய், மருதங்கேணி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்து குறைந்த எண்ணிக்கையிலான மக்களும் இடம் பெயர்ந்துள்ளனர்.

01.07.1994ற்குள் 264,335 பேரைக் கொண்ட 79,834 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. அவற்றில் 37,767 பேரைக் கொண்ட 8,968 குடும்பங்கள், அரசாங்க சார்பில்லாத நிறுவனங்களது உதவியுடன் அரசாங்கத்தினால் பரிபாலிக்கப்படும் நலன்புரி நிலையங்களில் உள்ளன. எஞ்சிய இடம்பெயர்ந்தோர் தமது உறவினர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகளுடன் தங்கியுள்ளனர். யாழ். மாவட்டச் சனத்தொகையின் மூன்றிலொரு பங்கினர் அம் மாவட்டத்தினுள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர்.

பிற மாவட்டங்களிலிருந்து 6186 குடும்பங்கள் யாழ் மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்துள்ளன. பிரதான மாகத் திருகோணமலை மாவட்டத்திலிருந்து 1990ல் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் இடம் பெயர்ந்தவர்களே இவர்கள்.



இருப்பிட

வெவ்வேறு
டும் இடை
கப்பட்ட ரா
காரணமாக
மக்கள் தமது
தையும் விட்
னர். இவ்வ
குடும்பங்கள்
மட்டுமன்றி
மான வழி
தற்போதைய
வேலை வா
லாததனால்
குள்ளாகியுள்

சீமெந்தும் க
கிடைக்கப்
திற்கு ஒன்ற
வான கிடு
இருப்பிடங்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தி

களில், வேறுப
களில் ஆரம்பிக்
நடவடிக்கைகள்
பகுதிகளிலுள்ள
மைகள் அனைத்
டுத் தப்பியோடி
டம் பெயர்ந்த
உடமைகளை
பிரதான வரு
இழந்துள்ளனர்.
லயில் புதிதான
ள் எதுவும் இல்
னை நெருக்கடிக்

பொருட்களும்
னால் குடும்பத்
10'X12' அள
ன கொட்டில்
டுமே வழங்கப்

பட்டுள்ளன. இவற்றை அமைப்பதற்கான நிதி அரசாங்க, அரசாங்க சார்பில்லாத நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்றன. பற்றாக்குறை காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களைத் தமது உறவினர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகளுடன் தங்குவது ஊக்குவிக்கப்பட்டது. அவ்வாறாகத் தங்கும் வசதி கிடைக்காதவர்களுக்கு மட்டுமே நலன்புரி நிலையங்களில் தங்க இடமளிக்கப்பட்டது. நிதி நெருக்கடி காரணமாக இந் நிலையங்களில் போதியளவு மலசல கூட, குடிநீர் வசதிகளை வழங்க இயலவில்லை. கிடுகுக் கொட்டில்களின் கூரை வருடத்துக்கொரு முறை மாற்றீடு செய்யப்பட வேண்டியதோடு பிற திருத்த வேலைகளும் அவசியமானவையாகும். பனை மரப் பலகைகளும், கிடுகளும் பாரிய விலை

னவற்றின் முழுத் தேவையும் குடாநாட்டுக்கு வெளியேயிருந்தே கொண்டு வரப்படுகிறது. குறிப்பாக யாழ். மக்களினால் விரும்பப்படும் கைக்குத்தரிசி, நாட்டரிசி, அருகிலுள்ள கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்பட்டே மீதி அரிசித் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. வட பகுதிச் சந்தையைக் கருத்திற் கொண்டே இவ்வகை அரிசி இந் நான்கு மாவட்டங்களில் விளைவிக்கப்படுகின்றன.

தற்போது யாழ் மாவட்டத்தில் 722,593 பேரளவில் உள்ளனர். கிளிநொச்சி மாவட்ட நிர்வாகத்தின் பகுதியான பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆனையிறவுக் கூடான தரை வழிப் பாதையின் மூடுகை காரணமாகக் கிளிநொச்சியிலிருந்து தொடர்பற்றதால் பளை உ.அ.அ. பிரிவைச் சேர்ந்த சனத்தொகையான 25,000 பேரை யாழ் மாவட்ட நிர்வாகமே உணவளித்துப் பராமரிக்கிறது.

பிரதான நிலப் பகுதியிலிருந்து யாழ் குடா நாட்டுக்கான தரைவழிப் பாதையின் மூடுகையின் காரணமாக எல்லா அத்தியாவசிய உணவுப் பொருட்களுமே கொழும்பிலிருந்தும், திருகோணமலையிலிருந்தும் கப்பல் மூலமாகப் பருத்தித் துறைக்குக் கொண்டு வரப்பட்டே குடாநாட்டில் விநியோகிக்கப்படுகின்றன.

இழுபட்டுக் கொண்டிருக்கும் மோதல் காரணமாக இம் மாவட்ட மக்களின் வருவாய் படிப்படியாகக் குறைந்துள்ளது. மக்களில் சில பகுதியினர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சனத்தொகையின் பெரும்பகுதியினரது வருவாய் மிக கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டதால் அவர்களது முழுத் தேவைக்குமான உணவை வாங்கக் கூடிய வழி அவர்களுக்கு இல்லை. பலர் ஒரு வேளை உணவை அல்லது குறைந்தளவு உணவையே உட்கொள்கின்றனர். காலை உணவின்றிப் பிள்ளைகள் பாடசாலைக்கு வருவதாக ஆசிரியர்கள் பலர் கூறியுள்ளனர்.

### போசாக்கின்மை 67.75%

சுகாதார அதிகாரிகளாலும், யாழ் பல்கலைக் கழகத்தாலும் நடத்தப்பட்ட ஒரு மதிப்பீட்டின் படி யாழ் மாவட்டப் பிள்ளைகள் மத்தியில் போஷாக்கின்மை ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்து வருவதற்கான உறுதியான அறிகுறிகள் உள்ளன. இடம் பெயர்ந்துள்ள குடும்பங்களின் நலன்புரி நிலையங்கள் சிலவற்றில் நடத்தப்பட்ட மதிப்பீடுகளிலிருந்து 5 வயதுக்குட்பட்ட பாடசாலை செல்பவர்கள் மத்தியில் அவர்களினுடைய எடைக்கும், வயதுக்குமிடையிலான கணிப்பீட்டின்படி போஷாக்கின்மை மட்டம் 67.75% வரை உயர்ந்துள்ளது. இவ்வீதம் இம்மாவட்டத்தினதும், இலங்கையினதும் முன்னைய புள்ளி விபரங்களுடன் ஒப்பிடுகையில் மிக உயர்வானதாகும். இந்நிலைமை மிகுந்த கவலை தருவதாகும்.

### சிதைக்கப்பட்ட தொழிலகங்கள்

1983 முதல் தொடர்ச்சியான அமைதியின்மையும் வர்த்தக

இயந்திரங்களதும், அவற்றை இயங்க வைக்கத் தேவையான பொருட்களதும் குறைபாடு விவசாய உற்பத்தியைப் பாதித்ததுடன் இது விவசாயிகளின் வருமானத்தில் பாரிய வீழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதால் இவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டார்கள். மீன்பிடித்தலுக்கான வசதிகள் வெகுவாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் மீன் பிடித் தொழிலில் மும்முரமாக ஈடுபட்டிருந்த 17,000 குடும்பங்கள் தமது பாரம்பரிய வருமான வழியைத் தற்போது இழந்துள்ளனர். அவர்கள் தற்போது மிகுந்த ஏழ்மை நிலையில் வாழ்கிறார்கள். பெற்றோல், டீசல், சீமெந்து, கட்டிடப் பொருட்கள் மீதான மொத்தத் தடையும் மின் விநியோகத் தடையும் அனைத்துத் தொழிற்சாலைகளதும் ஏனைய நிறுவனங்களதும் மூடுதலுக்கு வழி சமைத்தன. இது ஆயிரக்கணக்கானோர் வேலையிழக்கக் காரணமாயிற்று.



### பொருட்சேதம்

1994 ஜனவரி முதல் மார்ச் காலப்பகுதி வரை எடுக்கப்பட்ட துரித மதிப்பீட்டின்படி படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை விடுத்து யாழ் மாவட்டத்தில் உற்பத்தி, தயாரிப்பு, வர்த்தகம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட தனியார் துறைச் சொத்துக்கள் மீது விளைவிக்கப்பட்ட சேதம் ரூபா 2,126 மில்லியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தனியார் துறைச் சொத்துக்களுக்கு விளைவிக்கப்பட்ட பாரிய சேதத்துக்கு இது உதாரணமாகும்.


மேற்குறிப்பிட்டுள்ள நிலைமைகளிலிருந்து இம்மாவட்டத்தில் வேலை, தொழிலுக்கான வாய்ப்புக்கள் இல்லையென்பதைக் காணலாம். உண்மையிலேயே அங்கு

கையில் 1/3 பங்கு வகிக்கும் இடம் பெயர்ந்த குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளை வழங்குவதில் பிரதான சிரத்தை கொண்டுள்ளதோடு, மாவட்டத்தின் மக்களுக்கான மிகத் தேவையான உணவுப் பொருட்களை வழங்குவதிலுமே மாவட்ட நிர்வாகம் கவனம் செலுத்துகிறது.

இப்போதுத் துறைக் கட்டிடங்களின் புனர்நிர்மாணத்துக்கான செலவாக மொத்தம் கணக்கிடப்பட்டுள்ள தொகை ரூபா 2,587மில்லியனாகும். அதனுள் பாரிய பாதிப்புக்குள்ளான உள்ளமைப்புகளுக்கான சேதங்கள் உள்ளடக்கப்படவில்லை. அவையாவன, வீதிகள் புகையிரத சேவை, வடிகாலமைப்பு, நீர்வழங்கல் விநியோகம், மின்சக்தி விநியோகம், தொலைத்தொடர்புச் சேவை, போக்குவரத்துச் சேவைகள் மாவட்டத்தின் புனருத்தாரணத் தேவைகளின் இறுதிக் கணக்கெடுப்பு நடத்தப்படும்

# ...ணம்!

## ...ளாதார நிலைமைகள்



யேற்றம் கண்டுள்ளதாலும் நிதிப் பற்றாக்குறையாலும் இவற்றை மேற்கொள்ள முடியாதுள்ளது.

இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் இலவசமாகவே வழங்கப்பட்டாலும் அவற்றின் அளவுகள் போதியளவானதாக இல்லை.

இடம்பெயர்ந்த பாடசாலை செல்லும் பிள்ளைகளின் கணக்கிடப்பட்ட எண்ணிக்கை 66,000 ஆகும். பாடசாலைகள் நடத்த தற்காலிக கிடுகுக் கொட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிலர் தற்போதுள்ள பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிறு அளவு தளபாடங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதுடன் மேலதிக இடவசதி, தளபாடங்கள், புத்தகங்கள் ஆகியவை வழங்கப்படுவது. மிக அவசரமானதும் அவசியமானதுமாகும். பிள்ளைகள் தமது கல்வியைத் தொடரத் திருப்திகரமான ஏற்பாடுகள் செய்யப்படாவிட்டால் அவர்கள் திசைமாறிச் சமூகப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கலாம்.

இன்னொரு கரிசனைக்குரிய விடயமானது, நலன்புரி நிலையங்களிலும் இட நெருக்கடியான வீடுகளிலும் நேரத்தை வீணாகக்கழிக்கும் இடம் பெயர்ந்த நபர்களுக்கும் பொழுது போக்கு, நூலக வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தன் அவசியம் பற்றியதாகும். வீணாக நேரத்தைக் கழிப்பவர்களின், குறிப்பாக இளைஞர்கள் சமூக விரோத தீய பழக்கவழக்க நடவடிக்கைகளுக்குத் திசைமாறிச் செல்லும் போக்கு உள்ளது.

### உணவுப் பற்றாக்குறை

யாழ் மாவட்டத்துக்குத் தேவையான அரிசியில் 10% மட்டுமே அங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. மிகுதித் தேவையான அரிசியும், கோதுமை மா, சீனி, பருப்பு ஆகிய

தனியார் வர்த்தகர்களும் கூடவே ஒரு சில அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கப்பல் மூலம் கொண்டு வந்து பகிரங்க சந்தையில் விற்கின்றனர். சில வர்த்தகர்கள் சிறு அளவு உணவுப் பொருட்களைக் கிளாலி ஏரியினூடாகக் குடாநாட்டினுள் கொண்டு வருகின்றனர். தனியார் படகுகளினால் ஏரியைப் பயன்படுத்துவதைக் கூட்டுப் படைத் தலைமையகம் தடை செய்துள்ளதால் கிளாலியினூடாக போக்குவரத்து மிகுந்த அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் அதிக செலவுடனேயே நடத்தப்படுகிறது. தனியார் வர்த்தகர்களினால் கொண்டு வரப்படும் உணவுப் பொருட்கள் ப.நோ.கூ. சங்கத்தில் விற்கப்படும் விலையை விட மிகக் கூடிய விலையிலேயே பகிரங்க சந்தையில் விற்கப்படுகிறது.

வருடாந்த அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தேவை 135,492 மெற்றிக் தொன்கள் ஆக இருந்த போதும் 1993இல் கப்பலில் கொண்டு வரப்பட்டதோ 81,159 மெற்றிக் தொன்களேயாகும். 54,333 தொன்கள் குறைவானதாகும்.

கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் குடாநாட்டில் வாழும் சனத்தொகையான 747,593 பேரது முழுத் தேவையையும் சமாளிக்கப் போதுமானதாக இல்லையென்பதுடன் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட அளவு தேவையின் ஒரு பகுதியை மட்டுமே சமாளிக்கப் போதுமானதாகும். தனியார் வியாபாரிகளினால் கொண்டு வரப்படுபவை மிகச் சிறிய தொகையாகும். இதன் விளைவாக மக்கள் தமது அத்தியாவசிய உணவுப் பொருட்களின் முழுத் தேவைகளையும் பெற்றுக் கொள்ளப் பல கஷ்டங்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது.



நிலையங்கள், நிறுவனங்கள் மீதும் பாரியளவிலான சேதம் விளைவிக்கப்பட்டது. யாழ்.மாவட்டத்தினதும், அருகிலுள்ள மாவட்டங்களினதும் தேவைகளைச் சந்திக்கப் போதுமானளவு உற்பத்திகளை மேற்கொண்ட இரு பெரும் சீமெந்துத் தொழிற்சாலைகளும் அஸ்பெஸ்ரஸ் (asbestos) தொழிற்சாலையினதும் இயக்கம் நிறுத்தப்பட்டது. மேலும் அங்கு பல புடவை, அலுமினிய கண்ணாடித் தொழிற்சாலைகளும், ஏனையபிற சிறு அளவிலான நிறுவனங்களும், இனிப்புத் தின்பண்டங்கள் தயாரிக்கும் நிறுவனங்களும் கூடவே இயக்கத்தை நிறுத்தின.

பாரிய வேலையில்லாப் பிரச்சினை நிலவுகிறது.

விமானத் தாக்குதல், ஷெல் அடிகள், வன்முறைகளினால் பொதுத் துறைக் கட்டிடங்களுக்கு விளைவிக்கப்பட்ட சேதங்கள் காரணமாக பொதுத் துறை நிறுவனங்களின் இயக்கம் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வன்முறை பாரிய திருப்பு முனைக்கு உள்ளான போது 1990 ஜூனிற்குப் பின்பு நிலைமை மிக மோசமடைந்தது. பின் தொடர்ந்த நிகழ்வுகள் பொதுச் சேவையை மிகக் கடுமையாகப் பாதித்தன.

தற்சமயம், மாவட்டச் சனத்தொ

போது படையினரது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளும் உள்ளடக்கப்பட்டு, முழுமையாக மாவட்டம் உள்ளடக்கப்படும் போது அதற்குத் தேவையான நிதி மிகப் பாரியதாகும்.

வாடகைக் கட்டிடங்களிலிருந்த போது சேதத்துக்குள்ளான அரசாங்கக் காரியாலயங்களை வேறிடங்களில் இயங்க வைக்கத் தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வெளிக்கள உத்தியோகத்தர்கள் சைக்கிள்களில் சென்று தமது கடமைகளைச் செய்கின்றனர். தொலைபேசி, தொலைத் தொடர்பு

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையக அரசியல் சமூக கலாசார அமைப்புகள்

மக்கள் மத்தியில், சங்கத்தினர் விரிவாக விளக்கி, மக்களைத் தங்கள் பால் ஈர்ப்பதற்காக பிரச்சாரக் கூட்டங்களை நடத்தினர். தோட்டங்கள் தோறும் கிளைகளை அமைத்தனர். **''இளைஞன் குரல்''** என்ற பத்திரிகையைத் தங்கள் அமைப்புக்கென வெளியிட்டனர். அதன்மூலம் சங்கத்தின் கொள்கைகளையும், மலையகத்தின் பிரச்சினைகளையும் துணிவுடன் வெளியிட்டனர். இதன் ஆசிரியராக 'எல்லாளன்' செயல்பட்டார். இவரின் தலையங்கங்கள் மக்களின் மனநிலையை, மலையகத்தின் நிலைமைகளை எடுத்துக்காட்டுவனவாக அமைந்தன.

ஆங்காங்கே நடக்கும் அநீதியான செயல்களை வெளிக்கொணர்ந்தது இப்பத்திரிகை இதனால் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுப் பவனி வந்தது. இப்பத்திரிகையில் வெளிவந்த செய்திகளைக் கண்டு சில தொழிற்சங்கங்கள் துணுக்குற்றன. முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்ற அவர்களின் தாரகமந்திரத்திற்கேற்ப செயல்படத் தொடங்கினர். முளையைக் கிள்ளினால், செடி செழிப்பாக வளரும் என்பதைக் கவனத்தில் கொள்ள மறந்து விட்டனர். அன்று மலையகத்தின் எழுச்சிக் குரலைக் கேட்டுத் தாங்க முடியாதவர்கள் மலையகத்தில் விழிப்புணர்ச்சி வேண்டும், கல்வித்துறையில் வளர்ச்சிகாண வேண்டும் என்றெல்லாம் இன்று கூக்குரலிடுவது அவர்களின் போலி உணர்வு என்பது தெளிவாக விளங்குகின்றது.

''இளைஞன் குரல்'' என்ற பத்திரிகையை அச்சடித்துக் கொடுக்க அச்சகங்கள் மறுத்தன. அவர்களின் பயத்தினால் பத்திரிகை தொடர்ந்து வெளியிடமுடியாத நிலையேற்பட்டது. ''இளைஞன் குரல்'' பத்திரிகையை எப்படியும் வெளியிட வேண்டும் அதன் மூலம்தான் மக்களின் உணர்வுகளையும் பிரச்சினைகளையும் வெளிக்கொணர முடியும் என்ற தாகத்தினால் இச்சங்கத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் ஒன்றுகூடி ஒரு தனியான அச்சகத்தையே உருவாக்க திட்டமிட்டனரென்றால் அவர்களின் உறுதியான கொள்கை எவ்வளவு உணர்வுபூர்வமானதாக இருந்திருக்கின்றது என்பதனை அறிந்து கொள்ள முடியும். **''வெண்ணிலா''** அச்சகம் என்ற பெயரில் வட்டகொடையில் ஆரம்பிக்கப்பட்டு அது சுயநலக் கும்பல் ஒன்றின் பிரவேசத்தால் சில காலங்களின் பின்னர் மூடப்பட்டது.

இந்த ''இளைஞர் தமிழ் சங்கம்'' முழுக்க முழுக்க தோட்டப்புற இளைஞர்களைக் கொண்டே அமைக்கப்பட்டது. வட்டகொடை, தலவாக்கொல்லைப் பிரதேசத்தைப் பிரதானமாகக் கொண்டு இயங்கியது. இவ்வியக்கத்தின் செயல்பாட்டினை, தொழிற்சங்கங்கள் அவதானித்த வண்ணம் இருந்தது மட்டுமல்லாமல் இச்சங்கத்தின் செயற்பாடுகளை தோட்டப்பகுதியில் விஸ்தரிக்கப்படவிடாமல், தோட்டத்தலைவர்கள் மூலம் முட்டுக்கட்டை போட்டுத் தடுத்தனர்.

இக்காலப் பகுதியில் வடகிழக்குப் பகுதியில் தமிழரசுக் கட்சி, தமிழ் மொழியும் அரசகரும மொழியாக்கப்படல் வேண்டும் என்று போராடிக் கொண்டிருந்தது. தமிழ் மக்கள் உள்ளத்தில், தமிழ் உணர்வினை தட்டி எழுப்பிய போராட்டத்தின் ஒரு கட்டமாக 1961ம் ஆண்டில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடாத்தியது.

# முளையிலேயே கிள்ளி..

## தமிழுக்கு சம அந்தஸ்து வேண்டும்:

தமிழர்கள் இலங்கையில் சகல உரிமைகளுடன் வாழ வேண்டுமென நீண்டகாலமாக குரலெழுப்பிக் கொண்டு வந்தனர்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பெரும்பான்மையாகச் செறிந்து வாழும் தமிழர்கள் பாரம்பரியமாக அப்பகுதியை பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இவர்கள் யாழ்ப்பாண ராஜ்ஜியத்தை ஆண்டு தங்களுடைய தேவைகளை தாங்களே பூர்த்தி செய்த வரலாற்றை அனைவரும் அறிவர். இவர்களின் ராஜ்ஜியத்தை போர்த்துக்கேயர்கள் 15ம் நூற்றாண்டில் கைப்பற்றி இலங்கையின் கரையோர ராஜ்ஜியத்துடன் இணைத்து நிருவாகம் செய்தனர். இவர்களுக்குப் பின்வந்த ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் தொடர்ந்து அவர்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தனர். 1815ம் ஆண்டு கண்டி ராஜ்ஜியத்தையும் கைப்பற்றி நிருவாக வசதிக்காக இலங்கையை ஒரே ராஜ்ஜியமாக ஆக்கிக் கொண்டனர். 1948ல் ஆங்கிலேயர் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கியபோது இந்த வரலாற்று உண்மையை மனதில் கொள்ளவில்லை. இதனால் இன்று வடகிழக்கில் வாழும் தமிழர்கள் பல பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை உருவாகியது. இந்நிலை உருவாகும் என்பதை உணர்ந்தே, நமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு ஜி.ஜி.பொன்னம்பலம் இலங்கையில் சோல்பரி அரசியல் திட்டத்தை உருவாக்கும் போது; பாராளுமன்றத்தில் ஐம்பதுக்கு ஐம்பது பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். அது தோல்வியைத் தழுவியது.

இலங்கை சுதந்திர நாடாகிய பின் தமிழர்கள் இந்நாட்டில் பின் தள்ளப்பட்டனர். வட கிழக்குப் பகுதியில் சிங்கள மக்களைக் குடியேற்றி இப்பகுதிகளின் தமிழர்களை சிறுபான்மையாக்கும் . நோக்கத்தை ஆட்சியாளர்கள் நடைமுறைப்படுத்தினர். இதனால் தமிழர் தங்கள் பிரச்சினைகளைத் தங்களே தீர்த்துக் கொள்ள வேண்டுமெனக் கருதி, சுதந்திர இலங்கையில் சமஷ்டி அமைப்பு முறையைக் கோரினர். அதனை அடிப்படையாகக் கொண்டு ''தமிழரசுக் கட்சி'''யை உருவாக்கினர். இதேவேளை S.W.R.D பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் ஆட்சி மொழியென்ற கோஷத்தை முன்வைத்து கட்சி அமைத்து 1956ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றார். ஆட்சியையும் அமைத்தார். தமிழரசுக்கட்சி 14 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்று தமிழர்களின் தனிப்பெரும் கட்சியாகத் திகழ்ந்தது. பண்டாரநாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டுச் சேர்ந்து மக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சியை அமைத்தது. ஆட்சிக்கு வந்ததும் சிங்களத்தை ஆட்சிமொழியாக்கியது. தமிழும் ஆட்சிமொழியாக்கப்பட வேண்டுமென தமிழரசுக் கட்சி போராடியது. இதனால் 1958ம் ஆண்டில் முதன் முதல் இனக்கலவரம் இலங்கையில் நடைபெற்றது. பல அழிவுகள் ஏற்பட்டன. இதன் பின்னர் சிங்களவர்கட்கும், தமிழர்கட்குமிடையே வெளிப்படையான வெறுப்பு ஆரம்பமாகியது, தமிழரசுக் கட்சி, படிப்படியாக தமது போராட்டத்தை ஆரம்பித்தது.

1961ம் ஆண்டில் தமிழுக்கும் சம அந்தஸ்து வேண்டுமென சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தனர். கொழும்பு காலிமுகத்திடலில் தந்தை செல்வநாயகம் தலைமையில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது, அது முறியடிக்கப்பட்டது, ஆனால் யாழ்ப்பாண மண்ணில் இப்போராட்டம் வெற்றிகரமாக நடந்தது. தமிழர்களிடையே உத்வேகத்தை ஏற்படுத்தியது, தமிழர்கள் கொதித்தெழுந்தனர். ''தமிழா விழித்தெழு'' என்ற கோஷத்துடன் கிளர்ந்தெழுந்தனர்.

**வி.ரீ. தர்மலிங்கம்**

# உஸ்மான் மரிக்காரின் இரண்டு கவிதைகள்

## ஒரு கவிஞனின் வாக்குமூலம்

நான்
எங்கும்
நீக்கமற நிறைந்திருக்கும்
நீக்ரோப்பட்சி

தூங்கும் பூமியைத்
தட்டியெழுப்பும்
வைகறைப்பறவை

நான்
கிளிகளைப்போல்
கூண்டுகளை அங்கீகரிப்பதில்லை
குயில்களைப்போல
கூடுகளை நிராகரிப்பதுமில்லை

இன்னும்
அந்நியக் கூடுகளில்
அநாமதேய முட்டையிடுவதுமில்லை

எனது முட்டைகளை
நானே அடைகாத்து
குஞ்சு பொரித்து
குடும்பம் நடத்துகிறேன்


எனது நடை
அன்ன நடையுமல்ல;
ஆனை நடையுமல்ல;
அது
எனக்கு மட்டுமே
சொந்தமான தனிநடை

நான்
புறாக்களைப்போல
அந்நிய மாடங்களில் வசிப்பதில்லை
நான் விரும்பும் மரக்கிளையில்
எனது கூட்டை
நானே கட்டிக்கொள்கிறேன்

எனக்கு இஷ்டமான பாஷையில்
என் சொந்தப்பாணியில்
கர்வத்தோடு கரைகிறேன்
க்கா...க்காகா...க்காகாகா!



-முரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# வேப்பமரம்

**சரிநிகர் நடாத்திய சிறுகதைப் போட்டியில் 3ம் பரிசு பெற்ற சிறுகதை**

## ஓட்டமாவடி அறபாத்

கொஞ்ச நாட்களாக மனசுக்குள்ள ஒரே அரிப்பு. ராவக்கெல்லாம் நித்திரயும் வாரதில்ல. அவளைப்பற்றித்தான் சதா நெனப்பெல்லாம். பாயில் சுருண்டு கிடந்தேன். நுளம்பு வந்து காதுக்குள்ள தொண தொணத்தது. ராவெல்லாம் மூட்டைக் கடி. இப்ப நடுச்சாமம் மூணு மணி இருக்கும் போல. முன்பென்றால் அவள் கைவிளக்க எடுத்து வந்து என்ட பக்கத்தில குந்தி, நுளம்ப விரட்டுவாள்- காலுக்குள்ள சிக்குப் பட்டு வழுவி கிடக்கிற துப்பட்டிய எடுத்து கழுத்து வர மூடுவாள். மூட்டை பூச்சிய தேடித் தேடி நசுச்சிப் போடுவாள்.

என்ட தலகாணிய சரியா வச்சி, அடர்த்தியான தலய அவள்ர விரலால கோதிக் கோதி, நித்திரயாக்கி அவள் எத்துன மணிக்கு தூங்குவாளோ [illegible]யாது. கும்பிலாம்புடன் அவள் நடந்து வந்தால் எனக்கு ''நைட்டிங் கேர்ள்''ர நெனப்புதான் வரும். சனியன் புடிச்ச நித்திர வருகுதும் இல்ல. மோட்டுல எலிகள் ஓடுர சத்தமும், பூனை மறியேறுர சத்தமும் எரிச்சலைத் தான் தந்தது. சின்னப்புள்ளயல் கத்துற மாதிரி இந்த பூனட கரச்சல். ஜன்னலுக்குள்ளாள மாமரம் அசைந்தது. எல்லா இலயிலும் அவள் அசையிற மாதிரி, பூவெல்லாம் அவளப் போலவும் மாவடுக்களெல்லாம் அவள்ர சாயல் மாதிரியும். ஒரே பிம்பமாய் நெளிகிறாள்.

''பக்குல்'' என்ட கிணத்தடிய கேவிக் கேடி கத்துது. யாரு மௌத்தோ. அவள் இருந்தா பக்குல கத்த விடாம உப்புக்கல்ல அடுப்புக்குள்ள போட்டு அது டப்டப் என வெடிக்கும் சத்தத்தில துரத்துவாள். 'பக்குல்' கத்துனா யாருண்டாலும் மௌத்தா போவாங்களாம். அவள் எனக்கு விளங்கப்படுத்துவாள். எழும்பி துரத்தனும் போல இருந்திச்சி. சரியான சோம்பலாகவும், பயமாகவும் வந்தது. இப்பிடி எத்துன நாளக்கி தனியா படுக்குற, கனவெல்லாம் அவள்ர உருவம் தான். கிணத்தடிக் கட்டுல அவள் என்ட களிசான் சேர்ட் கழுவுற மாதிரியும், முதுகுக்கு ஊத்த தேச்சி குளிக்க வாத்துர்ர மாதிரியும் மாறி மாறி காட்சிகள் வருகின்றன. சரியான பசியா இருக்கு. எழும்பி குசினிக்குள்ள போனன். நேத்து பின்னேரம் கொணந்த பாண் காய்ஞ்சி கிடந்தது. பானைக்குள்ள ஒரு சொட்டும் தண்ணியும் இல்ல. வெளிய போகவும் அச்சமாயிருந்தது. அவள் இருந்தா மூத்திரம் பேய எழுப்பி கூட்டிட்டு போவாள். இப்ப கனவு கண்டு பாயில பேய்ஞ்சி நான்தான் விடிய எழும்பி கழுவணும். வயித்த குமட்டும்.

பாவம் அவள் என்ட மூத்திர களிசானை எப்படி கழுவி வைப்பாள். எனக்கு அழுகை வரப் பார்த்தது. சங்கத்துல வாச்சர் நாலு மணிக்கு 'பெல்' அடிக்கிறது கேட்டது. புரண்டு படுத்தேன். சுபஹுக்கு பாங்கு கேட்டா பேயெல்லாம் காட்டுக்கு ஓடுமாம். என்ட கூட்டாளி நாதன் சொன்னான். இன்னும் கொஞ்சத்தால பாங்கு கேட்கும். வெளிய போய் தண்ணி எடுக்கணும். மூத்திரமும் முடுக்குது. வெடிக்கப் போற மாதிரி இருக்கு. காலை யாரோ நக்குறதப் போல வழவழப்பாய் இருந்தது. வெடுக்கென இழுத்து, தலமாட்டில இருக்கிற 'லாம்ப' எடுத்துப் பார்த்தன். என்ட செல்லப்பூனைதான்.

அதுக்கும் பசி போல பாணைக் குடுத்தாலும் தின்னாது. விடியட்டும் ஆராவது மீன் அறுப்பாங்க தலய கேட்டு இதுக்கு குடுக்கனும், என்ட வளவுக்குள்ள, ஒரு மூலையில வேப்பமரம் ஒன்னு நிற்குது. அதுல 'வைரவன்' இருக்குதாம். அதுக்கு வெள்ளிக்கிழமை ராவயில சுருட்டு வாங்கி வைப்பாள். அதான் கள்ளன் வராம வூட்ட காப்பதுதாம். வெளியாக்கள் யாரும் ராவயில வந்தா 'வைரவன்' அச்சங் காட்டுமாம். அவள் சுருட்ட வேப்ப மரத்தில வச்சிட்டு வருவாள். நான் தள்ளி நிற்பேன். ''சுருட்டு கொளுத்த நெருப்புப் பொட்டி வக்கல்யா..? நான் கேட்பேன். கன்னத்தில் குழி விழ வசீகரமா சிரிப்பாள். என்னை அள்ளி முகம் முழுக்க அவள்ர மூக்கால உரசுவாள்'' கண்ணா அது வைரவன் பத்த வைக்கும். அதுர கண்ணுல நெருப்பு இருக்குதாம்.

எனக்கு வெலவெலக்கும் புறாக் குஞ்சப் போல அவள்ர புடவைக்குள்ள சுருண்டு கொள்வேன். ஆறு மணி ஆகினா வேப்பமரத்த பார்க்கவே மாட்டன். விடியப் போய் பார்த்தா சுருட்டு இருக்காது. சுபஹுக்கு பாங்கு கேட்டு மிச்ச நேரம் போல, கதவு இடுக்குக்குள்ளாள அந்த வேப்பமரம் அசைந்தது. நான் வெளியே வந்தேன். புழக்கட்ப் பக்கமா மூத்திரம் பேஞ்சிட்டு கோப்பையில தண்ணி எடுத்து பாணை தொட்டு தின்டன். தொண்டைக்குள் இறுகியது. பச்சத் தண்ணியில பாணைத்திண்டா என்ன செய்யும். குமட்டியது. பசிவேற, வேற என்னத்த தின்னலாம். அப்படியே போட்டிட்டு படுத்து விட்டேன். அவள்ர புடவையெல்லாம் இண்டக்கி நல்லா மடிச்சி வக்கணும். புத்தகம், பேப்பரெல்லாம் வித்தாலும் சோறாவது வாங்கித் தின்னலாம். குசினிக்குள்ள ''கீச்கீச்''சென்று ஒரே அலறல். எழும்பிப் போய்ப் பார்த்தன். பரணுக்கு மேல, எலியப்புடிச்சி பூணை தின்னுக்கிட்டு நின்றது. மெல்ல எழும்புறன். தகரப் பெட்டிக்குள்ள அவள்ர புடவையெல்லாம், அசிங்கமாக கிடந்தது. அண்டக்கி சாச்சி வந்து ரெண்டு புடவையை கொண்டு பெய்த்தா. என்ட உசிரே போற மாதிரி. இனி யாருக்கும் ஒரு துணியும் குடுக்கப்படாது. தகரப்பொட்டிற திறப்பை தலவாணிக்குள்ள ஒளிச்சி வச்சன். உறைய அவுட்டு திறப்ப எடுத்து புடவையெல்லாம் மடிச்சி வடிவா அடுக்கினேன். அவள்ர பாவாடையெல்லாம் கீழ மடிச்சி போட்டு, புடவையையும், சட்டைகளையும் மேலே வச்சன். இனி திறக்கவே கூடாது.

ஆறு மணிக்கு நான் பல்லுத் தீட்டி, முகம் கழுவனும். இல்லாட்டி அவளுக்கு கோவம் வரும். ''பிரஷ்சில மருந்த பீச்சித் தருவாள். மணக்கட்டி சவுக்காரமும் தந்து கிணத்தடிய கூட்டிட்டு போய் நல்லா முகத்த தேய்க்க சொல்லி, தண்ணிய அள்ளி ''குறச்சி''க்குள்ள ஊத்துவாள். இப்ப பற்பொடியும் இல்ல. தேங்கா தும்ப எடுத்து பல்லை தேச்சன். என்ட மூத்த வாப்பா தேய்ப்பதைப் போல கொடுப்புக்குள்ள போட்டு தேச்சி, முகம் கழுவி, பழைய சாரத்துல துடச்சிட்டன். எனக்கெண்டு பூ துவாய் இருந்தது. இப்ப அதுலதான் பூனை குட்டி போட்டிருக்கு.

வாசல்ல ஒரே இலைகள். கூட்டுமாத்தயும் காணல்ல. வேப்பமரத்துல சாத்தியிருந்தது. எனக்கு இப்ப அதுக்குகிட்ட போக சரியான பயம். வைரவனுக்கு சுருட்டு வக்கல்ல என்ட பயமில்ல. அது வேற பயம். சைக்கிளால இலைகளை குத்தி வெட்ட வளவுக்குள்ள போட்டன். தலயில மாம்பூ. தட்டிப் போட்டு, வூட்டுக்குள்ள வந்தன். நேத்தும் ஒருத்தரும் சோறு தரல்ல. சாச்சிர வூட்டயும் ஆக்கல்ல. பசி தலைய சுத்தியது. வகுத்துக்குள்ள புழு நெளிவதைப் போலவும், கோழி சீப்பதை போலவும் இருந்தது.

அவள் விடிய எழும்பினா பசுப்பாலும் முட்டயும் தரவாள். நான் வேணாம் எண்டு அடம்பிடிப்பன். சில நேரம், முதுகுல தட்டி நான் அழுது புலம்ப தீத்தி விடுவாள். அவள்ர சின்ன மேசய பார்க்கிறன். நிறைய புத்தகமும், பேப்பரும் எல்லா புத்தகத்தையும் அடுக்கினேன். பழைய பேப்பரெல்லாம் வேறாய்கட்டினேன். கதிரைக்கு மேல அவள்ர பேனை உடஞ்சி கிடந்தது. இதால அவள் ஒரே எழுதிக் கொண்டே இருப்பாள். ராவக்கி பன்னிரண்டு மணிக்கெல்லாம் எழுதுவாள். அவளுக்கு நிறைய புத்தகம் அனுப்புவாங்க. அவள் எழுதுற நேரம் யாரும் பேசமுடியாது. அழகா எழுதுவாள். நான் பக்கத்தில் நின்று கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருப்பன். இடக்கிட தலய நிமிர்த்தி என்ன பார்த்து சிரித்துக் கொள்வாள். கண்ணாடிக்குள்ள அவள்ர கண்கள் என்ன வடிவா இருக்கும். அந்த கண்ணாடிய நான் எடுத்து ஒருநாள் போட்டுப் பார்த்தன். ஒண்டும் தெரியல்ல. அவள்ர பேனய உடச்சி, வெள்ளப்பேப்பரெல்லாம் பத்த வக்கணும் போல இருக்கும். எனக்கிட்ட பேசாம அப்படி என்ன எழுத்து அவள்ர எழுத்துக்கள்ள, எனக்கு கோவம் வரும்

பேப்பர்ல எல்லாம் அவள்ர பேரு வருமாம். ''உங்கட 'மம்மி'ட கத வந்திரிக்கி. ரொம்ப நல்லம் எண்டு மம்மிகிட்ட சொல்லுங்க.'' றிஸானா டீச்சர் சொல்லுவா. அத கேட்டு அவள் சும்மா சிரித்துக் கொள்வாள். எனக்கும் படிக்க வேண்டும் போல் ஒரு ஆசை. அவள் கிணத்தடிய போன சமயம் பார்த்து எழுதி வச்ச ஒரு கதய படிச்சன். 'ச்சீ. ஒரு மண்ணும் விளங்கல. 'தாமோதரன் சேர்ர கணக்குப் பாடம் போல இருக்கு. எனக்கே விளங்காட்டி பெரிய்ய ஆட்களுக்கு விளங்கவா போகும். அவள்ர கதயில இப்ப எரிச்சல்தான் வந்தது. அவள் வாரத்துக்குள்ள அவள் எழுதி வச்ச அந்த கதப் பேப்பர அடுப்புக்க போட்டு எரிச்சிட்டன்.

குளிச்சிட்டு ரொட்டியத்தின்னுட்டு எழுத இருந்தாள். பரக்கப் பரக்க தேடினாள். பிறகென்ன, நான்தான் திட்டு , வாங்கினேன். ஒருநாள் அவள மேடையில் ஏத்தி என்ட வாப்பாட வாப்பாவுட 'சால்வ'யப் போல அவள்ற முதுகுப்புறமா போர்த்தினாங்க. எனக்கு ஒரே சிரிப்பு. ஆம்புளட சால்வய இவள்ர தோள்ர போடுறாங்கன்னு. அவளப்பத்தி, எழுதுறத பத்தி புகழ்ந்து பேசினாங்க. எனக்கு எரிச்சலாய் வந்தது. யாருக்கும் விளங்காத எழுத்துக்கு என்னத்துக்கு மேடையும், மாலையும். அவள்ர கதி ரயில ஏறி இருந்தன். அவளப்போல எழுத வேண்டும் என்ற ஆசைத்தீ மனசுக்குள்ள படர்ந்தது. பேனைய எடுத்து கொப்பியில எழுதினேன். ஒன்றும் எழுத வரல்ல. என்ட பேரும் இங்கிலிஷ் எழுத்துமாய் கிறுக்கினேன். அவள். எவ்வளவு நேரமா எழுதுவாள். பெரிய பேப்பர்ல நிறைய எழுதுவாளே. எனக்கு அவள் இமயம் போலவும், வானம் போலவும் உயர்ந்து நின்றாள். ஒருநாள் கடிதம் ஒன்று வந்தது. அதை படித்து விட்டு அழுதாள். பின்பு சிரித்தாள். அவள் அழுவதற்குக் காரணம் அந்தக் கடிதம்தானே. அத கிழித்து குப்ப மடுவுக்குள்ள போட்டன். பொறகு அவள் சோறு தின்னவும் இல்ல. எனக்கு மட்டும் தீத்தி விட்டு எதையோ தீவிரமாய் எழுதினாள். எனக்கு தனியப் படுக்க பயமா இருந்தது. அவளயும் கூப்பிட்டன். 'மம்மி இல்லாம இனி படுக்கப் பழகணும் சரியாடா கண்ணா'. எழுந்து வந்து நெற்றியில் கொஞ்சி விட்டு போனாள்.

அவள்ர உடைந்த பேனையையும், மேச லாச்சிக்குள்ள போட்டன். பழைய பேப்பர் கட்ட கடயில குடுத்து ஒரு பார்சல் சோறு வாங்கி வந்தன். பகலக்கிம் ராவக்கிம் தின்னலாம். இண்டக்கி சரியான கச்சான் காத்து. மாங்காப் பிஞ்செல்லாம் கீழ கொட்டிக் கிடந்தன. வேப்ப மரம் பெரிதாய் அசைந்தது. தலைய ஆட்டி ஆட்டி பயங்கரமாய் அசைந்தது. வைரவன் தான் ஆட்டுது போல. அவள்ர ஆவியோ? இந்த பகலயில ஆவி வராது. அப்ப என்னத்துக்கு இப்படி ஆடுது. தொண்டைக்குள் சோறு இறங்க மறுத்தது.

தனிமையாய் இருந்து அவளயே நெனச்சி பைத்தியம் புடிக்கும் போல் இருந்தது. தென்ன மரம் முறிவதைப் போல வளைந்து சுருண்டு வீசியது காத்து. புழுதியும் மண்ணும் கலந்து கண்ணுக்குள்ள ஒரே அரிப்பு. அவள் வேகாத வெய்யிலுக்குள் வேப்ப மரத்தின் கிளைகளில் தொங்குவதான ஒரு பிரேமை கிளர்ந்தது.

ஒரு நாள் நான் அவளின் முகம் பார்த்து இருந்தன். அந்த கடிதம் படிச்சதிலிருந்த என்னவோ சுருக்கா எதையோ எழுதுறாள். கூர்ந்து பார்த்தன். அழுதாள். ''மம்மி ஏன் கத்துறீங்க'' கண்ணாடி கழட்டி கண்ணதுடைச்சி, என்ன பக்கத்துல இழுத்து மூசிமூசின்னு கொஞ்சினாள். தின்

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்: அப்துல் ஹமீத், அருந்ததி ஸ்ரீரங்கநாதன், மதியழகன் பணிப்பாளர் பதவிக்கு இழுபறி!

நாட்டின் ஆட்சியதிகாரம் கைமாறும் போது தலைமைத்துவத்தில் உடனடி மாற்றம் ஏற்படுகின்ற நிறுவனங்களில் ஒன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம். அரசு மாறிய சில தினங்களில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவைக்கு வீ.என்.மதியழகன் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக தேசிய தினசரிகளில் செய்திகள் வெளிவந்தன.

முன்னாள் அறிவிப்பாளரும் வர்த்தக சேவை தமிழ்ப்பிரிவு கட்டுப்பாட்டாளருமான என்.சிவராஜா -அப்பதவியை -அதாவது பதில் பணிப்பாளராக (Acting) கடமை புரிந்து வந்தார்.

மதியழகன் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதும்- கச்சேரி குழம்பிற்று! சேவை நீடிப்பில் இருக்கும் சிவராஜா கதிரையை விட்டுக் கொடுப்பதாக இல்லை.

பி.எச்.அப்துல் ஹமீத் தலைமையிலான வர்த்தக சேவை அறிவிப்பாளர்கள் சிலரும்- இசைக் கட்டுப்பாட்டாளர் அருந்ததி ஸ்ரீரங்கநாதனும் சிவராஜாவுக்கு சார்பான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். மதியழகனை விடவும் சிரேஷ்டமானவர்கள் இருக்கும் போது மதியழகன் அப்பதவியை ஏற்பது பொருத்தமில்லை என்பது இவர்கள் பக்க வாதம். குறிப்பாக அருந்ததி ஸ்ரீரங்கநாதனுக்கு இப்பதவி சேர வேண்டும் என்பதில் இவர்கள் முனைப்பாக இருக்கின்றனர்.

அருந்ததி ஸ்ரீரங்கநாதனுக்கு இப்பதவி வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் சிறிது காலத்துக்கு முன்பு அருந்ததி ஸ்ரீரங்கநாதனுக்கு இப்பதவி போய்ச் சேரக்கூடாது என்பதில் கவனமாக இருந்தவர்களும் இவர்கள்தான் என்றும் அறியக் கிடைக்கிறது. இதன் அடிப்படையில் பார்த்தால் ஹமீட் தலைமையிலான குழுவினர் மதியழகன் பக்கம் சார்ந்திருக்க வேண்டும். நிலைமை அவ்வாறில்லை. அதற்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றை விளங்கிக் கொள்ள சற்று பின்னோக்கிச் சென்று திரும்ப வேண்டியுள்ளது.

1983க்குப் பிறகு ஆலமரமாக நின்றிருந்த தமிழ்ச்சேவை அறுகம்புல்லாக மாறிப் போனது. வர்த்தக சேவை, தேசிய சேவை என இருகலையகங்களில் ஒலிபரப்பான நிகழ்ச்சிகள் ஒரே கலையகத்துக்கு சுருக்கப்பட்டது. இன்றுவரை அதன் தலைவிதி அப்படியே இருந்து வருகிறது.

1983க்கு முன்பு இருந்தபடி சேவைகளை விரிவாக்க அதிகாரிகள் முயற்சி மேற்கொண்டார்களா இல்லையா என்பது கேள்விக்குரிய விடயம். ஆனால் முன்னைய ஆட்சியிலிருந்த தமிழ் - முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதைப் பற்றி அலட்டிக் கொண்டதாக இல்லை. நடைபெற்ற ஒலிபரப்புக்குள் தங்களுக்கு வெளிச்சம் ஏற்படுத்திக் கொள்ள முயற்சித்த சிலரும் கூட இதுபற்றி அக்கறை செலுத்தவில்லை.

வர்த்தக சேவையை அநேக அறிவிப்பாளர்கள் விரும்பினார்கள். விளம்பரங்கள் மூலமான பணவருவாய், பாடல் ஒலிபரப்பில் இலகுவான பிரபல்யம் ஆகியன விரைவில் கிடைப்பது, அந்த விருப்பத்துக்கு காரணமாக இருந்தது. தேசிய சேவைக்குள் செய்திகள் -நேர்முக வர்ணனை -முக்கிய அரச அறிக்கைகள் ஆகியன உள்ளடங்கியிருந்தன. இதனால் தேசிய சேவை அறிவிப்பாளர்களுக்கு ஒரு கௌரவம் இருந்தது.

1983க்குப் பிறகு தேசிய சேவையில் அறிவிப்பாளராக கடமை புரிந்த அநேகர் பகுதிநேர அறிவிப்பாளர்களே. தேசிய சேவையின் அநேக நிகழ்ச்சிகள் மாலை 6.00மணிமுதல் இரவு 11.00மணி வ்ரை ஒலிபரப்பாகி வருகின்றன. இதற்குள் முஸ்லீம் சேவையும் அடங்குகிறது. முஸ்லீம் சேவையில் அறிவிப்பு செய்யும் அநேகர் பகுதி நேர அறிவிப்பாளர்களாக இருக்கின்றனர். சில தயாரிப்பாளர்களும் கூட பகுதிநேர அறிவிப்பாளர்களே.

தமிழ்சேவை நிகழ்ச்சிகள் ஒன்றிணைக்கப்பட்டாலும் கூட அறிவிப்பாளர்கள் ஒன்றிணைக்கப்படவில்லை. சிங்கள வர்த்தக - தேசிய சேவைகள் வெவ்வேறாக இருந்தாலும் அறிவிப்பாளர்கள் இருசேவைகளிலும் கடமை புரிந்து வருகின்றனர் தமிழ்ச் சேவை வர்த்தக பிரிவு அறிவிப்பாளர்கள் தேசிய சேவையில் கடமை புரிவதை தவிர்த்தே வந்திருக்கின்றனர்; வருகின்றனர்.

தேசிய சேவை அறிவிப்பாளர்களுக்கு வர்த்தக ஒலிபரப்பில் முக்கியத்துவம் கிடைப்பதில்லை; குறிப்பாக சில நிகழ்ச்சிகளில் இவர்களுக்கு வாய்ப்பே வழங்கப்படுவதில்லை என்கிறார்கள். ஆனால் தேசிய சேவையோடு உள்ள செய்திகள், வர்ணனை, அரச நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் வர்த்தக சேவை அறிவிப்பாளரான அப்துல் ஹமீத் முதன்மை பெறுகிறார். ஹமீத் திறமையானவர் என்பதில் யாருக்குள்ளும் முரண்பாடு கிடையாது. ஆனால் ஏனையோருக்கு வளர்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை என்று பலர் வருத்தப்படுவதாக தெரிகிறது. தேசிய சேவை அறிவிப்பாளர் ஒருவர் விரக்தியுற்று கல்விச் சேவையில் தற்காலிகமாக இருமாதங்களுக்கு முன்னர் தன்னை இணைத்துக் கொண்டதாகவும் தெரிய வருகிறது.

முன்னாள் ஆட்சியில் செல்வாக்கு மிகப்பெற்றிருந்த அப்துல் ஹமீத் அறிவிப்பாளர் என்பதோடு ஒலிபரப்பு ஒழுங்கு கட்டுப்பாட்டாளராகவும் பதில் கடமை புரிந்து வருகிறார். வாரத்தில் 4 தினங்கள் அறிவிப்பாளராகவும் 2 தினங்கள் மேற்குறித்த பதவியை மேற்கொள்ள ஒதுக்கிக் கொண்டுமுள்ளதாக வேலை அட்டவணை சொல்கிறது. இதற்கு முன்னர் கடமை செய்த ஒலிப்ரப்பு ஒழுங்கு கட்டுப்பாட்டாளர்கள் இப்படி இருகடமை புரிந்ததில்லை என்றும் சொல்லப்படுகிறது. இதேவேளை இந்த நான்கு தினங்கள் ஒலிபரப்பு ஒழுங்கை கவனிக்க நடேசசர்மா நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் நடேசசர்மா ஆறுதினங்களும் அதே கடமையை செய்து வருகிறாரே தவிர ஹமீட் அதனை கவனிக்கும் நாட்களில் அறிவிப்பாளராக கடமையாற்றுவதில்லை. ஒலிபரப்பு ஒழுங்கை கவனிக்கும் காரியாலய கடமை நேரத்தை 8.30 - 4.30 அல்லாமல் 9.30 - 5.30 என தனது வசதிற்கேற்ப ஹமீட் மாற்றிக் கொண்டும் செய்து வருகிறார் என்றும் சொல்லப்படுகிறது.

வேலை அட்டவணையில் முன்னர் பகுதிநேர அறிவிப்பாளர்களின் பெயர்களும் இடம்பெற்று வந்தன. அப்துல்ஹமீத் ஒலிபரப்பு ஒழுங்கை பொறுப்பேற்றதும் 'பெயர்களை இடம் பெறச் செய்தால் நிரந்தரத் தொழிலுக்கு ஒரு காலத்தில் இவர்கள் தொழில் நீதிமன்றங்களுக்கு செல்லக்கூடும்' என்று வெளிப்படையாகவே குறிப்பிட்டு அவற்றை நீக்கியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. ஆனால் அதிகமான பகுதிநேர அறிவிப்பாளர்கள் வேறு இடங்களில் நல்ல தொழில்களில் இருக்கிறார்கள். அவ்வாறு பகுதி நேர அறிவிப்பாளர்கள் செய்தாலும் கூட அதனால் ஹமீத், தனிப்பட்ட முறையில் நஷ்டமடையப் போவதில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்கள். தவிரவும் நிரந்தர அறிவிப்பாளர்கள் தேர்வின் போது பகுதிநேர

**மாயமான்**

அறிவிப்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட காரணங்கள் கொண்டு பலர் மதியழகன் வரவை விரும்புவதாக தெரிகிறது. மதியழகன் கைக்கு அதிகாரம் போகுமிடத்து சகலருக்கும் சகலதும் கிடைக்கும் அல்லது எல்லாம் உரிய ஒழுங்குப் பிரகாரம் நடக்கக்கூடும் என்று கருதுகின்றனர்.

அதேவேளை - ஜானாப் அலவி மௌலானா அவர்கள் தகவல் பிரதி அமைச்சராக பதவிப் பிரமாணம் மேற் கொண்டபின் அப்துல் ஹமீத் அவரைப் பேட்டி கண்டார். அது முஸ்லீம் சேவையில் ஒலிபரப்பப்பட்டது. பாடகர்களையும், நடிகைகளையும் பேட்டி கண்டு தமிழ் வர்த்தக சேவையில் ஒலிபரப்பும் ஹமீத் முஸ்லீம் சேவைக்கென்று திடீரென கரிசனை எடுத்துக் கொண்டமை பற்றிப் பரவலாக பேசப்பட்டது. அதன்பின்னர் கூட்டுத்தாபன மேலிடத்தின் அனுமதியின்றி இவ்வாறான பேட்டிகள் இடம்பெறக்கூடாது என்று பணிப்புரை விடுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஐ.தே.கட்சி தொழிற் சங்கத்தில் இருந்தும் ஹமீத் தனது அங்கத்துவத்தை வாபஸ் பெற்றதாகவும் ஒரு தகவல் வந்துள்ளது.

இதன் விளைவாகவோ என்னவோ மதியழகன் தமிழ்ச் சேவையின் மேலதிக பணிப்பாளராக தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

யார் பணிப்பாளராக இருந்தாலும் நமக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் இந்நாட்டின் தமிழ், முஸ்லீம், மலையக மக்களின் அபிலாஷைகளைச் சரியான முறையில் நிறைவேற்ற அவர்கள் பாடுபட வேண்டும். ஏறக்குறைய 30 லட்சம் மக்களின் பிரதிநிதிகளாக கடமைபுரிபவர்கள் புரிந்துணர்வோடும் உரிமைகளை காக்கும் உற்சாகத்தோடும் செயல்பட வேண்டும். சுயநலவாதிகளாகவும் கதிரையில் ஹாயாக உட்கார்ந்து விட்டு எழுந்து செல்லாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

அவ்வாறு இருப்பார்களா?

## City FM ஏன் இப்படி?

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மற்றும் ஒரு சேவையான City FM சேவையில் 14 1/2 மணித்தியால ஒலிபரப்பு நடந்த போது 4 1/2 மணித்தியாலங்கள் தமிழ் நிகழ்ச்சிகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்தது. படிப்படியாக இந்த நேரம் குறைந்து வந்து முன்னைய ஆட்சியின் அந்திம காலத்தில் 2 மணித்தியாலங்களுக்கு சுருக்கப்பட்டு விட்டது. ஆனால் ஒலிபரப்பு நேரம் 18 1/2 மணித்தியாலங்களாக நீடிக்கப்பட்டுள்ளது. இதில் ஹிந்திப் பாடல்களுக்கு மட்டும் 4 1/2 மணித்தியாலம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஹிந்திப் பாடல்களை ரசிப்பவர்கள் இருக்கலாம். ஆனால் இந்நாட்டின் தேசிய இனங்களான தமிழ், முஸ்லீம், மலையக மக்களை இதன் மூலம் கேவலப்படுத்தியிருக்கிறது கூட்டுத்தாபனம். தகவல்துறைக்கு தடையேதும் கூடாது என்பவர்களுக்கு இது சமர்ப்பணம்.

## முதுகு சொறிய முருங்கைக்காய் எழுத்தாளர்கள்!

யாருடைய ஆட்சி கவிழ்ந்தாலும் கவலைப்படாத ஒரு கூட்டம் நாட்டில் இருக்கிறது. வென்ற கட்சியில் இக்கூட்டம் உடனே ஒட்டிக் கொள்ளும்.

இவர்களுக்குள்ளும் ஒரு விஷேட பிரிவினர் உள்ளனர்.

வென்ற கட்சியில் உள்ள தங்களால் இலகுவில் அணுகக்கூடிய ஓர் உறுப்பினரைப்பற்றி பத்திரிகையில் பக்கம் பக்கமாக எழுதத் துவங்குவார்கள். அந்த எழுத்துக்களின் படி குறிப்பிட்ட உறுப்பினர் கல்வி கற்ற பாடசாலையில் அல்லது அதற்குப் பக்கத்திலுள்ள பாடசாலையில் கல்வி கற்றிருப்பார்கள். அல்லது அடுத்த வகுப்பில் இவர்களும் படித்திருப்பார்கள். அல்லது ஒன்றாக சிறுவயதில் மாங்காய் பறித்திருப்பார்கள். மற்றும் இப்படிப் பல.... எப்படியோ ஒருவாறு உறுப்பினரின் 'எடுபிடி' ஆகிவிடுவார்கள். அதனைக் கொண்டு பத்திரிகைகளிலும் இடம் பிடித்து விடுவார்கள்.

15ம் நூற்றாண்டின் வைத்தியம் ''முருங்கைக்காய் சிறந்ததா - இலை சிறந்ததா'' ' றிஸ்ட்வோச்' -பெயர் வந்தது எப்படி, என்பன போன்ற 48 தடவைகள் பத்திரிகை சஞ்சிகைகளில் பிரசுரமான விடயங்களை யாராவது ஒருவர் பிரதிபண்ணி அனுப்பிவைக்க அதனைத் தொகுத்து 49வது தடவையாக பிரசுரித்து தமது பெயரையும் நடுவே போட்டு விடுவார்கள்.

பிறகென்ன-

அவர்களை விட சிறந்த இலக்கியவாதிகள் இந்த நாட்டில் வேறு யாருமே இல்லை.

அயல் நாடுகளில் நடக்கும் கருத்தரங்குகள், மாநாடுகள் போன்றவற்றில் மிகவும் கரிசனை கொள்வார்கள். எப்படியாவது புகுந்து புறப்பட்டு அங்கு சென்று வடை, தோசை, புரியாணி தின்று முடியுமானால் பொன்னாடை, பொற்கிழி பெற்று உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்களாக நாடு திரும்புவார்கள். பிறகு - பயணக்கதை எழுதி வாசகர்களின் வாழ்க்கையை வெறுக்கச் செய்வார்கள்.

கலாநிதிப்பட்ட ஆய்வுக்கு Subject தேடுபவர்கள் அவர்களைப்பற்றி ஆராய்ந்து எழுதலாம். எழுதும் விடயத்தை புத்தகமாக வெளியிட்டால் கூட ஏராளமாக விற்கும்; தமாஷாக இருக்கும் என்பதால்!

- முல்லா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# "சிரிப்பில் மட்டுமே கண்ணீர் விடுகிற ஒரு காலத்துக்காக..."

## யுக்திய பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவரான சீதா ரஞ்சனி



"ஒரு கலைப்படைப்பினூடாக மக்கள் உளவியல் மனங்களை பாதிக்கச் செய்யலாம். இனப்புரிந்துணர்வை வளர்ப்பதற்கும் கலைஞர்களால் அதிகம் பங்காற்ற முடியும்."

இன்றைய சிங்கள பெண் கவிஞர்களில் முன்னணியில் திகழ்பவர்களில் ஒருவரான சீதா ரஞ்சினியின் ஆர்வ வெளிப்பாடே இது.

சீதாரஞ்சனி; 'யுக்திய' சிங்கள வார இதழின் (சரிநிகரின் சகோதரப் பத்திரிகை) உதவி ஆசிரியராக பணியாற்றி வரும் ஒரு பெண்நிலைவாதி. சிறுகதை, வானொலி நாடகம், கவிதை போன்ற இன்னும் பல இலக்கிய படைப்புகளின் மூலம் முத்திரை பதித்தவர். மனித நேயத்தை வெளிக்கொணரத் துடிக்கும் படைப்பாளி இவர்.

அனுராதபுர மாவட்டத்தில் பிறந்த சீதாரஞ்சினி அனுராதபுர மாவட்டத்தில் 1973இல் நடந்த பாடசாலைகளுக்கிடையிலான இலக்கியப் போட்டியில் கவிதைக்கான முதலிடத்தைப் பெற்றுக்கொண்டவர். அப்போதிருந்து கவிதைத்துறையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் இவர். வானொலியில் கவிதை, சிறுகதை, வானொலி நாடகம், பாட்டு என்பவற்றை தொடர்ச்சியாக எழுதியும் வந்துள்ளார்.

1983 இனக்கலவரத்தின் போது தமிழ் மக்கள் துன்புறுத்தப்பட்டு, கொல்லப்பட்ட சம்பவங்கள் இவரை பெரிதும் பாதித்திருந்தன. இப்பாதிப்பு இவரது படைப்புகளில் வெளிப்பட்டது. இனவாதத்தின் கோரத்தன்மையை, இவர் தொடர்ந்து எதிர்த்து வருகிறார். 83இனக் கலவரத்தின் போது சீதாவால் எழுதப்பட்ட **ஹெட்ட ஹிரு பிபிரெஸ்** (நாளை சூரியன் உதிக்கும்) என்ற கவிதை பலரையும் கவர்ந்த ஒரு கவிதையாகும். இக்கவிதை பின்பு ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டும் பிரசுரமாயிற்று.

80களின் நடுப்பகுதியில் 'சங்கலய' எனும் சிங்கள சஞ்சிகையை 'மோர்ஜ்' இயக்கத்தின் உதவியோடு தொடங்கினார். 'சங்கலயை' சஞ்சிகையானது இனப்பிரச்சினை தொடர்பாக முதன் முதலில் வெளியான இலக்கிய சஞ்சிகையாகும்' தமிழ் மக்கள் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படுவதை எதிர்த்து குரல் கொடுத்தது இது. தமிழ் கவிஞர்களின் படைப்புகள் பலவற்றை மொழியாக்கம் செய்து வெளியிட்டது. இனவாதத்துக்கெதிரான சிங்கள படைப்பாளிகளின் ஆக்கங்களையும் நிறையவே தாங்கி வந்தது சங்கலய.

யாழ்ப்பாண நூலகம் எரிப்பு, நிகழ்வைப் பற்றிய கவிஞர் நு.ஃமானின் புத்தனின் படுகொலை எனும் கவிதையின் மொழியாக்கம் தென்னிலங்கையில் வெளியான போது சிங்கள இனவாதசக்திகளின் மிரட்டல்களுக்கும் மிகுந்த கண்டிப்புக்கும் உள்ளானார் சீதா ரஞ்சினி.

இதே காலப்பகுதியில் 'மோர்ஜ்' இயக்கத்தால் 'யுக்திய', சஞ்சிகையாக வெளியிடப்பட்டுக் கொண்டிருந்த போது · 'சங்கலய' சஞ்சிகையை 'யுக்திய'வின் இலக்கிய பகுதியாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன் பேரில் சீதா யுக்தியவுடன் இணைந்து கொண்டார்.

யுக்தியவில் இணைந்து கொண்ட பின் உண்மைச் சம்பவங்களை பின்னணியாக வைத்து பல தொடர் கதைகளை அவர் யுக்திய இதழ்களில் எழுதினார்.

**'தெல கெரில்லா பட்டயகுகே கதாவ'** (தமிழ் கெரில்லா போராளியொருவனின் கதை) என்ற கதை யுக்தியவில் 14 இதழ்களாக தொடராக வெளியிடப்பட்டது. அதன் சாரம்:

தென்னிலங்கையில் கண்டியில் சிங்களப் பிரதேசமொன்றில் வாழும் குடும்பமொன்று ஒவ்வொரு இனக் கலவரத்தின் போதும் இனவாதிகளால் தாக்கப்படுகிறது. இக்குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன் இனவாத சூழல் மத்தியில் மிகுந்த பாதிப்புக்குள்ளாகிறான். 1956இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்ட பின் சிங்களம் அரசகருமமொழியாக ஆக்கப்பட்டதன் பின் தமிழ் மொழி கற்றால் எதிர்காலம் இல்லை என்ற முடிவில் அச்சிறுவனின் தந்தை சிறுவனை சிங்கள பாடசாலையொன்றில் சேர்க்கிறார். சிங்கள பாடசாலையில் 'தமிழன்' என்பதற்காக அச்சிறுவன் ஏனைய மாணவர்களால் பல இம்சைகளுக்கு உள்ளாகிறான். தெரியாத மொழியில் படிக்க நிர்ப்பந்தித்ததினால் அவனுடைய இயல்பை சீர்குலைக்கிறது.

கற்று முடிந்ததன் பின் தொழில் நிர்ப்பந்தம் காரணமாக யாழ்ப்பாணம் போகிறான். தமிழர் போராட்டம் எழுச்சியுற்று வரும் அந்தச் சூழலில் சிங்களம் மட்டுமே கற்ற இவன் புறக்கணிக்கப்படுகிறான். இருபக்க நெருக்கடிகள் தொடர்கின்றன. தீர்வைத் தேடுகிறான். பல இயக்கங்களோடு இணைகிறான். ஏமாற்றத்துக்குக்குள்ளாகிறான். குழப்பம் மிஞ்சுகிறது. சிங்கள இளைஞர்களோடு தெற்கில் போராட முனைகிறான். அங்கும் அவன் எதிர்பார்த்த தீர்வு இல்லை.

விரக்தி, சோர்வு, ஏமாற்றம், குழப்பம் என்பவற்றின் மத்தியில் இன்னமும் தீர்வைத் தேடிக் கொண்டே இருக்கிறான் எனும் கட்டத்தில் அந்த கதை முடிக்கப்பட்டுள்ளது.

சீதாரஞ்சனி இதுவரை இரு நூல்களை வெளியிட்டுள்ளார். ஒன்று; இனப்பிரச்சினையைப்பற்றி தமிழ் கவிஞர்களால் எழுதப்பட்ட கவிதைகளை மொழி பெயர்த்து தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. **"தோங்காரய"** (எதிரொலி) எனும் பெயர் கொண்ட அந்நூலில் பல சிறந்த தமிழ் கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

சேரன், ஜெயபாலன், இளவாலை விஜயேந்திரன், சோலைக்கிளி, ஊர்வசி, சிவரமணி, செல்வி, ஔவை, மைத்ரேயி, முரளிதரன், ஐங்கரன் உட்பட இன்னும் பல கவிஞர்களது கவிதைகள் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. இவருடைய மொழி பெயர்ப்புகள், உண்மையில் படைப்புக்களே. ஏனெனில் தமிழ் மொழியின் பரிச்சயக் குறைவு காரணமாக சிங்களம் தெரிந்த தமிழ் நண்பர்களின் உதவியுடன் கவிதையில் உட்பொருளைப் புரிந்து கொண்டு மீளப் படைப்பிக்கிறார் இவர்.

இரண்டாவது **'கதாகரன கினிதலு'** (பேசுகின்ற தீம்பிளம்பு) இது சீதாரஞ்சனியால் எழுதப்பட்ட சொந்த கவிதைகளின் தொகுப்பு. இனப்பிரச்சினை, அதன் கோரத்தன்மை, இனவாதம், பெண்கள் உரிமை என்பனவற்றை வெளிப்படுத்தும் அக்கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகள் பல ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து பிரசுரிக்கப் பட்டுள்ளது.

இவரது இலக்கிய படைப்புகளைப் பற்றிய சிங்கள இனவாத சக்திகளிடமிருந்து வரும் நெருக்கடிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன

யுக்திய பத்திரிகையில் இவர் எழுதி வந்த **'சொல்தாதுதுவகே பாபொச்சாரயை** (படைவீரனின் வாக்குமூலம்) எனும் தொடர்கதை; இராணுவத்தில் அதிருப்தியுற்று அதிலிருந்து விலகிய இராணுவவீரன் ஒருவன் 83 கலவரத்திலும், அதற்குப் பின்னரும் நடந்து

→15

*இலகு,*
*எரிந்துபோன இந்தக் கிராமங்களுக்கும்*
*நிலங்களுக்கும்*
*ஒரு விலைகொடுத்து விடுவது*
*இலகு.*

*முன்பைவிடவும்*
*மலிவு விலைக்கு வரப்போகின்ற*
*செங்கற்களாலும் சீமெந்தாலும்*
*சிதைந்துபோய்க் கிடக்கின்ற*
*இந்த வீடுகளை மீளக்கட்டிவிடுவதும்*
*இலகு.*

*காலாதி காலமாய்ப் பெற்ற அனுபவத்தால்*
*கனகச்சிதமாக*
*முதலைக் கண்ணீர் வடிக்க கற்றுக் கொண்டிருப்பதாலும்*
*மொத்தவிலையில்*
*சமாதானத்தைக் கூட*
*வாங்குவதும் விற்பதும் கூட*
*இலகுதான்.*

*ஆனால்...*
*யுத்தத்தின் துயரங்களை முடித்து வைக்கின்ற*
*அனுபவங்களைக்*
*கற்றுக்கொள்வது ஒன்றும்*
*அத்தனை இலகுவானதல்ல!*

*இந்தச் சிதைவுகளைக் கவனமாகப் பாருங்கள்...*
*உடைந்த ஒவ்வொரு செங்கட்டிக் கூடாகவும்*
*அவற்றைப் பாருங்கள்....*
*கட்டவிழ்வதற்கு முன்பாகவே*
*கொய்யப்பட்ட அரும்புகளாய்ப்*
*போய்விட்ட*
*எமது இளஞ்சிறார்களின் உயிர்களும்*
*கோடிக்கணக்கான மனித உயிர்களது*
*சிதைவுகளும்*
*உறைந்து கிடப்பதைக் காணுங்கள்!*

*இத்தனை ஆண்டுகளாய்*
*சிதைக்கப்பட்ட எம் உழைப்புக்கு*
*யாரால் விலை கொடுக்க முடியும்?*

*கைவேறு கால்வேறாக*
*சிதறடிக்கப்பட்டுவிட்ட*
*எம் பிணச் சிதிலங்களை*
*மீள இணைத்து உயிர்ப்பிக்க*
*யாருக்கு முடியும்?*

*மரத்துப் போய் விட்ட எங்கள் மனங்களுக்கும்*
*உணர்வுகட்கும்*
*உயிர்ப்பினை வழங்க*
*எவருக்கு முடியும்?*

*யுத்தமும் மரணமும் நிறைந்த இவ்வுலகில்*
*இன்னும் பிறக்காத*
*எமது குழந்தைகளின் மனங்களை*
*அண்மித்தல் யாருக்கு முடியும்?*

*உயிருடன் பிறந்ததால்*
*பலமுறை இறந்தும் வாழும்*
*பிணங்களாய்*
*இன்னமும் உயிருடன் இருப்பார்*
*நாம் அழுதோம், சிரித்தோம்*
*திரும்பவும் அழுதோம்*
*சிரிப்புக்காக மட்டுமே கண்ணீர் விடுகிற*
*ஒருநாள் வரை*
*எமது நிலை இதுவே.*

*சிரிப்பில் மட்டுமே கண்ணீர் விடுகின்ற*
*ஒரு காலத்துக்காக*
*எம்முடன் கைகோர்க்கும்படி*
*உலகத்தை நாம் கேட்பதற்காக*
*எமது கண்ணீரை நாம்*
*நிறுத்தி விட்டுள்ளோம்....*

www.tamilarangam.net



# பௌஸி - மௌலானா துளிர்விடும் உறவு!

சுகாதார அமைச்சர் பௌஸி அவர்கள் அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார். அவருடன் இம்மாவட்ட எம்.பியும் பிரதியமைச்சருமான ஹிஸ்புல்லா அவர்களும் வருவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், நடந்ததோ வேறு. பௌஸி மட்டுமே வந்தார். அது மட்டுமன்றி, வந்திறங்கியதும் நேராக இம்மாவட்ட ஐ.தே.க. எம்.பியான அலிசாகிர் மௌலானாவின் ஏறாவூரிலுள்ள இல்லத்திற்கே முதலில் சென்றார். அங்கு விருந்துண்ட பின் மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு இருவரும் ஒன்றாகவே சென்றனர்.

அலிசாகிர் மௌலானா முன்னாள் சி.ல.சு.க. ஆதரவாளர். அக்கட்சியின் நீண்ட கால உறுப்பினர். துரதிர்ஷ்டவசமாக பொ.ஐ.மு. அரசு ஆட்சியமைப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பாகவே ஐ.தே.கவில் இணைந்த, தனது முட்டாள்தனத்தை எண்ணி தற்போது வருந்திக் கொண்டிருப்பவர். மீண்டும் தனது முன்னாள் கட்சிக்கு எவ்வாறு தாவுவது என்று தவித்துக் கொண்டிருந்த அவருக்கு பௌசியின் மட்டக்களப்பு விஜயம் தலைகால் புரியாத மகிழ்ச்சி. அதிலும் விஷேடமாக அமைச்சர் தன்னையே தேடி வந்து சந்தித்ததில் இரட்டித்த சந்தோசம். கிடைத்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு ஜமாய்த்து விட்டார் மௌலானா.

பௌஸி கலந்து கொண்ட சகல வைபவங்களிலும் மௌலானாவும் கலந்து கொண்டதால் பச்சையிலிருந்து மௌலானா மீண்டும் நீலத்திற்கு நிறம் மாறும் நேரம் நெருங்கி விட்டதாக பலரும் பேசிக் கொண்டதை கேட்க முடிந்தது.

இவர்களின் அரசியல் கூத்துக்களின் அரங்கேற்றம் ஒரு புறமிருக்க தற்பொழுது இங்கு எழுந்துவரும் ப்ரவலான வினா இதுதான். பௌசியுடன் ஹிஸ்புல்லா வராதது ஏன்?

இது விடயமாக மு.கா.வட்டாரத்தில் விசாரித்துப் பார்த்த போது கிடைத்த தகவல்கள் அதிர்ச்சி தருவனவாக இருந்தன. ஆட்சியின் பங்காளர்கள் எனக் கூறிக்கொள்ளும் மு.கா.வினருக்கு புதிய அரசில் ஏற்பட்டுள்ள முக்கியத்துவம் சி.ல.சு.கட்சியில் ஆரம்ப காலத்திருந்து பாடுபட்டு வரும் பௌஸி, அலவிமௌலானா போன்ற அதன் முஸ்லீம் அங்கத்தவர்களுக்கு வயிற்றெரிச்சலை ஏற்படுத்தி இருக்கிறதாம். இதன் பிரதிபலிப்பாகவே பௌஸி மட்டக்களப்புக்கு விஜயம் செய்த ஹெலிகொப்டரில் ஹிஸ்புல்லாவிற்கு ஆசனம் கொடுக்கப்படவில்லையாம்.

மு.காவின் மற்றுமொரு சாரார் இதே கருத்தை வேறு விதமாகக் கூறினர். அதாவது, பொ.ஐ.மு.யின் முஸ்லீம் அங்கத்தவர்கள், பொறாமை காரணமாக கழுத்தறுப்புகளில் ஈடுபடலாம் என்பதால் அவர்களுடனான உறவில் சற்றுத் தள்ளியே இருக்குமாறும் கவனமாக நடந்து கொள்ளும் படியும் அஷ்ரப் அவர்கள் ஹிஸ்புல்லாவுக்கு கூறிய ஆலோசனையின் பிரகாரம் ஹிஸ்புல்லாவே பௌஸியுடனான மட்டக்களப்பு விஜயத்தைத் தவிர்த்துக் கொண்டாராம்.

இந்தக் கூத்துக்களைப் பார்க்கும் போது ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. தமிழ், முஸ்லீம் மக்களது உரிமைப் போராட்டத்திற்கு முட்டுக் கட்டையாக இருப்பது சிங்கள இனவாதிகள் மட்டுமல்ல தமிழர்களுக்கு தமிழர்களும் முஸ்லீம்களுக்கு முஸ்லீம்களும் தான்.

என்னவென்று சொல்வது எம் விதியை.

- [illegible]

# ஏறாவூரில் இருட்டடி வினையறுக்கும் ஐ.தே.க!

தேர்தல் முடிந்த கையோடல்லாமல் ஒரு மாதகால மிகுந்த நிதானத்தின் பின் ஏறாவூரில் பழி வாங்கும் படலங்கள் ஆரம்பித்திருக்கின்றன.

முகமூடி அணிந்த குழுவொன்று சீருடை அணிந்த பொலிஸாருடன் இணைந்து ஐ.தே.க ஆதரவாளர்களின் வீடுகளுட் புகுந்து தாக்கி வருகின்றனர். பின் இரவுகளில் நன்கு இருட்டிய பிறகே இத்தாக்குதல் சம்பவங்கள் இடம் பெறுகின்றன. அலறல் சத்தங்கள் கேட்டாலும் அச்சம் காரணமாக அயலிலுள்ளவர்கள் எவரும் உதவிக்குச் செல்வதில்லை. தப்பித் தவறி அப்படி யாராவது சென்று விட்டாலும் பொலிஸார் நிற்பதால் எதுவும் செய்ய இயலாத நிலை.

பொதுமக்களின் பீதியை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் இக்குழுவினரால் கடந்த இருவாரங்களாக அநேகமான ஐ.தே.க ஆதரவாளர்கள் தாக்கப்பட்டு விட்டனர்.

கடந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலின் பின் அத்தேர்தலில் அமோக வெற்றி பெற்ற அலிசாகிர் மௌலானாவின் ஐ.தே.க சார்பு சுயேட்சைக்குழு ஏறாவூரில் பலமான தளமில்லாதிருந்த முஸ்லீம் காங்கிரஸினரை கடுமையாக அடித்துத் தாக்கி இருந்தது. பொதுத் தேர்தலுக்கு ஒரு மாதத்துக்கு முன்பும் ஏறாவூரின் கடைத் தெருக்களில் முஸ்லீம் காங்கிரஸினரை ஓட்டோக்களில் வந்த ஐ.தே.கவினர் வீதி வீதியாகத் துரத்தித் துரத்தி அடித்தனர்.

இந்த சம்பவங்களெல்லாம் தற்போது விஸ்வரூபமெடுத்திருக்கின்றன.

ஆளும் தரப்பில் இருக்கும் மு.கா.வையும் அக்கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஈரோஸ் 'இயக்க உறுப்பினர்' பஸீர் சேகு தாவூத்தையும், தேர்தல் காலத்தில் மு.காவினருக்கு தாம் இழைத்த அட்டூழியங்களையும் நினைத்து உயிரைக் கையில் பிடித்தபடி ஒவ்வொரு இரவையும் பீதியுடன் கழித்து வருகின்றனர் ஐ.தே.கவினர்.

நல்லவேளையாக ஐ.தே.கவின் பொம்மை ஜனாதிபதி டீ.பி.யிடமிருந்து இன்னும் பாதுகாப்பு அமைச்சு முற்றாக பறிபோகவில்லை. இந்த 'இருட்டடி' சம்பவங்கள் குறித்து ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினரான அலிசாகிர் மௌலானா ஜனாதிபதியிடம் முறையிட்டதைத் தொடர்ந்து 'காட்டுக் கந்தோ'ரைச் சேர்ந்த ஆயுதம் தாங்கிய சிங்கள இளைஞர்கள் தற்போது ஏறாவூரில் இரவுகளில் காவல் புரிந்து வருகின்றனர்.

இக்காவல் ஏற்பாட்டின்பின் 'இருட்டடி' சம்பவங்கள் குறைந்துள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். எனினும் இச்சம்பவங்கள் ஏற்படுத்திய அசாதாரண பீதியால் இரவுகளில் ஏறாவூர் உறைந்து போய்க் கிடக்கிறது.

# மௌலானா வீட்டுக்கு குண்டெறிந்தவர் யார்?

செப்.30ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு ஐ.தே.கவின் மட்டு.மாவட்ட எம்.பி.அலிசாகிர் மௌலானாவின் ஏறாவூரிலுள்ள இல்லம் இனந் தெரியாதவர்களால் குண்டு வீசித் தாக்கப்பட்டது. இலக்குத் தவறிய இக்குண்டினால் வீட்டின் வெளிச் சுவர்கள் மட்டுமே சேதமடைந்தன. வீட்டிலிருந்தவர்களுக்கு எதுவித பாதிப்புகளும் ஏற்படவில்லை.

ஏறாவூரில் மிகவும் உக்கிரமடைந்து வரும் தேர்தல் பழி வாங்கும் கலாசாரத்தின் மற்றொரு வெளிப்பாடே இது என்று கூறப்படுகிறது.

ஐ.தே.கவிற்கெதிரான சகல நடவடிக்கைகளுக்கும் மு.கா.வினரே காரணம் என்று கருதும் நிலையிருக்கும் ஐ.தே.கவினர் இதுவும் மு.கா.வினரின் வேலையே என்று குற்றஞ் சாட்டுகின்றனர்.

சரிநிகரின் புதிய தொலைபேசி இலக்கம் '593615'

# சபிக்கப்பட்ட யுத்தம்





செம்மண்சாலையில் நடந்து வந்தோம்
ஒரு வீதியின் இருபுறமுமிருந்த
நாங்கள்-
என்றாலும் (மனசுக்குள்)
அவன் நடந்தான் என்றும்,
நான் நடந்தேன் என்றும்
அந்நியப்பட்ட நடை!


உறை பனிக்குளிர் சுடும்
அதிகாலைப் பொழுதிலும்
மனசு
உற்சாகத்தோடு உயரப் பறந்தது
சாலையில்
பூக்களைப் பிரசவித்து
பூவரச மரம் பூமியில் விழுத்திற்று!

எந்த யுத்தமும்
அதனை நிர்ப்பந்திக்க வில்லைத்தான்

பனிப்புகாரினூடே நண்பனின் விழிகள்
பளபளத்தன....
இடுப்புக்குக் கீழே அழுத்திப் பிடிக்கும்
அவனின் அவஸ்தையை
நான் ரசித்தேன்

பஸ் இன்னும் வரவில்லை

சின்ன வளையல் கரங்கள்
முதுகில் மோதி; தோளில் தொட்டு
விழிகள் பாராது செய்யும்
விஷமம்
உள்ளுக்குள் உஷ்ணம் தந்திற்று!



சித்ரா இதில் கெட்டிக்காரிதான்
தந்தியடிக்கும் கிழட்டுக் குரலில்
"முன்னால் போங்கோ" - சொன்ன
கண்டக்டரின் அப்பாவித்தனத்துக்கு
என்றென்றும் நமஸ்காரம்
அன்று தான்
அவள்முகம் அறிமுகமானது.

இந்த அதிகாலையிலும் நாம்
நகர 'டியூட்டரி' தேடி
பஸ்ஸுக்கு ஆலாய்ப் பறப்பதை
எந்த ஆணைக்குழு முன்பாகவும்
கண்டக்டர் சொல்லக்கூடும்

'நம மொகுத்த'வுக்கும்
'கொஹித யன்ன'வுக்கும்
இது சொல்லியும் புரிவதில்லை

நேரந் தப்பி சேவல் கூவிற்று!

சேவல் கூவி, எமக்கு விடிந்ததை
யுத்தம்-
என்றோ மாற்றி விட்டது
இதயம் திடீரென
ஆனந்த அவஸ்தையால்
எம்பிக் குதித்தது.
தூரத்தில், வெளிச்ச வாளேந்தி
பனிப்புகார் அறுத்து வந்த
பஸ்;
சீருடைகள் சுமந்து நிற்காமல் போயிற்று!

வீதிகள் எங்கும்
வெறிச்சோடிக் கிடந்தன
மனம் - கூம்பிற்று!

வழியெங்கும் நாங்கள்
யுத்தத்தை சபித்துக் கொண்டே
நடந்து போனோம்.

யாத்திரிகன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பழைய...

வாகரைப்பகுதிக்கு உணவுப்பொருட்கள் கொண்டு செல்வதில் படையினர் கடும் கெடுபிடிகளை விதித்திருக்கிறார்கள். கொண்டு செல்லப்படும் மருந்துப் பொருட்களை பறித்தெடுக்கிறார்கள். ஒருவர் ஒரு கொத்து அரிசி, அரைக்கிலோ சீனி, ஒரு சோப், இரண்டு தேங்காய் என்பவற்றுக்கு மேல் கொண்டு செல்ல முடியாது.

இதேவேளை வவுணதீவில் உள்ள இராணுவமுகாமை பாரிய அளவில் விஸ்தரிக்க வேலைகள் நடைபெறுகின்றன. முன்பு பொது மக்களுக்காகத் திறந்து விடப்பட்டிருந்த பாதைகள் அனைத்தும் தற்போது மூடப்பட்டுள்ளன. இதனால் ஆனையிறவுப் பாலத்தைக் கடந்து படுவான்கரைக்குள் பிரவேசிக்கும் பொதுமக்களும், விவசாயிகளும் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர். தற்போது விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள காலமாக இருக்கின்றபடியால் இப்பிரதேச விவசாயிகளே பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். விதைப்பதற்காகக் கொண்டு செல்லும் விதை நெல் முழுவதும் சோதனை என்ற பெயரில் நடுவீதியில் கொட்டி சோதனையிடப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் இரவு ஏழு மணிக்குப் பின்பு இப்பிரதேசம் ஒரு யுத்தப் பிரதேசமாகவே மாறி விடுகின்றது. தொடர்ந்து குண்டு வெடிப்பும், வேட்டுச் சத்தங்களுமே கேட்ட வண்ணம் இருக்கின்றன.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களான கெவுளியா மடு, புழுகு நாவி, சாமிமலை ஆகிய இடங்களில் இருந்து பொதுமக்கள் அனைவரும் அடித்து விரட்டப்பட்டு தற்போது இங்கு இராணுவத்தினரின் பெரிய முகாமகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு இவ் இராணுவ முகாம்களைச் சுற்றி தற்போது சிங்கள மக்கள் பெரிய அளவில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வாறு குடியேறியவர்கள் தற்போது நிரந்தர வீடுகளையும் கட்டத் தொடங்கியுள்ளனர். இதற்கான காரணத்தை ஆராய்ந்த போது கட்டிடங்களை நிரந்தரமாகக் கட்டிவிட்டால் சட்டத்தினால் கூட அவர்களை வெளியேற்ற முடியாது என இம்மக்களிடம் இராணுவத்தினர் கூறியதாகத் தெரிய வந்துள்ளது. ஆனால் அரசாங்கமோ அகதிகளைச் சொந்த இடத்தில் குடியேற்றுவது என்று உறுதியாக நிற்கின்றது. அப்படியானால் இக்கிராமங்களில் இருந்த மக்கள் எங்கு குடியமர்த்தப்படுவார்கள் என்பது புரியாமலே உள்ளது. இதில் இக்கிராம மக்களை ஏதாவது ஒரு வசதியுள்ள இடத்தில் குடியேற்றி விட்டு, இவர்கள் ஏற்கனவே இருந்த தற்போது சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ள கிராமங்களை சிங்கள மக்களுக்கே தாரைவார்த்துக் கொடுத்து இவற்றை அம்பாறை மாவட்டத்துடன் இணைத்து விடும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் நம்பகமாகத் தெரியவருகின்றது.

— சத்தியேந்திரா

## காமினி....

போது மட்டுமே, இரு தேசங்களிடையேயான ஐக்கியம் என்ற அடிப்படையில் தான் இப்பிரச்சினை கையாளப்பட வேண்டும் என்ற உண்மை உணரப்படும் போதே இந்தத் தோற்றப்பாடுகள் வெறும் மேலோட்டமான விடயங்களே என்ற தெளிவு பிறக்கும்.

நளின் டி சில்வா போன்ற சிங்கள இனவாதிகள் இப்பிரச்சினையை, இன்றைய அரசிலுள்ளவர்களை விட தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் முழு இலங்கையும் சிங்கள மக்களது என்று சொந்தம் கொண்டாடுவதால், ஒரு தேசிய இனம் கரைந்தழிதல் அவ்வினத்தின் விருப்பின் பெயரில் அன்றி, கட்டாயத்தின் பேரில் சாத்தியமில்லை என்பதை ஏற்றுக் கொள்ள மறுப்பதால், பிரச்சினைக்கு தீர்வாக யுத்தத்தை முன்மொழிகின்றனர். நாட்டை பிளவுபடுத்துவதை ஒரு பாவகரமான காரியம் என்று குரலெழுப்பும் அவர்கள் பிளவை நிறுத்த யுத்தமே வழி என்று பிரேரிக்கின்றனர். ஆனால் யுத்தம் பிளவை மேலும் மேலும் ஆழப்படுத்தியே செல்லும்; ஐக்கியப்பாட்டுக்கான எல்லா வாய்ப்புகளையும் துண்டிக்கும் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை ஐக்கியமல்ல முக்கியம்; அடிமைத்தனத்துக்கு தமிழ் தேசிய இனம் தயாராகுவதே சமாதானத்துக்கு வழி என்று கருதுகிறார்கள்- அவர்கள் நேரடியாக அப்படிக் கூறாவிட்டாலும் அவர்களது அபிப்பிராயத்தின் சாரம் அதுவே.

எனவே, சமாதான முயற்சி வெற்றி பெறுவது என்பது இரு தேசங்களின் ஐக்கியம் என்ற அடிப்படையிலான முயற்சிகளாக அமையாத போது அதை சந்திரிகா என்ன பிரபாகரன் என்ன யார் விரும்பினாலும் அது சமாதான நோக்கத்தை வெற்றிக்கு இட்டுச் செல்லப்போவதில்லை.

எனவே, சமாதான முயற்சி புலிகளுடன் பேசுவதின் பின் செய்யப்பட வேண்டிய ஒன்று என்கிற வழமையான சிந்தனையை ஒதுக்கி விட்டு சிறுபான்மை தேசிய இனங்கள் இந்த நாட்டில் சுயாதிபத்தியத்துடனும் பாதுகாப்புடனும் இருப்பதற்காக, பெரும்பான்மை இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி/ அரசு என்ற முறையில் பொ.ஐ.மு தனது திட்டத்தை அறிவிக்க வேண்டும். அத்திட்டம்

1. தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாக,
2. நாட்டின் அரசதிகாரம் தேசிய இனங்களின் கூட்டரசதிகாரமாக
3. எந்த மதமோ, எந்த மொழியோ எந்த இனமோ அரசியலமைப்பில் விசேடசலுகைகள் அற்ற தாக்கப்படுவதாக
4. நாட்டின் பாதுகாப்புப்படை தேசிய இனங்களின் கூட்டுப்படையாக அமைய வழிவகுக்க வேண்டும்.

அப்போதுதான் புதிய அரசு அரசியல்ரீதியாக முன்னேறிய ஒரு நிலையை - ஐ.தே.கவை விட முன்னேறிய ஒரு நிலையை கொண்டிருக்க முடியும். கடைசியாக, புலிகளுடன் பேசுவதன் முக்கியத்துவத்தை,சற்றேனும் குறைத்து மதிப்பிடாமல், அதன் அவசியத்தை வலியுறுத்தும் அதேநேரம் நான் சொல்ல விரும்புவது இதுதான்:

தேசிய இனங்களின் சமத்துவம் நிலவும் ஒரு நாட்டிலேயே இன முரண்பாடுகள் தவிர்க்கப்படமுடியும். எனவே சமாதானம் காணவிரும்பும் அரசு சிறுபான்மை தேசிய இனங்களை ஐக்கியப்படுத்தும் தனது திட்டத்தை பெரும்பான்மை தேசிய இனத்துள் முன்வைத்து தன் ஆதரவை வென்றெடுக்கவேண்டும். அப்போதான் முழுமையான வெற்றிக்கு வாய்ப்பு கிட்டும்.

இல்லாவிட்டால், 1987ல் சமாதானப்படுத்தப்பட்ட புலிகளும், பிற தமிழ்கட்சிகளும், பிறகும் யுத்தத்தில் குதித்தது போலவே திரும்பவும் ஒரு யுத்தம் தவிர்க்க முடியாமல் போகலாம்.

புலிகளை வென்றெடுப்பது என்பதைவிட இனமுரண்பாட்டுக்கு தீர்வை முன்வைப்பதே நிரந்தரமான வெற்றிக்கு வழிகோலும்.

பொ.ஐ.மு. - ஐ.தே.க என்ற இரு கட்சிகளில் எது சிறந்தது என்ற மக்களின் தீர்மானத்திற்கு இத்தகைய மாற்றங்கள் அவசியமானவை.

அல்லது போனால், சந்திரிகாவா காமினியா என்ற தீர்மானத்திற்கு மக்கள் போக வேண்டி வரும். அத்தகைய நிலைமை, எப்போதும், பொ.ஐ.முயை விட கட்டுக்கோப்பான ஒரு தனிக்கட்சியாக இயங்கும் ஐ.தே.கவுக்கே வாய்ப்பானது.

எதைச் செய்வது என்பதற்கான முடிவை தீர்மானிக்க வேண்டியது இப்போது மக்களல்ல; பொ.ஐ.முவே.

## சிதையுண்ட.....

சேவைகள் சீர்குலைந்துள்ளதால் யாழ்.நகரத்துக்கும், பிரிவுக் கோட்டக் காரியாலயங்களுக்குமிடையிலான தகவல்கள் சைக்கிள்கள் மூலமாகவோ அனுப்பப்படுகின்றன. கொழும்பிலிருந்தும், திருகோணமலையிலிருந்தும் யாழ் மாவட்டத்திலுள்ள காரியாலயங்களுக்கான தொடர்புகள் கப்பலில் வரும் கடிதங்கள் மூலமாக அனுப்பி வைக்கப்படுகின்றன. அடிக்கடி, கடந்து செல்லும் இடங்களில் தடைப்படுவதால் இவை தாமதித்தே கிடைக்கின்றன. இதன் விளைவாக அவசர விடயங்கள் தொடர்பாக உள்ளூர்த் திணைக்களங்கள் துரித நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளன. இதனால் அவசர விடயங்களுக்காகக் கொழும்புக்கும், திருகோணமலைக்கும் அதிகாரிகள் நேரடியாகச் செல்ல நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர்.

**சுற்றாடல் மாசடைதல்**

பல உள்ளூர்த் திணைக்களங்களின் தலைவர்கள், அரசாங்க அதிபர் கொழும்புக்குத் தனது விடயமாகச் செல்லும் போது பல விடயங்களைக் கவனிப்பது தொடர்பாக அவரது (G.A) உதவியைக் கோருவர். மாவட்டத்தில் திணைக்களங்களின் நல்ல இணைப்பு, சீரான செயற்பாடு காரணமாக அரசாங்க அதிபர் தனது அதிக சுமைகளுடனும் இப் பொறுப்புகளைப் பாரமெடுப்பதுண்டு.

இராணுவ நடவடிக்கைகள் நடக்கும் இடங்களிலிருந்தும் யாழ்.நகருக்குள்ளும், புற நகர்க் கிராமங்களுக்குள்ளும் இடம் பெயர்ந்தவர்களின் உட்புகை காரணமாகவும் சன நெருக்கடி தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சாக்கடை கழிவு நீக்கம், நீர் விநியோகம் என்பன பிரச்சினையொன்றைத் தோற்றுவித்துள்ளது. நிதிப் பற்றாக்குறை காரணமாக மிக வரையறுக்கப்பட்ட வசதிகளே வழங்கப்பட்டுள்ளன. போதியளவு கழிவகற்றல் வசதிகள் குறிப்பாகச் சாக்கடை அகற்றல் வசதிகள் இன்மையால் சுற்றாடல் மாசடையக் கூடிய ஆபத்தும் உள்ளது.''

## சந்தோஷத்தில்..

கொண்ட முறையை தான் நடந்து கொண்ட முறையை எண்ணி மனம் வருந்துவதோடு, இராணுவம் எவ்வாறு தமிழ் மக்களுக்கெதிராக நடந்து கொண்டது என்பதை தனது அனுபவமாக விவரிக்கிறான். (இது உண்மைச் சம்பவம்)

இந்த தொடர் வெளியிடப்பட்டுக் கொண்டிருந்த போதே அவருக்கு மிரட்டல்கள் பல வந்துள்ளன. தொலைபேசியின் மூலம் வந்த மிரட்டல் ஒன்று ''சீதாரஞ்சினியை நூறு டயர்கள் போட்டு எரிக்க வேண்டும்'' என மிரட்டியிருக்கிறது.

சீதாரஞ்சனியிடம் பலர் இப்படியும் கேட்டிருக்கிறார்கள். ''ஏன் நீங்கள் தமிழர்களைப்பற்றியே எழுதுகிறீர்கள்?'' அதற்கான பதிலாக அவர் எல்லோரிடமும் கேட்பது.

''ஏன் சிங்களவர்களைப் பற்றியே எழுதுகிறீர்கள் என யாரையும் நீங்கள் கேட்பதில்லை?

## மட்டக்களப்பு...

வுகள் இந்தச் சூழல் ஆய்வில் தங்கியுள்ளன. இத்தகைய முக்கிய ஆய்வை இத்தகைய சர்ச்சைக்குரிய பேராசிரியர் சபாரத்தினத்தின் தலைமையில் உள்ள குழுவிடம் எப்படிக் கொடுக்க நேர்ந்தது என்பது பலராலும் எழுப்பப்படும் ஒரு கேள்வியாகும்.

அரச அதிபர் தலைமையில் கூட்டம் ஒழுங்கு பண்ணியமையும், புகைப்படம் ஒலிப்பதிவு போன்ற நடவடிக்கைகளினால் மக்கள் கருத்துக்களை மறைமுகமாகத் தடுத்ததும் கூட இந்த ஆய்வுக்குழு மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல், சமூக, சூழல் யதார்த்தத்திலிருந்து எவ்வளவு அந்நியப்பட்டு நிற்கிறது என்பதையே காட்டுகிறது.

இந்தப் பின்னணியில்தான் பெரும்பாலான கருத்துரையாளர்கள் இந்த ஆய்வுக் குழுவின் மீது தங்கள் சந்தேகங்களை எழுப்பியுள்ளனர்.

## வேப்பமரம்....

ளாம கிடந்த மாட்டுக்கு தவுட்ட வச்சா குடிக்கிற வேகம் போல என்ட உடம்பெல்லாம் தடவி கொஞ்சி அழுதாள். ''மம்மி.. மம்மி..ஏன் மம்மி..என் வாயப் பொத்தி ஒவெண்டு சத்தம் போட்டு கத்தினாள். மாமா மௌத்தாளவுடன் மாமி அழுதாவே அப்படித்தான் அவளும் குலுங்கி கத்தினாள். ''கண்ணா மம்மி இல்லாட்டி நீ அழக்கூடாது, சாச்சி சோறு தரும், உடுப்பு தரும், இண்டைக்கி மம்மி.... ஒண்ணுமில்லடா கண்ணா'' எனக்கு சரியான கோவம் தான். இவள் இண்டக்கி எங்கயோ போப்பறாள். என்னய வுட்டுட்டும். நித்திர கொள்ளாம கிடக்கணும்.

அவள்ர கதைய பிடிக்கலன்னு யாரோ கொல்லுவேன்னு கடிதம் போட்டானுகளாம். இவள் என்னத் துக்கு மத்த ஆக்கள தாக்கி எழுதணும், நான் இப்ப யோசிச்சன். அண்டக்கி யாரோ வந்து கதவ தட்டி, கூப்பிட்டாங்க, இவள் தஸ்பீமாலய உருட்டி என்னவோ ஓதிக் கொண்டு கதவ திறந்தாள். ''வா வெளிய'' எண்டு ஒரு குரல் கேட்டுது. அவள் எனக்கு ''இச்'' தந்திட்டு போனாள்.

நான் பேசாம எழும்பி ஜன்னலைத் துறந்து பார்த்தன். வேப்ப மரத்தடியில அவள்ர உருவம் ஆடியது. வைரவனுக்கு சுருட்டு வைக்கலன்னு கூட்டிட்டு போயிட்டு போல. அவள்ர பக்கத்துல ஆமியப் போலவும், பொலிஸப் போலவும் இரண்டு பேரு. என்னமோ சத்தம் போட்டு பேசுறாப்போல. அவள் அவனுகள பார்த்து கைவீசி பேசினாள். அவளுக்கு ஒன்டும் வராது. வைரவன் அடிக்கும்.

நான் கனநேரமா நின்டன். வாறாப்போல இல்ல. இருட்டாய் இருந்தது. அவளின் வெள்ளப் புடவை மண்மேல கிடக்குறது தெரிஞ்சது. வந்த ஆக்களை காணவும் இல்லை. எனக்கு கண்ண சொருகியது. விடிஞ்சவுடன் அவளப் பார்த்தன். வேப்பமரத்தின் வேரில் தலையை கெழித்து பழிச்சிக் காட்டுறதைப் போல கிடந்தாள். இன்னும் எழும்பலயா. ''மம்மி..மம்மி எழும்பன்''. மூத்தம்மாவிட வெத்தில வாயால வடியிற சாறப் போல அவள்ர வாயெல்லாம் ஒரே சிவப்பாய். எனக்கு பயமாய் கத்துறத்துக்கும் தொண்டை வரமால் இருந்தது. அவள்ர வயிரவன் தான் கொன்னுட்டு, என்னயும் கொல்லுமோ. அந்த மரத்தில் சிவப்பாய் எழுதி ஒட்டியிருந்தது, ''நீ எழுதிய சமூக நாடகத்திற்கான நோபல் பரிசு உன்னுயிர்'' எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. எழுதினா நானும் என்ட மம்மியைப் போல வைரவனால் கொல்லப்படுவனா? வேப்பமரத்தப் பார்த்தன். அது இன்னும் ஊழித் தாண்டவம் ஆடி வீசியது. வேப்பங் கொட்டையும், பழமுமாய் உதிர்ந்தன. நான் கோடரியை எடுத்தன். அந்த வைரவன்ட தலய இன்டக்கி புளக்கணும். ஆவேசமாய் நடந்தன். கோடரியை ஓங்கிய போது அதன் வேரில் அவள் வாய் நிறைய சிவப்பாய் தெரிந்தாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மட்டக்களப்பு ப.நோ.கூ.ச:

# பிரேத வாகனக் கொள்வனவிலும் மோசடி!

மட்டு. ப.நோ.கூ. சங்கத்தில் இடம்பெற்று வந்த வீண்விரயம், ஊழல், மோசடி என்பன அம்பலத்துக்கு வந்துள்ளன. பிரேத வாகனம் கொள்வனவில் எழுபத்தையாயிரம் ரூபாவும், ஒவ்வொரு பிரேதப் பெட்டிக் கொள்வனவிலும் 500/= வீதமும் மோசடி செய்யப்பட்டுள்ளதாக எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இது பற்றிய விபரம் வருமாறு.

பத்மநாதன் ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராவார். மட்டக்களப்பில் நிலை கொண்டிருக்கிற படையினருடன் அன்னியோன்னிய தொடர்புடையவர். ஐ.தே.க. வட்டாரத்தின் முக்கிய புள்ளியாக இருப்பதால் இவருடன் பகைத்துக் கொள்ள எவரும் விரும்புவதில்லை. ஐ.தே.கவின் பலத்துடன் மட்டக்களப்பு பல் நோக்கு கூட்டுறவு சங்கத்தின் பொதுச் சபையால் 28-1-94இல் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். தெரிவு செய்யப்பட்ட நாளிலிருந்து ஐந்தாவது மாதம் வரையிலான காலத்திற்குள் ம.ப.நோ.கூ.சங்கம் 30 லட்ச ரூபாய் நஷ்டமடைந்துள்ளது.

இவர் தெரிவு செய்யப்பட்ட போது சங்கத்தின் 50 லட்சம் பெறுமதியான நுகர்ச்சிப் பொருட்கள் ஒப்படைக்கப்பட்ட போதும் ஐந்து மாதத்தின் பிறகு கணக்கெடுப்பின் போது 7 லட்சம் பெறுமதியான பொருட்கள் வீண் விரயம் செய்யப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி இவர் பதவி ஏற்கும் போது 2 லட்சம் ரூபா மேலதிகப் பற்றாக இருந்திருக்கிறது. ஐந்து மாதங்களின் பின் (30.6.94) கணக்கெடுப்பின் போது 12 லட்சம் மேலதிகப் பற்றாக பாவிக்கப்பட்டுள்ளது. இதற்கான மேலதிக நிதி 10 லட்சத்தையும் வங்கியிலிருந்து பெறப்பட்டுள்ளது.

சங்கத்துக்கு சொந்தமான மூன்று பஸ்களில், 61-3451 இலக்கம் கொண்ட பஸ் கவனயீனமுடைய சீர்கெட்ட நிர்வாகத்தின் காரணமாக 13 லட்ச ரூபாவுக்கு மேல் நட்டமடைந்துள்ளது. அதற்கான பிரதான காரணம் பிரதேச செயலாளரால் ஒழுங்காற்று விசாரணை நடத்தப்பட்டு வரும் சாரதியொருவரை தனக்கு வேண்டியவர் என்பதற்காக பஸ்சாரதியாக நியமித்ததும் பஸ் விபத்துக்குள்ளானதும் தான் எனத் தெரிய வருகிறது.

இதனைவிட தனது நடவடிக்கைகளுக்கு சார்பாக இல்லாத ஒரே காரணத்தினால் பொது முகாமையாளர் சுந்தரலிங்கத்தை பதவி இடைநிறுத்தம் செய்ததுமில்லாமல் தனக்கு இசைந்து போகக்கூடிய நால்வரை நியமித்துள்ளார்.

அந்திமகால சேவை ஆலோசகராக தவராஜா என்பவரையும் பஸ் போக்குவரத்து ஆலோசகராக கே.வாசுதேவன் என்பவரையும் ஒழுங்காற்று விசாரணை ஆலோசகராக சிவலிங்கம் என்பவரையும் பொது முகாமையாளராக எஸ்.செளந்தரராஜன் என்பவரையும் நியமித்துள்ளார். இத்தனை காலம் ஒருவர் செய்து வந்த வேலையை நால்வரை நியமித்து செய்து வருவதனால் அவர்களுக்கான சம்பளம் வீண் விரயமே என கூட்டுறவுச் சங்கத்தை சேர்ந்த பலர் முணுமுணுக்கின்றனர்.

முன்னர் கூட்டுறவு சங்கத்துக்கான பிரேதப் பெட்டிகள் 1250/= வீதம்



கொள்வனவு செய்யப்பட்டு வந்தது. ஆனால் இவரால் நியமிக்கப்பட்ட தவராஜா என்பவரை ஒரு பிரதேப் பெட்டிக்கு 350/= தொடக்கம் 500/= வரை தங்களுக்கு கொமிஷன் வைத்து 1600/= தொடக்கம் 1750/= வரையான விலையிட்டு கொள்வனவு செய்துள்ளனர்.

பத்மநாதனின் சகபாடியும் அந்திம கால சேவை ஆலோசகருமான தவராஜா என்பவரால் 1600/=க்கு கொள்வனவு செய்யப்பட்ட 'கட்ட பெட்டி'யை 1250/=க்கு தான் கொள்வனவு செய்ததாக ப.நோ.கூ.ச.வர்த்தக முகாமையாளர் அருளானந்தம் சுட்டிக் காட்டியிருந்தார்.

இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் (250,000) ரூபாவுக்கு கொள்வனவு செய்துள்ளார். இந்த மேலதிக 75,000/= ஊழலுக்கு துணைபுரிந்த தரகர் பொன்சேகாவுக்கு 10,000 ரூபா தரகுக்கூலி தருவதாக கூறி இறுதி வரையும் ஏமாற்றி விட்டு முழுதையும் சுருட்டிக் கொண்டுள்ளனர்.

இந்த ஊழல் விவகாரத்தை கேள்விப்பட்ட ஜெயரட்ன புளோரிட்ஸ் உரிமையாளர், தவராஜாவையும் தலைவர் பத்மநாதனையும் அழைத்து நீங்கள் செய்வதையும் செய்து விட்டு எங்களது ஊழியர்கள் மேல் பழியேற்பட வைத்துள்ளீர்கள் என்று பேசி கடுமையாக எச்சரித்ததாகவும் தெரியவருகிறது. இவர் இச்சம்பவத்தை வெளிக்கொனர்வதற்க்ரக தான் சாட்சியமளிக்கவும் தயார் எனவும் தற்போது தெரிவித்துள்ளராம்.

பொது முகாமையாளர் எஸ்.சுந்தரலிங்கத்தை பதவியிலிருந்துஇடைநீக்கம் செய்ததையிட்டு அவ்வாறு இடைநீக்கம் செய்யப்பட்டது முறைகேடானது என கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு (Co-Operative Employees Commission) தனது 04.08.94 திகதியிட்ட கடிதத்தின் மூலம் பத்மநாதனுக்கு எச்சரிக்கை

**என். சரவணன்**

இதைவிட பிரேத சேவை வாகனக் கொள்வனவிலும் தவராஜாவின் தலைமையில் எழுபத்தையாயிரம் (75,000/=) ஏப்பம் விட்டுள்ள விடயமும் அம்பலமாகியுள்ளது. கொழும்பு டீன்ஸ் வீதியிலுள்ள "ஜெயரத்ன புளோரிட்ஸ்" இல் கடமை புரியும் பொன்சேகா எனும் நபரே அவ் ஊழலுக்கு தரகராக இருந்திருக்கிறார். இந்த 'ஜெயரத்ன புளோரிட்ஸ்' ஒரு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியொருவரின் கடையாகும்.

குறிப்பிட்ட அந்த வாகனம் ஒரு லட்சத்து எழுபத்தையாயிரத்துக்கு ஏற்கனவே விலை பேசப்பட்டிருந்த போதும் தவராஜா என்பவர்

செய்துள்ளது என்ற போதும் பத்மநாதனின் திருவிளையாடல்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு அவரது அரசியல் செல்வாக்கு தடையாக இருந்து வந்தது.

இது எல்லாவற்றிக்கும் மேல் இவர் 94 ஜனவரியில் கூட்டுறவுச் சங்க தலைவராக தெரிவு செய்யப்பட்ட அதேநேரம் 94 மார்ச்சில் நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மாநகர சபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 1992 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்க திருத்தச் சட்டத்தின் படி இப்படி முக்கிய பதவிகள் வகிப்பது சட்டத்துக்கு முரணானது.

## புளியாவத்தை வேலைநிறுத்தம்:

# "இனி நாங்க விழிச்சுக்கிட்டோம்...!"

செப்.23 ஆம் திகதி முதல் புளியாவத்தை பலிங்போனி தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 52 தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வுகோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 84ம் ஆண்டு உயர்த்தப்பட்ட சமபள உயர்வும் மாத கொடுப்பனவும் இதுவரை வழங்கப்படவில்லை. இவற்றை வழங்கக் கோரியே இத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். 1972இல் இருந்து தனியார் இருவருக்குச் சொந்தமான 50 ஏக்கர் பரப்பளவு உள்ள இச்சிறிய தோட்டம் 52 தொழிலாளர்களையும் 10 சிறுவர்களையும் 47 கீழ் வகுப்பு மாணவர்களையும் இரண்டு உயர் வகுப்பு மாணவர்களையும் கொண்டுள்ளது.

இத்தோட்ட முதலாளிகள் இருவரும் தொழிலாளர்களின் நலன்கள் தொடர்பாக எந்த அக்கறையும் காட்டியதாக தெரியவில்லை. ஏறத்தாழ 13 வருடங்களாக அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற கைவிடப்பட்ட தோட்டப்பகுதியாகவே இது விளங்கிவருகிறது.

குடிநீர்வசதி, மலசலகூட வசதி, சிறுவர் பராமரிப்பு நிலையம். சலூன், சுகாதார, மருத்துவ வசதிகள் போன்ற அத்தியாவசிய வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. ஏனைய தோட்டங்களில் கொடுக்கப்படும் வருடாந்தப் படியும் கொடுக்கப்படுவது இல்லை. கால்நடை வளர்ப்புப் பட்டிகளோ, தற்காலிக கொட்டில்களோ அமைக்க முடியாது. குடியிருப்புலயன்கள் இன்றுவரை திருத்தப்படவில்லை.

ஆக, ஒரு அடிமை சமூகம் போல் இவர்கள் நடத்தப்பட்டு வருகின்றார்கள். இதேபோல் இப்பகுதியில் சமுத்திரவள்ளி, வனராஜா (தனியார் பிரிவு) நியூட்டன் முதலான தோட்டங்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனிப்பட்ட முதலாளிகளுக்கு சொந்தமான தோட்டத்தில் ரூபா 62 நாள் ஒன்றுக்கான சம்பளமாக வழங்கப்படுகிறது. ஏனைய கம்பனித் தோட்டங்களில் இது ரூபா 72 என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தோட்டத்தில் காணப்படும் 2 ஏக்கர் புல்நிலத்தில் புல் அறுக்கவும், மாடு வளர்க்க கொட்டில் அமைக்கவும் உரிமை கேட்டு பல வருடங்களாக போராடியும் பயன் இல்லாததால் செப்.30இல் தாமாக கணபதி, காளிமுத்து கதிரேசன் ஆகிய தொழிலாளர்கள் தற்காலிக கொட்டில்களை அமைத்தார்கள் இதுசம்பந்தமாக பலவந்தமாக காணி பிடித்து விட்டார்கள் என தோட்ட கணக்கர் கருணாரட்ன, நோர்வூட் பொலீசில் முறையிட்டதைத் தொடர்ந்து இத் தொழிலாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் எல்லோரும் இ.தொ.காவின் உறுப்பினர்கள். இதுபற்றி "தொண்டமான் வீடு சொந்தம், வீட்டு தோட்டம் சொந்தம் என்கிறாரே யாருக்கு ஐயா சொந்தம்? ஒன்றும் அறியாத எங்களை எவ்வளவு காலத்திற்கு ஏமாத்துவீங்க? இனி நாங்க விழிச்சுகிட்டோம்" என்கிறார் தோட்ட கமிட்டி தலைவர் சோலமுத்து.

"நாங்க பேர்பதிஞ்சு நாள் முதலாய் இதே நிலையிலதான் வாழ்ந்துகிட்டு இருக்கோம். வோட்டு வாங்க மட்டும் ஓடிவாற சங்க தலைவர்கள், அரசியல் வாதிகள் எங்களுக்கு ஏதும் பண்ணலையே." என்றும் அவர் தொடர்ந்து கூறினார்.


# சுதந்திர இலக்கிய விழா 1994

**மூன்றாவது சுதந்திர இலக்கிய விழாவை முன்னிட்டு ஆக்க இலக்கியப் படைப்பாளிகளுக்கு விருது வழங்கல். விருது வழங்கல் இரு பிரிவுகளாக வகுக்ககப்பட்டுள்ளது.**

1. 01.01.1993இல் இருந்து 31.12.1993 வரையான காலப்பகுதிகளில், கவிதை, சிறுகதை, நாவல், மொழிபெயர்ப்பு இலக்கியம் ஆகிய துறைகளில் வெளியாகிய நூல்களை விழாத் தெரிவுக்குழுவே சேகரித்து சிறந்தவற்றுக்கு விருது வழங்கல்.

குறிப்பு: தவறுகளைத் தவிர்க்குமுகமாக் படைப்பாளிகள் தங்களது படைப்புகள் பற்றிய விபரங்களை அமைப்புக் குழுவிற்குத் தந்துதவுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

2. சிறுகதை, கவிதைத் துறைகளில் புதிய எழுத்தாளர்களுக்கான போட்டியொன்றை நடாத்தி சிறந்த படைப்புகளுக்கு பரிசு வழங்கல்.

போட்டி முடிவுத்திகதி: 31.11.94

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப் படிவங்களுக்கும் சுயமுகவரியிடப்பட்டு , முத்திரை ஒட்டப்பட்டநீண்ட கடித உறை ஒன்றை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

*அமைப்பு குழு,*
*சுதந்திர இலக்கிய விழா -1994*
*இல.61, பழைய கொட்டாவ வீதி*
*மிரிஹான*
*நுகேகொட*
*தொலைபேசி: 811927*


சரிநிகர் (இரு வாரங்களுக்கொருமுறை) இதழ் இல.18/2 அலோசாலை கொழும்பு 03. இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன். 11/10/1994
அச்சுப்பதிவு: 334காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்